Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3175)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 08 ஞாயிற்றுக்கிழமை (24.11.2013) பக்கங்கள் 20 ஓசை – 055



# பிரித்தானியாவிற்கு எதிராகவே விசாரணை நடத்த வேண்டும்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சர்வ தேச விசாரணை நடத்தப்படுவதனை விடுத்து பிரித்தானியாவிற்கெதிராகவே முதலில் விசாரணை நடத்தப்படவேண்டுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சரும், மனித உரிமைகள் தொடர்பான இலங்கையின் விசேட பிரதிநிதியுமான மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கத்துவ மாற்றம் ஏற்பட்டுள்ளபோதும் சீனா, அல்ஜீரியா போன்ற இலங்கைக்கு ஆதரவான நாடுகள் இன்னமும் தமது அங்கத்துவத்தைக் கொண்டுள்ளன.

அத்துடன் கடந்த காலங்களைப் போலவே எதிர்காலத்திலும் இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் கொண்டு வரப்படும்.

எனினும் எவ்வாறான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டாலும், அதற்கு தகுந்த பதில்களை வழங்க அரசாங்கம் தயாராகவே உள்ளது.

அயர்லாந்தில் இடம்பெற்ற யுத்தத்தில் பிரித்தானிய இராணுவம் நடந்து கொண்ட விடயங்களை பி.பி.சி. அண்மையில் வெளியிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் பிரித்தானியாவுக்கு எதிராகவே முதலில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அதேபோன்று ஈராக்கில் பிரித்தானிய இராணுவம் செயற்பட்ட விதம் தொடர்பிலான சில்கோட் அறிக்கை தயாரிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதும், அது இன்னும் ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப் படவில்லை.

இந்த அறிக்கை முன்வைக்கப்பட்டால், அது தொடர்பில்

19 ஆம் பக்கம் பார்க்க

## இளம் பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் மடத்தடி பகுதியில் இளம் பெண்ணொருவரின் சடலம் நேற்றுக் காலை கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த சி.சிவாஜினி (வயது - 34) என்பரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இதுகுறித்து தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் குறித்த இளம் பெண்ணை காணவில்லையென தேடிய போது 8.30 மணியளவில் வீட்டிற்கு அண்மையிலுள்ள கிணற்றில் சடலமாக மிதந்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## சிவிலுடையில் வந்த பொலிஸார் பெண்கள் மீது கோரத் தாக்குதல்

### கரவெட்டி இராசகிராமத்தில் சம்பவம்

(வடமராட்சி)

கரவெட்டி இராசகிராமம் பகுதியில் சிவில் உடையில் வந்த நெல்லியடி பொலிஸார் வீடு புகுந்து நடத்திய மோசமான தாக்குதலில் தாய், மகள் மற்றும் அயலவரென 3 பெண்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 5.45 மணியளவில் சிவில் உடையில் வந்த பொலிஸாரே சந்தேகநபரொருவரை ஒளித்துவைத்திருந்ததாகத் தெரிவித்து குறித்த வீட்டிலிருந்த பெண்கள் மீது தடிகள், பொல்லுகளால் மோசமாக தாக்குதல் மேற்கொண்டதுடன் கதிரைகள் மற்றும் அவர்களது குடிசை

19 ஆம் பக்கம் பார்க்க

# ஜெனிவா மனித உரிமை மாநாடு இலங்கைக்கு சவாலாக அமையும்

## ஆங்கில நாளிதழ் ஐலன்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கூட்டத் தொடர் இலங்கைக்கு கடுமையானதாக அமையுமென அதிகாரிகளும் இராஜதந்திர வட்டாரங்களும் தெரிவித்துள்ளதாக ஐலன்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு பிரித்தானியா மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட நிலையில், வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை ஜெனிவாவில் மேற்கொள்ளவுள்ளதாக பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் எச்சரித்துள்ளார்.

இதனால், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கை முன்னெப்போதும் எதிர்கொண்டிருக்காத நெருக்கடியை தற்போது எதிர்கொண்டுள்ளதாக, இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

47 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், 14 உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்ய கடந்த 11 ஆம் திகதி நடந்த தேர்தலில், பிரித்தானியாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அல்ஜீரியா, சீனா, கியூபா, வியட்நாம், ரஷ்யா, சவுதி அரேபியா, மசிடோனியா, மாலைதீவு, மெக்சிகோ, மொராக்கோ, பிரான்ஸ், நமீபியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நாடுகள் வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் வரும் மூன்று ஆண்டுகளுக்கு பேரவையில் அங்கம் வகிக்கத் தகுதி பெற்றுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஒரு உறுப்பு நாடான, இந்தியா கூட, இலங்கைக்கு எதிரான வகையில், செயற்படும் என்றும் அந்த இராஜதந்திர வட்டாரங்கள் கூறியுள்ளன.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக, அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## கவிஞர் ஜெயபாலன் கைது; அதிர்ச்சியில் அமைச்சர் ஹக்கீம்



(கொழும்பு)

இலங்கையின் நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் பாதகமான கருத்துக்களை கவிஞர் ஜெயபாலன் வெளியிடவில்லை என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஈழத்துக் கவிஞரும் தென்னிந்திய நடிகருமான வா.ஐ.ச ஜெயபாலன் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே ரவூப் ஹக்கீம் இவ்வாறு குறிப்பிட்டார்.

வா.ஐ.ச ஜெயபாலனின் கைது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும்

19 ஆம் பக்கம் பார்க்க

## உணவுப் பொருட்களின் விலைகள் நேற்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ஒரு சில வரி திருத்தங்கள் நேற்று முதல் அமுலுக்குவந்துள்ளன.

இதனால் சீனி, பருப்பு, நெத்தலி, வெங்காயம் உள்ளிட்ட இறக்குமதி உணவுப் பொருட்கள் பலவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்கள் மீதான விசேட தீர்வை நேற்று முதல் நடைமுறைக்குவந்துள்ளது.

இதற்கமைய இறக்குமதி செய்யப்பட்ட சீனி ஒரு கிலோகிராமுக்கான தீர்வை 30 ரூபா வரையும் ஒரு கிலோகிராம் நெத்தலிக்கான தீர்வை

19 ஆம் பக்கம் பார்க்க

05



எச்சரிக்கை

08




சரிந்தது

18



நிர்ணயம்

## அதிகாரத்தை தவறான வகையில் பிரயோகிக்கிறார் சட்ட மா அதிபர்



### சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டு

(லண்டன்)

இலங்கையில் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்படும் போதோ விடுதலை அளிக்கப்படும்போதோ சட்டமா அதிபர் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்திவருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

நாட்டின் சட்டம், ஒழுங்கு தொடர்பாக ஆராயும் பொருட்டு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நியமித்துள்ள குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

எட்டு கிலோகிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் அண்மையில் கொழும்பு மேல்நீதிமன்றத்தைக் கோரியிருந்ததாக சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

அதேபோல, கடந்த காலங்களில் பல்வேறு குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டிருந்த சந்தேகநபர்களை வழக்கு விசாரணைகளின்றி விடுதலை செய்வதற்கும் சட்டமா அதிபர் நடவடிக்கைகள் எடுத்திருந்தார் என்றும், எனினும் அதற்கான காரணங்களை அவர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கவில்லை என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபரின் இவ்வாறான

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு ஆயுத விற்பனை; விளக்கவேண்டும் கமரூன்

### பிரிட்டன் ஆயுத ஏற்றுமதி நிறுவனம் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கைக்கு ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் விளக்கமளிக்க வேண்டும் என பிரித்தானிய ஆயுத ஏற்றுமதி கட்டுப்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இயந்திரத் துப்பாக்கிகளும்

19 ஆம் பக்கம் பார்க்க

## பழுதடைந்த நிலையில் விடுதிக்கான லிப்ற்

யாழ்.போதனா வைத்தியசாலையின் 27 ஆம் இலக்க முதலாம் மாடி விடுதிக்கான லிப்ற் தொடர்ந்து பழுதடைந்த நிலையிலேயே காணப்படுவதன் காரணமாக அவ் விடுதியில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளிகள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த லிப்ற் கடந்த ஒருவாரத்திற்கு மேலாக சேதமடைந்து போயுள்ள நிலையில் அதனைத் திருத்துவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் உடனடியாக எடுத்த நடவடிக்கைகள் பலனளிக்காத நிலையில் தொடர்ந்து முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பில் இருந்து தொழில்நுட்பவியலாளர்கள் வரவழைக்கப்பட்டு பரீட்சித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)


DAMRO

# SALES ASSISTANTS

(Trainee)

Jaffna Showroom

We seek to recruit dynamic & self motivated individuals for the above showroom, who are expected to welcome, treat & fulfill the needs of our customers to their entire satisfaction.

APPLICANTS SHOULD :

- be males below 26 years of age.
- be permanent residents within 20km from the above showroom.
- have G.C.E (A/L) qualification.
- have a flair for customer relations.

Total earnings will not be less than Rs. 25,000/- p.m. after the training period.

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact number & contact details of two non-related referees to reach us within ten days of this advertisement.

The Human Resources Manager,
DAMRO
No: 361, Kandy Road, Nittambuwa.
E-mail: hrm@damro.lk

(R/326)



## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 207 | திகதி 2013.11.22 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

08 18 20 54 A

பரிசுத் தொகை ரூபா. 12,267,580/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| [illegible] | 50,000/- | 06 | 300,000/- |
| [illegible] | 1,000/- | 214 | 214,000/- |
| [illegible] | 1,000/- | 361 | 361,000/- |
| [illegible] | 60/- | 9341 | 560,460/- |
| [illegible] | 40/- | 4955 | 198,200/- |
| [illegible] | 20/- | 122755 | 2,455,100/- |
| [illegible] | 20/- | 17808 | 356,160/- |
| [illegible] | 12,267,580/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,444,920/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 12,507,820/-

2013.11.26ம் திகதி செவ்வாய்க்கிழமை
அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது
மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3186)


# கணனி மயமாக்கப்படுகிறது

# விவாக, பிறப்பு,இறப்பு பதிவு

விவாக,பிறப்பு,இறப்பு பதிவு நடவடிக்கைகளும் பிரதி வழங்கும் நடவடிக்கைகளும் கணனி மயப்படுதலின் கீழ் படிவ மாற்ற நடைமுறையானது வடக்கிலும் டிசம்பர் முதல் அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவா ஐயர் தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறை குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விவாகப், பிறப்பு, இறப்புப் பதிவு நடவடிக்கைகளும் பிரதி வழங்கும் நடவடிக்கைகளும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு அமைவாக படிப்படியாக முன்னெடுக்கப்படுகின்றது அதற்கமைய ஏற்கனவே பதியப்புட்ட விவாக, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் ஸ்கான் பணணப்பட்டு கணினி மூலம் சான்றிதல் வழங்கும் நடவடிக்கைள் நாட்டின் பல பாகங்களிலும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன ஒரு பிரதேச செயலகம மூலம் அம் மாவட்டத்தில் 1960 ஆம் ஆண்டின் பின் பிறந்தவர்களது சான்றிதழ்களை பெறமுடியும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும அம் மாவட்ட அரச அதிபர்களினது ஊக்கத்தினாலும் அரசுசார்பற்ற நிறுவனங்களின் உதவியினாலும் கணினி மூலம் சான்றிதழ் வழங்கல் கடந்தமாதம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. தற்போது இலங்கை அரச வலயமைப்பு மூலம் சகல அலுவலகங்ளையும் இணைக்கும் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

வடக்கு கிழக்கிலும் இவ்வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத் திட்டம் நிறைவேறியதும் இலங்கையில் எங்கு பிறந்திருந்தாலும் அருகில் உள்ள பிரதேச செயலகம்மூலம் சான்றிதழ் பிரதி பெறக்கூடிய வசதி மக்களுக்கு கிட்டும் இது ஒருசில மாதங்களில் சாத்தியமாகக்கூடும்.

தற்போதைய பதிவுமுறைக்கு பதிலாக இலத்திரணியல் பதிவுமுறையை அறிமுகப்படுத்த இலங்கை தகவல் தொடர்பாடல் நிறுவனத்தின் உதவியுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கமைய தற்போதைய பதிவுமுறை செயற்படுத்தப்படும் அதேநேரத்தில் இலத்திரனியல் பதிவுமுறையும் பல மாவட்டங்களில் அலுவலக மட்டத்தில் படிப்படியாக பரட்சார்த்தமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னோடியாக பிறப்பு இறப்புக்களை பதிவுசெய்வதற்கு தகவல் வழங்கும் படிவங்களில் மாற்றம் கொண்டு வரப்பட்டு பலதரப்பட்ட படிவங்களுக்கு பதிலாக ஒரேயொரு புதிய படிவம் மட்டும் வடிவமைக்கப்பட்டு மாவட்டங்கள் தோறும் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இப்படிவங்கள் பிறப்புச்சான்றிதழ் பதிவு செய்வதற்காக இதுவரைகாலமும் பெற்றப்பட்ட விபரங்களே கணினிமயப்படுத்தலுக்கு தகுந்தவாறு மாற்றியமமைக்கப்பட்டுள்ளது. இப்படிவ மாற்ற நடைமுறையானது வடக்கு மாகாண மாவடடங்களிலும் 2013.12.01 முதல் அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

இதன்படி ஒவ்வொரு பிறப்பு இறப்பு தொடர்பிலும் அவை பதிவதற்கு தேவையான விபரங்களை பெற்றோர் எழுதி சரி பார்த்து ஒப்பமிட்டு கொடுத்தல் வேண்டும் அத்துடன் பெயர்களை தாங்கள் பாவிப்பது போன்று ஆங்கிலத்திலும் எழுதிக் கொடுத்தல் வேண்டும். இதன்மூலம் எதிர்காலத்தில் பதிவுகளில் பிழைகள் ஏற்படாமல் தவிர்ப்பதுடன் இப்பதிவு முறையானது எதிர்காலத்தில் சட்டமாக்கப் பட்டு நடைமுறைக்கு வரும்போது ஆங்கில மொழிபெயர்ப்பு பெறவேண்டிய தேவையுமிருக்காது

## யுனிசெவ் நிதி ஊட்டலில் சுயதொழில் ஊக்குவிப்பு

(மன்னார்)

மன்னார் நகரப் பிரதேச செயலகப் பிரிவில் வட மாகாண சமூக சேவைகள திணைக்களத்தால் யுனிசெவ் நிறுவன நிதி மூலமாக 10 பயனாளிகளுக்கு 30,000 ரூபா முதல் 40 000 வரையான சுயதொழில் ஊக்குவிப்பு வழங்கப்பட உள்ளது. பயனாளிகள் தெரிவு யாவும் முடிவடைந்து விண்ணப்பங்கள் யாவும் பிரதேச செயலரால் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்களை உடைய வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் யுனிசெவ் நிறுவனத்தினால் சுயதொழில் வழங்கப்பட்டு வருகின்றது.

சமூக சேவைகள் அதிகாரி , சிறுவர் நன்னடத்தை அதிகாரி , சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் , உளவள உதவியாளர் , ஆகியோர் ஒன்றிணைந்து பயனாளிகளை குழு முறைக் கலந்துரையாடல் மூலமாக தெரிவு செய்து வருகின்றனர். கிராம அலுவலர்கள் மூலமாகவும் , வெளிக்கள வேலைகளின் போதும் பயனாளிகள் தெரிவு இடம் பெறுகின்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் யுனிசெவ் சுயதொழில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## மாற்றுவலுவுள்ளோருக்கு தொழிற்பயிற்சி

சமூக சேவைகள் அமைச்சினால் மாற்று வலுவுள்ளோருக்கு வழங்கப்படும் தொழிற பயிற்சிகள் 2014 ஆம் ஆண்டு முதல் வட மாகாணத்திலும் நடத்தப்பட உள்ளதாக மத்திய அரசின் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அனுசா கோகுல பெர்ணான்டோ கைதடி அரச முதியோர் இல்ல கேட்போர் கூடத்தில் அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் கூறினார்.

வருடா வருடம் அமைச்சினால் தென் பகுதியில் வழங்கப்பட்டு வரும் இப் பயிற்சிநெறிக்கு வட மாகாணத்திலிருந்து எவருமே வருவதில்லை.

போக்குவரத்து தூரம் ,மொழி தெரியாத நிலைமை ஆகிய காரணங்களால் இவ்விதம் எவருமே வருவதில்லை.

அதனால் போரற்ற தற்போதைய நிலைமையில் வட மாகாணத்தில் மாற்று வலுவுள்ளோருக்கான தொழிற் பயிற்சி நிலையங்களை அமைத்து பயிற்சியாளர்களை நியமிப்பது சாத்தியமானதெனவும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலமாக வட பகுதியிலுள்ள மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரம் உயர்த்தப்படும் நிலைமை ஏற்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

(90)

## சுகாதார சீர்கேட்டுடன் கட்டுடை இடிகுண்டு


மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் உள்ள இடிகுண்டு பகுதியில் கழிவுப் பொருட்களைக் கொட்டுவதால் அப்பகுதி துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகின்றது.

இந்த இடிகுண்டு ஒரு காலத்தில் மக்களின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வந்தது. இதனால் மக்கள் இதனைப் பேணிப் பாதுகாத்து வந்தனர்.

ஆனால் தற்போது மானிப்பாய், நவாலி, கட்டுடை ஆகிய பகுதிக் கழிவுப் பொருட்களைக் கொட்டும் இடமாக இது மாறியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர், செயலாளர் ஆகியோருக்கு மக்கள் தெரியப்படுத்திய போதும் இதுவரை எதுவித பயனும் இல்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.(140)

# அடிப்படை வசதிகளின்றி வாழும் கட்டுடை முகாம் மக்கள்



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடை முகாமில் வசிக்கும் 13 குடும்பங்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

கட்டுடை ஜே/140 கிராமஅலுவலர் பிரிவில் கடந்த 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து பின்னர் இப்பகுதி முகாம்களில் பலர் வாழ்ந்து வருகின்றனர்.

எனினும் இந்த முகாமில் இடம்பெயர்ந் தவர்களுக்காக யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் தற்காலிக வீடுகளை அமைத்து வழங்கியது.

அந்தக் காலப்பகுதியில் 100 இற்கு அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில் பின்னர் நாட்டின் நிலைமை சீரானதும் 80 குடும்பங்கள் தமது வாழ்விடங்களுக்கு திரும்பினர்.

தற்போது 13 குடும்பங்கள் நிரந்தர இடம் இல்லாமல் முகாமில் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன.

குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர் கள் கல்வி கற்பதற்கு மின்சார வசதிகள் அறற நிலையில் குப்பி விளக்கில் தமது கல் வியைத் தொடரும் அவலநிலை காணப் படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் இம் முகாமிற்கென பொது மல சலகூடங்களும் அமைக்கப்பட்ட நிலையில் அவையும் பராமரிப்பின்றி சுகாதாரமற்ற நிலையில் பாவனைக்குதவாதவாறு காணப்படுவதாகவும், அத்துடன் குடிநீர் வசதிகளும் இப்பகுதியில் இல்லாமல் இருப்பது பெரும் குறைப்பாடாகவுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இம்முகாமிலுள்ள மக்களின் துன்ப நிலையை பார்வையிட்டு உரிய நட வடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (140)

## மின்சாரம் வழங்க நடவடிக்கை

(கொடிகாமம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட எழுதுமட்டுவாள் பகுதிக்கு மின் சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கின்வசந்தம் ஊடாக மின்சாரம் வழங்குவதற்கு மின்கம்பங்கள் நாட்டப் பட்டு, மின்சார வயர்கள் பொருத்தும் பணி யும் நிறைவு பெற்றுள்ளது. வெகு விரைவில் மின்சாரம் வழங்கப்படும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் நன்மையடையவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (130)

## வீதியில் இறக்கும் விலங்குகள் அப்புறப்படுத்த நடவடிக்கை தேவை

(கொடிகாமம்)

ஏ-9 வீதியானது காப்பெற் வீதியாக மாற்ற மடைந்த பிற்பாடு வீதிகளில் விபத்துக்கள் ஏற்படுவது அதிகம். அதேநேரம் வீதிகளில் கால்நடைகள், உயிரினங்கள் முத லானவை தினமும் விபத்துக்களில் சிக்கி இறக்கின்றன.

பெரும்பாலான உயிரினங்கள் இரவு நேரங்களிலே விபத்துக்களில் சிக்கி உயிரி ழக்கின்றன. அவ்வாறு உயிரிழக்கும் உயிரி னங்களை வீதியைவிட்டு வெளியே எடுத்து புதைக்க நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட வீதிகளுக்குப் பொறுப்பான பிரதேச சபை கள், நகர சபைகள் முன்வரவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

விபத்தில் . இறக்கும் உயிரினங்களின் தொடர்நதும் வீதியில் கிடப்பதால் துர்நாற்றம் வீசுவதோடு சுற்றுச்சூழல் பாதிப்படையும், சூழ்நிலையும் உள்ளது.

எனவே விபத்துக்களில் சிக்கி உயிரி ழக்கும் உயிரினங்களை அப்புறுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டு மென சமூகஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

## வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலய ஆசிரியர் களுக்கான பல்வேறு செயலமர்வுகள் எதிர்வரும் 26, 27, 29, 30 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளதாக வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசா அறிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 26 ஆம் திகதி தரம் 10, 11 இல் ஆங்கிலம் கற்பிக்கும் உடுவில், தெல்லிப்பளைக் கோட்ட ஆசிரி யர்களுக்கான செயலமர்வு சுன்னாகம் இராம நாதன் கல்லூரியிலும், மேலும் 4 கோட்டங் களிலுள்ள 1 AB, 1C தரம் II பாடசாலை களில் நூலகர்களாக உள்ள ஆசிரியர் களுக்கான செயலமர்வுகள் மானிப்பாய் ஆசிரியவள நிலையத்திலும் இடம்பெற வுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தரம் 10, 11 வகுப்புக்களில் ஆங்கிலம் கற்பிக்கும் சண்டி லிப்பாய், சங்கானைக்கோட்ட ஆசிரியர் களுக்கான செயலமர்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், தரம் 8, 9 இல் தமிழ்மொழி கற்பிக்கும் மேற்குறித்த இருகோட்ட ஆசிரி யர்களுக்கான செயலமர்வு மானிப்பாய் ஆசிரியவள் நிலையத்திலும் இடம்பெற வுள்ளது.

மேலும் 29. ஆம் திகதி தரம் 9 இல் சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் சண்டிலிப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி யிலும், 30 ஆம் திகதி தரம் 6 முதல் 11 வரை நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் நான்கு கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு மானிப்பாய் ஆசிரியவள நிலையத்திலும் நடைபெவுள்ளது.

செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர் களை தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (06)

## முதல்வருக்கு வந்த நெஞ்சு வலி




அண்மையில் வட மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கு நெஞ்சுவலி வந்து, அவர் அவசர அவசரமாக யாழ்ப்பாணம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் அல்லவா!

இந்த நெஞ்சுவலிக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக எத்தனையோ பரிசோதனைகளை அங்குள்ள மருத்துவர்கள் செய்தார்கள்.

காரணத்தைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை.

காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று மருத்துவர்கள் சொல்லவும் விக்கினேஸ்வரனுக்கு பக்கத்திலிருந்த அவருடைய ஆதரவர்ளர்களும் அனுதாபிகளும் பதறிப்போய்விட்டார்கள்.

ஆனால் விக்கினேஸ்வரனின் மனைவிக்கு விக்கினேஸ்வரனின் நெஞ்சுவலிக்கான காரணம் புரிந்திருக்கும்.

'அவர் நீதிபதியாக இருந்திருந்தால் நெஞ்சு வலி மட்டுமல்ல தலை வலியே வந்திருக்காது. நீதிபதியாக இருந்த காலத்தில் ஒரு வலியுமே இல்லாமல் இருந்த மனுசன், இப்பொழுது இப்படி வாடி வதங்கி, ஆயிரம் பிரச்சினைக்குள் சிக்கியிருக்குது' என்று கவலைப்பட்டிருப்பார்.

இது ஏற்கக் கூடிய ஒன்றுதான்.

உண்மையில் முதல்வருக்கு நெஞ்சு வலி வந்ததே இந்த மாகாணசபை மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களால் தான்.

முதல்வர் பதவிப்பிரமாணம் செய்த வேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரிடம் கேட்டிருக்கிறார், 'மந்திரி சபை கூடும்போது எல்லா முதல்வர்களை யும் அழைக்கவுள்ளோம். நீங்களும் கலந்து கொள்ளுங்கள்' என்று.

முதல்வரும் அதற்கு ஒத்துக் கொண்டுவிட்டார்.

ஆனால், இதை அறிந்த தீவிர தமிழ்த் தேசிய ஊடகங்களும் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் சில மாகாணசபை உறுப்பினர்களும் முதல்வருக்கெதிராகப் போர்க்கொடி தூக்கினார்கள்.

முதல்வருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

இப்படியொரு நிலை வரும் என்று அவர் எதிர்பார்க்கவும் இல்லை. அப்படி ஏற்கனவே தெரிந்திருந்தால் ஜனாதிபதிக்கு ஏதோ சாட்டுப்போக்குகள் சொல்லிச் சமாளித்திருப்பார்.

ஆளுக்கு அரசியல் புதிது என்பதால் பாவம் மனுசன் வெளிப்படையாக சம்மதம் தெரிவித்தார். அதனால் வந்த வினையோ இப்படி நெருக்கடியாகி விட்டது.

இந்த நிலைமையில் மந்திரிசபை கூடும்போது போக முடியாது. போனால் கூட்டமைப்பினர் தூக்கிச் சப்பிச் சாப்பிட்டு விடுவார்கள். ஏற்கனவே ஜனாதிபதி யின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்ததற்காக படுத்தி விட்டார்கள்.

மந்திரி சபை கூடும்போது போகா விட்டால் ஜனாதிபதிக்கு எதிர்காலத்தில் என்ன பதிலைச் சொல்ல முடியும்?

அவர் பிரதம நீதிபதியரசராக இருந்த போது எவ்வளவோ நெருக்கடியான பிரச்சினைகளுக்குத் தீர்ப்புகளை வழங்கியிருக்கிறார்.

பிள்ளைகளின் திருமணத்தின் போது கூட அவருக்கு இப்படி நெருக்கடி வந்ததில்லை.

தான் ஒரு சுத்தத் தமிழ் – சைவ அடையாளத்தைப் பேணும் ஆள் என்றபோதும் பிள்ளைகளின் மாற்றுத்திருமண விருப்பத்தை மறுக்கவில்லை.

அவர்கள் இனமும் மதமும் மாறி வேறு இனத்திலும் வேறு மதத்திலும் மணம் முடிக்க விரும்பிய வேளை அதற்குத் தீர்வு கண்டவர்.

ஏனென்றால் அது சொந்த விடயம்.

இதுவோ பொது விசயம். அதிலும் அரசியல் விவகாரம்.

அதிலும் எல்லாவற்றையும் எதிர்த்து எதிர்த்தே, நல்லது எது? கெட்டது எது? என எதையும் விளங்காமல் கதைக்கும் அரசியல் விவகாரம்.

எந்த முடிவையும் எடுக்க முடியாமல் முதல்வர் – முன்னாள் நீதியரசர் குழம்பித் தடுமாறினார்.

'என்ன கொடுமையான வம்பில வந்து மாட்டியிருக்கிறேன்' எனத் தன்னை நொந்தார்.

எதற்கும் ஒரு ஆலோசனையைப் பெறுவோம் என்று சம்பந்திகளில் ஒருவராகிய அமைச்சர் வாசுதேவவிடம் 'இந்தப் பிரச்சினைக்கு என்ன செய்யலாம்?' என்று கேட்டிருக்கிறார்.

அவர் [வாசு] சொன்னாராம், 'நெஞ்சு வலி என்று சொல்லிப்போட்டு போய் ஆஸ்பத்திரியில் படுத்திருங்கள். நெஞ்சு வலி என்றால் இரண்டு நாட்களுக்கு எப்பிடியும் ஆஸ்பத்திரியில் மறிப்பார்கள். அதற்குள் மந்திரிசபைக் கூட்டம் முடிஞ்சிடும். ரண்டு தரப்பையும் நோகாமல் சமாளிச்சிடலாம்' என்று.

இன நல்லிணக்கத்துக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் பொறுப்பான அமைச்சர் அல்லவா வாசு! அவருக்குத் தெரியாததா!

கூரையைப் பிய்த்துக் கொண்டு முதல்வருக்கு நெஞ்சுவலி வந்தது. பத்திரிகைகளில் செய்தியும் வந்தது. சனங்கள் பதறினர்.

'எல்லாம் அவன் சித்தம்' என்று முதல்வர் சிரித்தார்.

கவலை நம் சவப்பெட்டிக்கு ஓர் ஆணி சேர்க்கிறது. கலகலவெனும் சிரிப்பு ஓர் ஆணியை கழற்றுகிறது -பீட்டர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வேறுபடுகிறவர்களுடன் வாழ்தல்!

மனிதர்கள் அடிப்படையில் ஒருவருக்கொருவர் இதமாக நடந்துகொள்வதில் மகிழ்ச்சியடையக் கூடியவர்களே. வலிந்து புனையப்படும் வன்மமும் துவேசமுமே இந்த இயல்பை அமுக்கி விட்டுக் கோபமாக வெளிப்பட்டு விடுகிறது.

நம்மிடமிருக்கும் கருணையை வெளிப்படுத்துகிற ஒவ்வொரு சமயத்திலும் நாம் மனிதர்களாக மற்றவர்களை விட உயர்ந்து விடும் பெருமையைப் பெற்றுவிடுகிறோம். நாம் ஒன்றுசேர்ந்து ஒருவருக்கொருவர் அன்பாகவும் ஆதரவாகவும் இருந்தால்தான் எல்லோருமே பாதுகாப்பாக இருக்கமுடியும்.

நம்மைவிட வேறுபடுகிறவர்கள், நம்மோடு மாறுபடுகிறவர்கள் பகைவர்களல்ல. மனிதர்கள் எல்லோருமே ஒருவருக்கொருவர் மாறுபாடு கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள்; இருக்க முடியும். வேறுபாடுகளை அங்கீகரித்ததாகவே நமது வாழ்வு இருக்க முடியும்.

வேறுபாடுகளை சகித்துக்கொள்ள முடியாமல், விலக்கி வைத்து மோதல்களில் ஈடுபடுவது முட்டாள்த்தனமாகுமே தவிர நாம் மனிதர்களாக வாழ்கிறோம் என்றாகாது. மாறுபடுவதாலும், மாறுபடுகிறவர்களாலும்தான் உலகம் முன்னோக்கி அடிவைக்கிறது.

இதெல்லாம் தெரிந்திருந்தாலும் கூட, நம்மைத் தளர்த்திக் கொள்வதும் மற்றவரோடிணங்குவதும் எளிதில் சாத்தியமாகி விடுவதாயில்லை. மற்றவர்களிடம் நமக்குள்ள பழியுணர்ச்சிகளும் குற்றச்சாட்டுகளும் நமக்கிடையேயான விரிசலை அதிகரிப்பவையாக உள்ளன.

முதலில், நம்மைப் பற்றி நமக்கிருக்கும் நல்லபிப்பிராய நினைவைத் துறக்க முடியாமலிருப்பது ஒரு பெரிய பிரச்சினைதான்! நம்மிடமுள்ள குற்றங்களை நம் நினைவில் கொண்டுவராவிட்டால், மற்றவர்களுடைய குற்றங்களையே மனம் பெரிதாக்கி வைத்துக்கொண்டிருக்கும். இதுவே இணக்க வாழ்விற்குப் பெரிய தடைக்கல்லாகி விடுகிறது.

நமது மக்கள் எவ்வளவு இழிநிலையில் அரைபட்டுக் கிடந்தாலும், 'நமக்கு மற்ற சமூக மக்கள் சமதையானவர்கள் இல்லை' என்ற சிந்தனையிலிருப்பவர்களே இந்த மக்களின் அரசியல் குரலாக மேலோங்கியிருப்பதும் தமிழ்வாழ்க்கையின் துரதிர்ஷ்டம் தான்!

காத்திருப்பு நீள நீள் குற்றச்சாட்டுகளும் சமத்காரமான எதிர்ப்பு அறிக்கைகளுமே நம் கேடயங்களாகிக் கொள்கின்றன. தீர்வு காண்பதற்குப் பேச வேண்டியது என்ன என்பதைப் புறக்கணிப்பவர்களாகி விடுகிறோம். எதிர்த்தரப்பை இணங்க வைத்து வெல்வதற்குப் பதிலாகக் கோபப்படுத்துவதில் தற்திருப்தி அடைந்து கொள்கிறோம்.

எல்லோரும் தங்களிடம் உள்ள சரிகளைப் பேசிக் கொண்டிருப்பதால் ஒருபோதும் நல்லிணக்கம் உருவாகி விடுவதில்லை. தங்கள் தங்கள் தவறுகள், குற்றங்கள் குறித்த உணர்வும் பரஸ்பர மன்னிப்புப் பரிமாறலுமே நம்மை நல்லிணக்கம் நோக்கிச் செலுத்துவதாக இருக்கும்.

ஆனால், நம் அறிஞர்கள் பிரமுகர்கள் எனப்படுவோரும், மக்களுக்காகக் குரல் தருவதாகக் காட்டிக் கொள்வோரும் வீரம், ரோசம், பழம்பெருமை என்பவற்றைச் சொல்லி வன்முறை எதிர்ப்பு உணர்வைக் கைவிடாதிருப்பதே உயர்வான மனித மதிப்பீடுகளாகப் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எதிர்ப்புக் கோஷங்களின் மூலம் பகைவரைப் பணிய வைத்து விடலாம் என்ற உணர்ச்சிகர ஏமாற்றினால் மக்களது வாழ்வைச் சிதைத்து வருகிறார்கள். மாறி மாறிப் பணியவைக்கும் வீம்பு காட்டி வருவதல்ல இணக்கம்.

இப்போதும் சாதாரண மக்கள் வாழ்வை அழித்துக் கொண்டிருப்பதையே இவர்கள் வீரம் ரோசம் எனும் பண்புகளாக விதந்தோதிக் கொண்டிருக்கிறார்கள். எதார்த்த நிலையை மறைத்து இவர்கள் காட்டும் பழம்பெருமை மதிப்பீடுகள் பற்றிய முழக்கங்களால் மக்களை மயக்கநிலையில் வைத்திருப்பதுடன் வாழவொட்டாமலும் வதைத்து வருகிறார்கள்.

மற்றவர்களுடன் வாழ்வதற்காக நமது மனோபாவங்களின் அடிப்படையையே மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் ஒன்றும் நாம் தரக்குறைவாகிவிட மாட்டோம்.

- ஆசிரியர்.

# ஐந்து சூதாட்ட நிலையங்களை கந்தானையில் அமைக்க திட்டம்

## என்கிறார் ரணில்

கந்தானைப் பகுதியில் ஐந்து பெரிய சூதாட்ட நிலையங்களை அமைக்க அரசாங்கம் இரகசியமாக திட்டமிட்டுள்ளது என்ற தகவல் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அம்பலமாகியது.

வரவு - செலவுத் திட்டத்தை ஆரம்பித்து பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, மேற்படி இரகசிய திட்டத்திற்கு முதலீட்டு சபையின் அங்கீகாரமும் வழங்கப்பட்டதென கூறினார்.

தனது உரையின்போது விக்ரமசிங்க இந்த சூதாட்ட திட்டம் தொடர்பான இரகசிய தகவல் ஆவணமொன்றையும் சபையில் காட்டினார்.

இந்த ஆவணத்தின்படி இத்திட்டம் மூலோபாய அபிவிருத்தித்திட்டமென வகைப்படுத்தப்பட்டுள்ளது. 5 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டை கொண்டுவருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு வரிச்சலுகையும் வழங்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் அரசாங்கம் தனக்கு விருப்பமான ஆட்களுக்கு சூதாட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்கி வருகின்றது.

சிங்கப்பூரில் அனுமதிப் பத்திரங்களை ஏலத்தில் விற்பதனால் அரசாங்கம் பெரும் வருமானத்தை பெறுகின்றது. அங்கு ஓர் அனுமதிப்பத்திரத்தின் குறைந்த பட்ச விலை 100 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

இதே முறையை அரசாங்கம் பின்பற்றினால் குறைந்த பட்சம் இலங்கைக்கு வருமானமாவது கிடைக்கும். ஆனால் கந்தானை சூதாட்ட திட்டத்தின் மூலம் வருமானம் கிடைக்கப்போவதில்லை என ரணில் விக்ரமசிங்க கூறினார்.

# கமரூனை சந்திக்க முற்பட்ட வேளை தாக்குதல் நடத்தினர் பொலிஸார்

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனவர்களின் உறவுகள் மீது கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பான முறைப்பாடு தமக்கு கிடைத்துள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்.பொது நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட போது காணாமற் போனவர்களின் உறவுகள் பிரித்தானியப் பிரதமரிடம் மனு சமர்ப்பிக்கவென சென்றவேளையில் பொலிஸாரினால் தடுக்கப்பட்டனர். இதனால் அத்துமீறி பொதுமக்கள் சென்றவேளையில் பெண்கள், சிறுமிகள் என பாராது பொலிஸார் தாக்கினர்.

இது குறித்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(இ)

## கடல்சார் பாதுகாப்பு பொறிமுறை 'காலி கருத்தரங்கு - 2013' நாளை

கடற்படையினர் ஆண்டுதோறும் நடத்தி வரும், அனைத்துலக் கடல்சார் பாதுகாப்பு கருத்தரங்கான, 'காலி கலந்துரையாடல்-2013' நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

காலி வெளிச்ச வீட்டு விடுதியில் நடக்கவுள்ள இந்த இரண்டு நாள் கருத்தரங்கின் ஆரம்ப நாளன்று, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ முக் கிய உரை நிகழ்த்தவுள்ளார். இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில், எழுச்சிபெறும் கடல்சார் திருப் பங்கள் என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டு கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக கடற்படை பேச் சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுல சூரிய தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் 35 நாடுகள் பங்கேற்கவுள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

## தளம்பலற்ற பொருளாதாரம் மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

நாட்டின் பொருளாதார வளர்ச்சி தளம்பலற்றதாகவும் வளர்ச்சிப் போக்குடனும் நகர்வதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிலைமை தீர்மானமிக்க நிலையை எட்டி இருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இதனைத் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் தொடர்பான செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வில் சுயலாபம் தேடுகிறது கூட்டமைப்பு

## வலி. வடக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கையை அரசியலாக்கி சுயலாபம் தேட முற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கையை கண்டித்து வலி. வடக்கு பிரதேச சபையின் எதிர்கட்சி உறுப்பினர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

வலி. வடக்குப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் காணியற்ற மக்களுக்கு காணியுடன் வாழ்வாதார வசதிகளை செய்துகொடுப்பதற்கு ஜனாதிபதியுடன் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியதன் விளைவாக இடம்பெயர்ந்த மக்களுக்கு கிடைக்கவிருக்கும் சலுகைகளை தட்டிப்பறிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளை மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் இனி பொறுத்திருக்கமுடியாது.

இடம்பெயர்ந்த மக்களை பிழையான பாதைக்கு கூட்டிச் சென்று அவர்களை மீளக்குடியமர விடாது பொய்ப்பிரசாரங்களைச் செய்து மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

காணியற்ற மக்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகளை அரசியல் பேசி குழப்பவேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வேண்டுகோள் விடுக்கின்றோம் என்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

(93)

## இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி

கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் கடந்தகால இயற்கை அனர்த்தங்களால் வீடுகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதி வழங்கவென அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நிதியை வழங்கியுள்ளது.

பிரதேச செயலர், அரசாங்க அதிபர் ஊடாக அனர்த்த முகா மைத்துவ அமைச்சிற்கு அனுப்பி வைத்த அறிக்கையின் மூலம் இந்நிதி கிடைத்துள்ளது. பகுதியளவாக பாதிக்கப்பட்ட 719 குடும்பங்களுக்கு இந்தநிதி நன்கொடை வீடுகளின் திருத்தத்திற்கு வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்ட வீடுகளை திருத்தம் செய்வதற்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சமூகசேவைகள் அலுவலர், தொழில்நுட்ப அலுவலர், அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் மீள்பார்வை செய்வதற்கு பிரதேச செயலரால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ் அதிகாரிகள் குழுவினர் தற்போது தமது பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

## ரங்கே பண்டாரவுக்கு மீண்டும் பதவி

கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபை உறுப்பினர்கள் தன்னை சந்தித்து பேசியதாக அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

கட்சியினால் தனக்கு வழங்கப்பட்டுள்ள பதவியை மீண்டும் பெற்றுக் கொள்வது குறித்து தனக்கு இதன்போது தெரியப்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் கட்சியின் தலைமைத்துவ சபையின் செயற்பாடுகளுக்கு இணங்க கட்சியின் தீர்மானம் அமைவதாக பாலித்த ரங்கே பண்டார மேலும் தெரிவித்தார்.

# இறுதி எல்லைக்கோட்டில் கூட்டமைப்பு அரசியல்


**இனப்பிரச்சினை தீர்வின்றி இருப்பதாலேயே திட்டமிட்ட குடியேற்றம், இராணுவ பிரசன்னம், நில அபகரிப்பு போன்ற பல பிரச்சினைகள் தலைதூக்குகின்றன. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பட்சத்தில் மற்றைய பிரச்சினைகள் தாமாக மறைந்துவிடலாம். இனப்பிரச்சினையின் பக்க விளைவுகளான மற்றைய பிரச்சினைகளின் தீர்வுக்கான போராட்டங்களை நடாத்தக்கூடாது என்பது இதன் அர்த்தமல்ல. தமிழ்த் தலைமையின் போராட்ட நிகழ்ச்சி நிரலில் இனப்பிரச்சினையே முன்னுரிமை பெற வேண்டும் என்பதையும் மற்றைய பிரச்சினைகளின் தீர்வுக்கான போராட்டம் இனப்பிரச்சினையை மூடிமறைக்கும் வகையில் இடம்பெறக்கூடாது என்பதையுமே இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.**

சாங்கர சிவன்

தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து வெற்றியீட்டி வருவதைக் காட்டித் தாங்களே தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் பெருமை பேசுகின்றன. தமிழ் அரசியலின் இன்றைய நிலையை நிதானமாக நோக்கினால் இந்தப் பெருமைப் பேச்சுக்குக் கூட்டமைப்பு பொருத்தமானது தானா என்ற கேள்வி நிச்சய மாக எழும். மக்களின் பிரதான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றின் தீர்வுக்காக விசுவாசமாகச் செயற்பட்டவர்களையே வரலாறு தலைவர்களாக அங்கீகரித்திருக்கின்றது. கூட்டமைப்புத் தலைவர்கள் இந்த வரையறைக்குள் வருகின்றார்களா என்ற கேள்வி தமிழ் மக்களிடம் எழ வேண்டிய நேரம் வந்துவிட்டது.

தமிழ் மக்கள் இப்போது பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ளது இனப்பிரச்சினை. இனப் பிரச்சினை தீர்வின்றி இருப்பதாலேயே திட்டமிட்ட குடியேற்றம், இராணுவ பிரசன்னம், நில அபகரிப்பு போன்ற பல பிரச்சினைகள் தலைதூக்குகின்றன. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பட்சத்தில் மற்றைய பிரச்சினைகள் தாமாக மறைந்து விடலாம். இனப்பிரச்சினையின் பக்க விளைவுகளான மற்றைய பிரச்சினைகளின் தீர்வுக்கான போராட்டங்களை நடாத்தக்கூடாது என்பது இதன் அர்த்தமல்ல. தமிழ்த் தலைமையின் போராட்ட நிகழ்ச்சி நிரலில் இனப்பிரச் சினையே முன்னுரிமை பெற வேண்டும் என்பதையும் மற்றைய பிரச்சினைகளின் தீர்வுக்கான போராட்டம் இனப்பிரச்சினையை மூடி மறைக்கும் வகையில் இடம்பெறக்கூடாது என்பதையுமே இக்கட்டுரை வலியுறுத்துகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் உண்மையான தலைமையா என்ற கேள்விக்கு இந்த அடிப்படையிலேயே விடை தேட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்ற விடயத்தில் இதுவரையில் கூட்டமைப்பு சாதித்தது எதுவுமில்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுகின்றார்களேயொழிய இன்றுவரை இந்தியாவைத் தவிர வேறு எந்தவொரு நாடாவது இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாகச் சிறு நகர்வைக் கூட மேற்கொள்ளவில்லை. இந்தியாவின் ம்யற்சிகள்கூட எதிர்பார்த்த பலனை அளிப்பனவாக இல்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு இலங்கை மட்டத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டியது என்பதை இதிலிருந்து விளங்கிக்கொள்ள முடியும். எனவே, தமிழ்த் தலைவர்கள் சர்வதேச



சமூகம் என்று பேசிப் பேசி மக்களை ஏமாற்றிக் கொண்டிராமல் உரிய முறையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பெறுவதற்கு முன்வர வேண்டும். இதில் தான் அவர்களின் பிரச்சினை ஆரம்பிக்கின்றது.

இக்கட்டுரையாளர் அடிக்கடி கூறியது போல அரசியல் தீர்வை அடைவதற்குச் சர்வசன வாக்கெடுப்பு என்ற தடையைத் தாண்டியாக வேண்டும். எல்லாச் சட்டங்களும் சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற வேண்டிய அவசியமில்லையெனினும் பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட தீர்வு சர்வசன வாக்கெடுப்புக்குச் செல்வதைத் தவிர்க்க முடியாது. பதின்மூன்றாவது திருத்தம் கூட அரும்பொட்டிலேயே சர்வசன வாக்கெடுப்பிலிருந்து தப்பியது. ஒன்பது உச்ச நீதிமன்ற நீதியரசர்களில் ஐந்து பேர் சர்வசன வாக்கெடுப்பு தேவையில்லை எனவும், நான்கு பேர் தேவை எனவும் தீர்ப்பளித்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவதைப் போல சர்வதேச சமூகம் ஒரு தீர்வை முன்வைத்தாலும்கூட, அதுவும் சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வர முடியும்.

சர்வசன வாக்கெடுப்பு ஏன் கூட்டமைப்புக்குப் பிரச்சினையாக இருக்கின்றது என்ற கேள்விக்கு வருவோம். சர்வசன வாக்கெடுப்பில் நாடு முழுவதிலுள்ள எல்லா மக்களும் வாக்காளர்களாக இருப்பர். அரசியல் தீர்வுக்கு அங்கீகாரம் பெறுவதற்குக் கணிசமான சிங்கள மக்களின் ஆதரவும் அவசியம். இந்த ஆதரவைப் பெறுவதற்கான முன் முயற்சியைத் தமிழ்த் தலைவர்களே ஆரம்பிக்க வேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் இடதுசாரிகளும் முற்போக்கு சக்திகளுமே இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கு ஆதரவளிக்கக் கூடியவர்கள். தென்னிலங்கையின் இடதுசாரி மற்றும் முற்போக்குத் தலைவர்களுக்கூடாகச் சிங்கள மக்களை அணுகி அரசியல் தீர்வுக்கான ஆதரவை வளர்க்க முடியும். அந்த வழியில் அரசியல் தீர்வை அடைவதன் விளைவு தெற்கிலும் வடக்கிலும் இடதுசாரிகளும் முற்போக்கு சக்திகளும் பலமடைவதாகிவிடும். இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சினை.

கூட்டமைப்பு முதலாளித்துவச் சிந்தனையினால் வழிநடத்தப்படும் வலதுசாரிக் கட்சி. தேசிய ம்ட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவரும் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படும் கட்சி. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு என்ற அமைப்பை ஆட்சி மாற்றத்துக்காகவே உருவாக்கியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி பகிரங்கமாகக் கூறுகின்றது. அந்த அமைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அங்கம் வகிக்கின்றது. யுத்தக் குற்றம் தொடர்பாகச் சர்வதேச விசாரணை அவசியம் என்று பிரித்தானியப் பிரதமர் கூறியதை வரவேற்றுப் பாராட்டும் கூட்டமைப்புத் தலைவர்கள் கமரூனின் கருத்தை ஏற்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட அறிக்கை பற்றி மௌனம் சாதிக்கின்றார்கள். அந்த அளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி மீது பற்றும் பாசமும். இந்த நிலையில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்குத் தென்னிலங்கை இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகளின் ஆதரவைப் பெறுவதன் மூலம் அவர்களின் வளர்ச்சிக்குக் கைகொடுக்க வலதுசாரித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பாதது புதுமையானதல்ல.

கூட்டமைப்பின் அரசியல் இப்போது அதன் இறுதி எல்லைக்கோட்டுக்கு வந்திருக்கின்றது. இந்த எல்லைக் கோட்டைத் தாண்டி அரசியல் தீர்வை நோக்கி நகர முடியாத அளவுக்கு வலதுசாரி அரசியல் நிலைப்பாடு இவர்களைத் தடுக்கின்றது. இதனால், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைத் தவிர்த்து வேறு விடயங்களில் மக்களின் கவனத்தைத் திருப்புகின்றார்கள். மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு வலிகாமம் வடக்கு மீள் குடியேற்றம், இராணுவப் பிரசன்னம், குடியேற்றம் என்று பல விடயங்கள் இவர்களுக்குக் கைவசம் இருக்கின்றன. இனப்பிரச்சினையைக் கிடப்பில் போட்டுவிட்டு வேறு விடயங்களில் என்ன தான் வெட்டிக் கிழித்தாலும் அது உண்மையான தலைமையாகாது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சியை முன்னெடுப்பதில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. சமகால யதார்த்தத்துக்கு அமைவான தீர்வுக்கு கோரிக்கையை முன்வைப்பது ஒரு விடயம். சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பது மற்றைய விடயம். கூட்டமைப்பு இரண்டு விடயங்களிலும் மாறாகவே நடக்கின்றது. யதார்த்தத்துக்கு ஒவ்வாததும் நடைமுறைச் சாத்தியமற்றதுமான கோரிக்கையை முன்வைக்கின்றது. சிங்கள மக்களை வென்றெடுப்பதற்குப் பதிலாக அவர்களைச் சீண்டிவிடும் வகையில் செயற்படுகின்றது. அரசியல் தீர்வைத் தவிர்ப்பதற்கான தந்திரோபாயம் என்று இதைக் கூறலாம்.

வலதுசாரி அரசியலை வலுப்படுத்துவதற்காக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைத் தாரைவார்க்கும் கூட்டமைப்பு அரசியல் தங்களை எங்கே கொண்டுபோய் விடப் போகின்றது என்பதையிட்டுத் தமிழ் மக்கள் கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும் என்பதைப் போல இனப்பிரச்சினை இருக்கும் வரை அதன் பக்க விளைவுகளான அன்றாடப் பிரச்சினைகள் அடிக்கடி தோன்றிக் கொண்டே இருக்கும். அந்தப் பிரச்சினைகளை மையப்படுத்திக் கூட்டமைப்புத் தலைவர்கள் பல போராட்டங்களை நடத்துவார்கள். பிரச்சினைகளும் போராட்டங்களும் முடிவற்ற தொடர் கதை என்பதாகத் தமிழ் மக்களின் அரசியல் அமையும். சந்ததி சந்ததியாக இதுதான் கதை. இதற்காக ஒரு தலைமை தேவையா?

இனப்பிரச்சினையின் தீர்விலேயே தமிழ் மக்களின் நிம்மதியும், விமோசனமும் தங்கியுள்ளன. தனி நாடு பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்பது தெளிவாகிவிட்டது. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வுதான் ஒரேவழி. பொருத்தமான வேலைத்திட்டத்தை முன்வைத்து அரசியல் தீர்வை நோக்கிச் செல்லும் தலைமை தான் தமிழ் மக்களின் உண்மையான தலைமையாக முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் அரிசயல் தீர்வைத் தவிர்ப்பதிலேயே அக்கறையாக இருக்கின்றார்கள். அரசியல் தீர்வைப் புறந்தள்ளிவிட்டு மற்றைய பிரச்சினைகளை முன்னிலைப் படுத்தி ஆர்ப்பாட்டங்களும் உண்ணாவிரதங்களும் மேற்கொள்வதன் மூலம் தங்கள் பதவிக் கதிரைகளைத் தக்க வைத்துக்கொள்கின்றார்கள்.

இது சுயநல அரசியல். தமிழ் மக்களின் இன்றைய தேவை அரசியல் தீர்வுக்கு முன்னுரிமை அளிக்கும் உண்மையான தலைமை.

# ரோம் பிரகடனத்தை அரசு ஏற்றுக்கொள்ளாது

## வெட்டு ஒன்று துண்டு இரண்டாக நிராகரிப்பு

(கொழும்பு)

ரோமப் பிரகடனத்தில் கைச்சாத்திடப்போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

போர்க்குற்றச் செயல் தொடரபான சர்வதேச நீதிமன்றம் தொடர்பில் ரோமப் பிரகடனம் கைச்சாத்திடப்பட்டுள்ளது,

இந்தப் பிரகடனத்தில் கைச்சாத்திடுமாறு அரசாங்கத்தை வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குச் சென்ற நபர் ஒருவர் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

எனினும், இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது,

இந்த பிரகடனத்தில் கைச்சாத்திட்டால் புலிச் செயற்பாட்டாளர்களான நெடியவன் மற்றும் ருத்ரகுமாரன் ஆகியோரை இலங்கைக்கு நாடு கடத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யோசனை ஓர் சதி வலை எனவும், உண்மையில் பிரகடனத்தில் கைச்சாத்திட்டால், இராணுவத்தினருக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றில் வழக்குத் தொடர முடியும் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த வெளிநாட்டவர் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

1998 ஆம் ஆண்டில் ரோமப் பிரகடனத்தில் கைச்சாத்திட அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கமரூனுக்கு எதிராக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)


மனிதஉரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசு விசாரிக்கத்தவறினால், அனைத்துலக விசாரணை நடத்தப்படும் என்று எச்சரித்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனைக் கண்டித்து, கொழும்பில் முஸ்லிம்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மதியம் வெள்ளிக்கிழமை ஜ"ம்மா தொழுகை முடிந்த பின்னர், முஸ்லிம்கள் கமரூனுக்கு எதிரான வாசகங்களைத் தாங்கிய சுலோக அட்டைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புலிகள் ஆதரவு புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களின் கீழ் செயற்படுவதாக, டேவிட் கமரூன் மீது அவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

கடந்த வியாழன் ராவண பலய என்ற சிங்கள பௌத்த அடிப்படைவாத அமைப்பைச் சேர்ந்த பௌத்த பிக்குகளும், கொழும்பில் டேவிட் கமரூனுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

# மசூர் மௌலானா பதவி நீக்கம்



(கொழும்பு)

ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளராக செயற்பட்டு வந்த அப்துல் காதர் மசூர் மௌலானா உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு நேற்றுமுன்தினம் இந்த அறிவித்தலை விடுத்ததுடன், மசூர் மௌலானா அவர்கள் தற்போது ஜனாதிபதியின் உத்தியோகத்தர்கள் பிரிவில் எவ்வித பதவியினையும் வகிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயன்படுத்திய வாகனங்கள் விலை அதிகரிக்கும் சாத்தியம்

## அடுத்த ஆண்டு முதல்

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் பயன்படுத்திய வாகனங்கள் மீது அறவிடப்படும் இறக்குமதி தீர்வை தொடர்பாக பெறுமதித் தீர்வை கணிக்கும் முறையை அரசாங்கம் மாற்றியுள்ளது.

இதனால் நாட்டில் இறக்குமதியாகும் பயன்படுத்திய வாகனங்களின் விலை உயரவுள்ளன என வாகன இறக்குமதியாளர் சங்கத் தலைவர் மகிந்த சரச்சந்திரா கூறினார்.

இதுவரையில் 6 மாதங்கள் பயன்படுத்திய வாகனங்களுக்கு 90 சதவீத வரியும், 6 மாதம் தொடக்கம் 1 வருடம் வரை பயன்படுத்திய வாகனங்களுக்கு 80 சதவீத வரியும் என பயன படுத்திய காலத்துக்குத்தக்க வரி விதிக்கப்பட்டு வந்தது.

புதிய நடைமுறையின்படி இரு வருடத்திலும் குறைவாக பாவனைக் காலம் உள்ள எந்த ஒரு வாகனத்துக்கும் 90 சதவீத வரி அறவிடப்படும்.

இந்த வரி அதிகரிப்பால் சிறிய கார்கள் மற்றும் முச்சக்கர வண்டி என்பவற்றின் விலைகளில் 8 வீத அதிகரிப்பும் டீசல் வாகனங்களின் விலைகளில் 6 வீத அதிகரிப்பும், டபிள்காப் ரக வாகனங்களின் விலைகளில் 7 வீத அதிகரிப்பும் ஏற்படுமென சரச்சந்திரா கூறினார்.

# அமைச்சர்கள் 5 பேருக்கு சபாநாயகர் எச்சரிக்கை



(கொழும்பு)

ஐந்து அமைச்சர்களுக்கு சபாநாயகர் சமால் ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார். நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமான நிலையில் குறித்த அமைச்சர்கள் கூடிபேசிக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவை அமர்வுகளுக்கு இடையூறு ஏற்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பேச வேண்டுமானால் வெளியே சென்று பேசவும் அவை நடவடிக்கைகளை குழப்ப வேண்டாம் என சபாநாயகர் அமைச்சர்களுக்கு தெரிவித்துள்ளார்.

காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனின் ஆசனத்திற்கு அருகாமையில் சில அமைச்சர்கள் கூடிப்பேசிக்கொண்டிருந்த தாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, டியூ.குணசேகர, திஸ்ஸ கரலியத்த, பிரதியமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன ஆகியோரே இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

சபாநாயகரின் இந்த எச்சரிக்கையை தொடர்ந்து சில ஆசனங்களுக்குச் சென்றதுடன் சிலர் வெளியேறிச் சென்றதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தொடர்பாடல் தீர்வை 5 சதவீதமே அதிகரிப்பு

(கொழும்பு)

தொலைத்தொடர்பாடல் தீர்வை 5 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இந்த தீர்வை அமுல்படுத்தப்படும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் 20 வீதமாக காணப்பட்ட தீர்வை, 25 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இணையத்தள மற்றும் புரோட் பேண்ட் சேவைகளுக்கான 10 வீத தீர்வையில் எந்தவித மாற்றமும் ஏற்படமாட்டாது என்று தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட தெரிவிக்கின்றார்.

# வரி செலுத்தும் கலாசாரம் மக்கள் பழகிக்கொள்ள வேண்டும்



(கொழும்பு)

வரியுடன் கூடிய ஒரு புதிய கலாசாரத்தில் வாழ்வதற்கு கற்றுக்கொள்ள வேண்டும் என நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிககப்பட்டதன் பின்னர் இடம் பெற்ற செயலமர்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பீ.பி.ஜயசுந்தர இந்தக் கருத்தினைக் கூறினார்.

பழக்க வழக்கங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். வரியுடன் கூடிய கலாசாரத்தில் வாழவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். வரி தொடர்பான ஆவணங்கள் எதுவுமின்றியும், வரி எவ்வாறு அறவிடப்படுகின்றது என்பதை அறியாத பலர் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரி ஆலோசகர்கள் இருக்கின்றனர், அவர்கள் உங்களின் வரி நிலுவை ஆவணங்களைப் பரிசோதித்து நீங்கள் அவற்றை செலுத்தத் தேவையில்லை என கூறுவார்கள். சிகரெட், மதுபானம் அல்லது பொருட்களுக்காக வரி செலுத்துகின்ற சாதாரண மக்கள் அவ்வாறு இல்லை என அவர் சுட்டிக்காட்டுகிறார்.

தானியங்களை இறக்குமதி செய்துவிட்டு நீங்கள் வரி செலுத்துவதில்லை. அவர்களில் யார் இவ்வாறு செய்கின்றனர் என்பதை நாம் அறிவோம். கடந்த காலங்களில் அரசாங்க விநியோகஸ்தர்களே இறக்குமதியாளர்களாகவும் இருந்தனர்.

ஆனால் இப்போது நாம் வாகனங்களை பரிசோதித்து தரமானவற்றை தீர்வை செலுத்தியே கொண்டுவருகின்றோம். இந்த கலாசாரம் மாற்றமடைந்து வருகின்றது.

இந்த செயலமர்வில் வர்த்தக துறைசார்ந்த பிரபல உறுப்பினர்கள் உட்பட சுமார் ஆயிரத்து 300 பேர் கலந்துகொண்டிருந்தனர்.

# புத்தளம் வாவியில் மின் கம்பங்கள் கடற்றொழிலுக்கு இடஞ்சல்

## மீனவர்கள் திரண்டு போராட்டம்



(கொழும்பு)

நுரைச்சோலை அனல்மின் நிலையத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்காக புத்தளம் வாவியில் அதிவலு மின கம்பங்கள் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்து புத்தளத்தில் மீனவர்கள் மற்றும் பொது மக்கள் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

புத்தளத்திலுள்ள மூன்று மீனவச் சங்கங்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தனர். நேற்று முன்தினம் ஜும்ஆத் தொழுகையினைத் தொடர்ந்து புத்தளம் கடற்கரை வீதியில் ஒன்று கூடிய ஆயிரக்கணக்கான மீனவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்திலிருந்து புத்தளம் ஏரயினூடாக மின்சாரத்தினை வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான மின் கம்பங்கள் புத்தளம் வாவியில் நிறுவப்பட விருப்பதால் அது தங்களது மீனவத் தொழிலுக்குப் பெரும் பாதிப்பாக அமையும் எனத் தெரிவித்தே அவர்கள் இந்த ஆர்பபாட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தளம் இபுனு பதூதா வீதியில் மீனவர்கள் வீதியை மறித்து மீனவப்படகுகளையும் வள்ளங்களையும் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு படகு ஒன்றும் வள்ளம் ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் வடமேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாசும் கலந்துகொண்டார்.

இந்த திட்டத்திற்கு தாம் எதிர்ப்பில்லை எனவும், தமது தொழிலுக்குப் பாதிப்பில்லாத வகையில் வேறு வழியில் இந்த அதிவலு மின் கம்பங்களை அமைப்பதற்கு தாம் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.






திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லத்தில் தீபாவளி தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இதில் செயலாளர் தி.செல்வமனோகரன் உரையாற்றுவதையும், சிறார்களின் கலைநிகழ்வினையும், விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (சி)

# போக்குவரத்து சபை ஊழியர் மாயம் நட்டஈடு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடமை நேரத்தில் காணாமற் போன இலங்கை போக்குவரத்து சபையின் நடத்துனர் குறித்து மனித உரிமை ஆணைக்குழுவில் செய்த முறைப்பாட்டிற்கான தீர்வு விரைவில் எட்டப்பட்டு குடும்பத்தினருக்கான நஷ்டஈடு கிடைக்கப் பெறும் என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

2007ஆம் ஆண்டு குறிகாட்டுவானுக்கு கடமையின் நிமித்தம் சென்ற இ.போ.ச.நடத்துனர் காணாமற் போயிருந்தார். இவரது விசாரணைகள் 2010ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு அவரது குடும்பத்தினருக்கு நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இவருடன் இணைந்த வகையில் காணாமற் போன தபால் ஊழியரின் குடும்பத்திற்கு ஓய்வூதியம் வழங்க ஏற்பாடான நிலையில் இந்த நடத்துனரின் சம்பளக் கொடுப்பனவு குறித்து நாம் அறிக்கைகளை சமர்ப்பித்து அதன் இறுதிக்கட்டம் வரை



வந்துள்ளோம். இதற்கான முடிவினை மிக விரைவில் நாம் பெற்றுக் கொடுப்போம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ)

# விஞ்ஞான பட்டமாணி மீள் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் விஞ்ஞானப் பட்டமாணி நிகழ்ச்சித்திட்டத்திற்கு (B.S.c. degree Programme) மீள் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பட்டமாணிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரிய நிலையில் விண்ணப்பிக்கத் தவறிய ஆர்வமுடையோருக்கு மீள் சந்தர்ப்பமளிக்கும் நோக்குடன் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை விண்ணப்பித்து புதிய பதிவினை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே 18 வயதினைப் பூர்த்தி செய்த க.பொ.த.உயர்தரத்தில் உயிரியல் மற்றும் கணிதவியல் பிரிவுகளில் எத்தனை தடவைகளிலேனும் 3 சித்திகளைக் கொண்டுள்ளவர்கள் யாழ்.பிராந்திய நிலையத்தில் மேற்குறிப்பிட்ட திகதிகளிற்கிடையில் பதிவினை மேற்கொள்ளலாம்.

இது தொடர்பிலான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்.பிராந்திய நிலையத்திற்கு தொடர்பினை ஏற்படுத்துமாறு யாழ்.பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# கலை நிகழ்வுகள்

வரணி பகுதியில் உள்ள 10 முன் பள்ளிகளைச் சேர்ந்த சிறார்களின் கலை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை வரணி இயற்றாலை ரட்ணா முன்பள்ளியில் நடைபெற்றது. தென்மராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் பாக்கியராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் வரணி பிரதேசத்தைச் சேர்ந்த 10 முன் பள்ளிகளின் சிறுவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (130)

# நபருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் தனது தந்தையை கொலை செய்தார் என சந்தேக நபரின் மனைவி செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

தந்தையை தனது கணவரே தாக்கியதாகவும் தாக்குதலினாலேயே மரணம் ஏற்பட்டதாகவும் மனைவி தெரிவித்துள்ளார். பிரேத பரிசோதனை அறிக்கையில் சுகவீனமுற்ற மாமனாரை தாக்கியதில் ஏற்பட்ட நெஞ்சுவலி, மாரடைப்பு காரணமாகவே, உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது மேலதிக விசாரணைகளுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (170)

# திருட்டு முயற்சி முறியடிப்பு

(ஏழாலை)

ஏழாலை மேற்கு சாடியடி கன்னிமார் ஆலயத்தில் திருட்டு முயற்சி பூசகரின் நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது. ஆலய வளாகத்தில் அமைந்துள்ள சரஸ்வதி சனசமூக நிலைய கட்டட அறையில் வைக்கப்பட்டிருந்த ஆலயத்திற்கு சொந்தமான குத்துவிளக்குகளை வியாபாரி போல் நடமாடிய இளைஞர் ஒருவர் திருடிக் கொண்டிருந்த போது பொதுமக்களின் உதவியுடன் பிடிக்கப்பட்டார். (66)

# அலுமினியம் பொருத்துதல் விண்ணப்பம் கோரல்

(வடமராட்சி)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் அலுமினியம் பொருத்துதல் தொழில் பயிற்சிக் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் கரவெட்டி பிரதேச செயலகத்தில் திறன் அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்புகொண்டு இம்மாத இறுதிக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பயிற்சியில் கலந்துகொண்டு கற்கை நெறியை பூர்த்தி செய்பவர்களுக்கு (NVQ) தரச் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் தொழில் தகைமை தொடர்பான ஆலோசனைகளைப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (116)

# வீதி திருத்தும் பணி நிறைவு

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட தர்மகேணி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள சின்னதாளையடி புகையிரத பாதையை அண்மித்த வீதி திருத்தும் பணி நிறைவுபெற்றுள்ளது.

இவ்வீதியானது புகையிரத பாதையைவிட 2அடி பள்ளமாக காணப்பட்டது. உயரம் குறைவாக காணப்பட்டதனால் பொதுமக்கள் வீதியை கடப்பதற்கும், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்களில் செல்வதற்கும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இப்பகுதி பொதுமக்கள், பொது அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து புகையிரத திணைக்களம் வீதியினை திருத்தி மக்கள் பாவனைக்கு ஏற்றவகையில் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (130)

# விநாயகர் விரதபூசை

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரத பூசைகள் கடந்த 18ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இதில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் கஜமுக சூர சம்கார நிகழ்வு இடம்பெறும். மறுநாள் 8ஆம் திகதி காலை 7.30 மணிக்கு கணபதி ஹோமம் இடம்பெறும். விரத நாட்களில் ஆலயத்தில் தினமும் மு.ப.10 மணிக்கு அபிஷேகம், மணிப்பூசை, புராண படனம் என்பனவும் இடம்பெற்று வருகின்றது. (104)

# முரசின் இன்றைய பலன்



(24.11.2013 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 08 ஆம் திகதி.
ஆறுமுகநாவலர் குரு பூசை. ஆயிலிய நட்சத்திரம் பி.இ. 03.59 வரை.
பின் மகம். மரணயோகம்/ஷஷ்டி.
இராகுகாலம் 04.41 - 06.11 வரை. சுபநேரம் 09.11 - 10.41 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அனுபவமில்லாத தொழிலில் இறங்கி நட்டம் ஏற்பட்டதால் தவிப்பு, 'உடல் மொழி' மூலமாக பிறரை வசயப்படுத்தி காரியத்தைச் சாதித்துக் கொள்ளல். |
| ரிஷபம் | கொளுவிவிட்டு கூத்துப்பார்க்க நினைத்தவருக்கு கேடு சூழல், பதின்ம வய்து பெண் பிள்ளையை சிநேகித பூர்வமாக ஆளுமை செய்து வழிநடாத்த முற்பட்டதால் தவறு ஏற்படாமை. |
| மிதுனம் | மனை விற்க முயல்கையில் விலைப் பிரச்சினையால் தடுமாற்றமடைதல், பலவீனத்தைத் தொலைத்துவிட்டு பலமாக செயற்பட்டதால் காரியசித்தயடைதல். |
| கடகம் | பொருளை அபகரிக்கும் கபட நோக்கத்தால் அன்பு காட்டி அரவணைத்தல், கானல் நீரை நிஜமென்று நம்பி ஏமாற்றமடைவது போல நண்பரின் வார்த்தைகளை கேட்டு மோசமுக்குள்ளாதல். |
| சிம்மம் | மனைவி வழி உறவினரின் தலையீட்டினால் குடும்பத்தில் பிரச்சினை உருவாதல், அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்குப்போல ஒற்றுமையுடன் செயற்பட்டதால் பிரச்சினை சுமுகமாக முடிவடைதல். |
| கன்னி | இலக்கினை நோக்கிச் செல்கையில் எதிர்ப்பட்ட தடைகளை தவிடுபொடியாக்கல், தொலைபேசியில் உண்மையான தகவல் என நம்பியமை பின்னர் பொய்த்துப்போனமை. |
| துலாம் | பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக செயல் மாறியதால் அதிர்ச்சிக்குள்ளாதல், உங்கள் புதுக்கருத்தினை செயற்படுத்த சகபாடிகள் விரும்பாமை. |
| விருச்சிகம் | தும்புசார் உற்பத்தி கைப்பணிப்பொருட்கள் விற்பனையாகாது தேங்குவதால் கவலை, தன்னம்பிக்கை, விடாமுயற்சியால் போட்டிகளில் வெற்றிவாகை சூடல். |
| தனுசு | தொழிற்கல்வி கற்கைநெறிக்கு பிரவேசப்பணம் கூடிக்காணப்படுவதினால் மாணவர் வரவு குறைதல், கருத்துப்பரிமாற்றத்தில் உங்களுக்கும் உங்கள் கருத்துக்களை பெறுகின்றவருக்கும் வெற்றி கிட்டுதல். |
| மகரம் | முற்றாகும் நிலையில் காணப்பட்ட விவாகம், துக்க சம்பவத்தால் பிற்போடல், அச்சுக்கோப்புக் கலையை விடுத்து வருமானத்திற்காக வேறு தொழில் களை நாடவிழைதல். |
| கும்பம் | 'எழுகை' அமைப்பின் மூலம் பார்வையற்றோர் உலருணவுப் பொருட்கள் பெற்றதால் மகிழ்வு, ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுததுபோல பிறரின் துயரில் குளிர்காய முற்படல். |
| மீனம் | வாகனத்தின் முக்கிய பாகங்கள் இழக்கப்பட்டதனால் உரிமையாளர் விசனப்படல், தீர்வுகளை ஏற்படுத்த கடினமாக இருப்பதினால் இலக்கினுக்கு புது மெருகூட்டமுயலல். |



# கிளார்க், வோர்னர் சதம்

## தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்து போராட்டம்

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான ஆஷஸ்தொடரின் முதலாவது போட்டியில் தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்து அணி போராடிவருகின்றது. இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணி களுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரின் முதலாவது ஆட்டம் அவுஸ்ரேலியாவின் பிறிஸ்பேனில் நடைபெற்று வருகின்றது.

இரண்டாவது இனிங்ஸிற்காக விக்கெட் இழப்பின்றி 65 ஓட்டங்களைப் பெற்றவேளை, மூன்றாம்நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. ஆட்டம் ஆரம்பமாகி சில ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் அவுஸ்ரேலிய அணியின் முதலிரு விக்கெட்டுக்கள் விரைவாகச் சாய்க்கப்பட்டன. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக டேவிட் வோர்னருடன் இணைந்து கப்டன் கிளார்க் அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் ஆடினார். இந்த ஜோடி இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர்களை பிளந்துகட்டி ஓட்டங்களை வாரிக்குவித்தது. இந்த ஜோடியைப் பிரிக்க இங்கிலாந்துக் கப்டன் குக் பெரும் முயற்சியை மேற் கொண்டார். ஆனால், எந்த முயற்சியும் அவருக்கு உரிய பலனைக் கொடுக்கவில்லை. மறுபுறத்தில் பந்து வீச்சாளர்களின் வியூகத்திற்குள் சிக்கிக்கொள்ளாத இந்த ஜோடி சிறப்பாக ஆடியது. இதன் பயனாக கிளார்க், வோர்னர் ஆகியோர் சதங்களைப் பெற்றுக்கொண்டனர். இந்நிலையில் 158 ஓட்டங்களைப் பெற்றவேளை இந்த ஜோடி ஒரு வழியாகப் பிரிக்கப்பட்டது.தொடர்ந்து களமிறங்கியவர்களும் தங்கள் பங்கிற்கு ஓட்டங்களை வாரிக் குவித்தனர். இறுதியில் அவுஸ்ரேலிய அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 401 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் கப்டன் கிளார்க் 130 பந்துகளை எதிர்கொண்டு 9 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 113 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் கிளார்க் பெற்ற 25ஆவது சதமாக இது அமைந்தது. 154 பந்துகளை எதிர்கொண்ட டேவிட் வோர்னர் 13 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக 124 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் வோர்னர் பெற்ற நான்காவது சதமாக இது அமைந்தது. மற்றும் ஹடின் 53, ஜோர்ஜ் பெய்லி 34, ஜோன்சன் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரெமில்ற் மூன்று, ஸ்ருவெட் புறொட், ஸ்வான் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 561 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் இங்கிலாந்து அணி, அவுஸ்ரேலிய அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறி வருகின்றது. நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸிற்காக இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கப்டன் குக் 11, கெவின் பீற்றர்சன் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர். பந்து வீச்சில் ஜோன்சன், ஹரிஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தியுள்ளனர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும். இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 136. அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 295.

# கவலையில் பிராவோ

காயம் காரணமாக இந்தியாத் தொடரிலிருந்து விலகியுள்ள கிறிஸ் கெய்லின் இழப்பு எங்கள் அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கப்டன் டுவைன் பிராவோ தெரிவித்துள்ளார்.

கிறிஸ் கெய்ல் காயம் அடைந்தது இந்திய பயணத்தில் எங்களுக்கு நடந்த மோசமான காரியமாகும். அவர் எங்கள் அணியின் சிறந்த வீரர். கெய்ல் எஞ்சிய ஆட்டங்களில் ஆடாதது எங்கள் அணிக்கு பெரும் பின்னடைவாகும். ஆடுகளம் இரு அணிக்கும் ஒரே மாதிரி தான் இருந்தது. நாங்கள் உத்வேகத்தை இழந்து விட்டதாக நினைக்கிறேன். இந்திய பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசினார்கள். நாங்கள் எடுத்த 211 ஓட்டங்கள் வெற்றிக்கு போதுமானது கிடையாது. எங்களது துடுப்பாட்ட வீரர்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ப விளையாடவில்லை. நாங்கள் துடுப்பாட்டத்தில் கூடியகவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வென்றார் ஜோகோவிச்

(வோஷிங்டன்)

கண்காட்சி ரென்னிஸ் போட்டியில் ஜோகோவிச்சிடம் தோல்வி அடைந்தார் நடால்.

சிலி நாட்டின் ரென்னிஸ் வீரர் நிக்கோலஸ் மாசூ (வயது- 34). ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் (2004) ஒற்றையர், இரட்டையர் பிரிவில் தங்கம் வென்றவர். கடந்த ஓகஸ்டில் ஓய்வு பெற்றார். இவரை கௌரவிக்கும் விதமாக, சேர்பியாவின் ஜோகோவிச், உலகின் முதல்நிலை வீரர் ஸ்பெயினின் நடால் கண்காட்சி போட்டியில் விளையாடினர். டை-பிரேக்கர் வரை சென்ற இதன் முதல் செட்டை 7-6 என கைப்பற்றிய ஜோகோவிச், இரண்டாவது செட்டையும் 6-4 என தன்வசப்படுத்தினார். முடிவில், ஜோகோவிச் 7-6, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இந்த இரு வீரர்களும் மோதும் மற்றொரு கண்காட்சி போட்டி இன்று ஆர்ஜென்ரீனாவில் இடம்பெறவுள்ளது..

# சமநிலையில் ருவென்ரி - 20 தொடர்



(கேப்டவுன்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது ருவென்ரி-20 போட்டியில் ஆறு ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி, மொகமட் ஹபீஸ், உமர் அக்மல் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமட் ஹபீஸ் 63, உமர் அக்மல் 64 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரெய்ன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு177ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, ஆரம்பத்தில் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. ஆனால், பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிய தென்னாபிரிக்க அணி தடுமாறியதுடன் மந்தமாக ஓட்ட எண்ணிக்கையைப் பெற்று வந்தது. இறுதி வேளையில் டுமினி அதிரடியாக ஆடியபோதும் வெற்றிக்கு அருகில் நெருக்க முடிந்ததே ஒழிய, தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. இறுதியில் தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் டுமினி 47, அம்லா 48, டேவிட் மில்லர் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அப்ரிடி மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 சமநிலையில் நிறைவுற்றது. போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை மொகமட் ஹபீஸ் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் இன்று கேப்டவுனில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சரிந்தது சதுரங்க சாம்ராச்சியம்



நோர்வேயின் சதுரங்க வீரர் மேக்னஸ் கார்ல்சன் உலக சதுரங்க சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

2007ஆம் ஆண்டிலிருந்து உலக சதுரங்க சம்பியனாக இருக்கும் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்தை, 22 வயதான மேக்னஸ் கார்ல்சன் தோற்கடித்தார்.

சென்னையில் நடைபெற்ற இச்சதுரங்கப் போட்டி 12 சுற்று ஆட்டங்களைக் கொண்டது. நேற்று முன்தினம் வரை நடைபெற்ற 9 சுற்றுகளின் முடிவில் கார்ல்சன் 6-3 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தார். எனவே, எஞ்சியுள்ள 3 சுற்றுகளில் ஒரு சுற்றில் சமநிலை செய்தாலே சம்பியன் பட்டத்தை கைப்பற்றும் வாய்ப்பு அவ ருக்கு இருந்தது. அதேசமயம் விஸ்வநாதன் ஆனந்த், தொடர்ந்து 3 சுற்றுகளிலும் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். அப்படியே வென்றாலும் டைபிரேக்கர் பந்தயத்தில்வென்றால்தான் பட்டத்தை வெல்லமுடியும் என்ற நிலை இருந்தது. இந்த பரபரப்பான சூழ்நிலையில் நேற்று 10ஆவது சுற்று ஆட்டம் நடைபெற்றது. கடும் நெருக்கடியுடன் ஆடிய ஆனந்த், கார்ல்சனின் நகர்த்தலுக்கு சரியான பதிலடி கொடுத்து முன்னேறினார். ஆனால், அவரால் வெற்றியை நெருங்க முடியவில்லை. நீண்ட போராட்டத்திற்குப் பின்னர் போட்டியை சமநிலை செய்ய இருவரும் ஒப்புக்கொண்டனர். இதனால் இருவருக்கும் தலா அரை புள்ளி வழங்கப்பட்டது.

இதன்மூலம் 6.5 புள்ளிகள் பெற்ற கார்ல்சன் முதல் முறையாக உலக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். அவருக்கு 8 கோடியே 40 இலட்சம் பரிசாக வழங்கப்படுகிறது. விஸ்வநாதன் ஆனந்துக்கு ரூ5 கோடியே 60 இலட்சம் வழங்கப்படும். பத்தாவது சுற்று முடிவில், 3 வெற்றி, 7 சமநிலை செய்து, பட்டத்துக்கு தேவையான 6.5 புள்ளிகள் பெற்று விட்டதால், கார்ல்சன் புதிய உலக சம்பியனாக உருவெடுத்தார். மீதமுள்ள 2 சுற்றுக்கு அவசியமில்லாமல் போனது. முதன் முறையாக சொந்தமண்ணில் களமிறங்கிய ஆனந்த், 3.5 புள்ளிகள் மட்டும் பெற்று, மகுடத்தை இழந்தார்.

நோர்வே கிராண்ட் மாஸ்டர் கார்ல்சன், தனது 22ஆவது வயதில் முதன்முறையாக உலக சம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் குறைந்த வயதில் உலக சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய ரஷ்ய கிராண்ட் மாஸ்டர் கேரி காஸ்பரோவ் சாதனையை சமன் செய்தார். கடந்த 1983இல் முதன்முறையாக பட்டம் வென்ற காஸ்பரோவ், தனது 22ஆவது வயதில் உலக சம்பியன் ஆனார்.




ஆரம்ப நிகழ்வில் வீரர்கள் அணிவகுத்து வருவதையும், போட்டி ஒன்றில் இரு அணிகள் மோதுவதையும் காணலாம்

# வட-கிழக்கு அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்து
# முதல் நாள் போட்டிகளில் வென்ற அணிகள்

(மன்னார்)

மன்னார் கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்டு வரும் வடக்கு-கிழக்கு அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்ட தொடரின் இரண்டாவது சுற்றுக்கு மன்னார் சாவற்கட்டு கில்லறி, பள்ளிமுனை சென். லூசியா, அடம்பன் செந்தாமரை, தோட்டவெளி ஐக்கியம், நாவாந்துறை சென். மேரிஸ் அணிகள் முன்னேறியுள்ளன.

மன்னார் பனங்கட்டிக்கொட்டை பிறப்பிடமாகக் கொண்ட அமரர்களான திரு. திருமதி மருசலின்

அந்தோனியப்பிள்ளை பியூஸ்லஸ் அவர்களின் ஞாபகார்த்தத்திற்கான வடக்கு - . கிழக்கு மாகாண கால்பந்து அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது .

மன்னார் பனங்கட்டிக்கொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது .

வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 30இற்கும் மேற்பட்ட அணிகள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

விலகல் முறையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இன்றைய தினம் இடம்பெறவுள்ளன. இதில் முதல் நாள் போட்டியில் வெற்றியீட்டிய அணிகளின் விபரம் வருமாறு:

முதல் போட்டியில் பருத்தித்துறை நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து மன்னார் சாவற்கட்டு கில்லறி அணி மோதியது. இதில் சாவற்கட்டு கில்லறி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

பள்ளிமுனை சென். லூசியா அணிக்கும், வவுனியா யுனிபைட் அணிக்குமிடையில் இடம்பெறவிருந்த போட்டியில் யுனிபைட் அணி சமூகமளிக்காததால் சென். லூசியா அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதேபோன்று அடம்பன் செந்தாமரை அணிக்கும், வவுனியா யங்ஸ்ரார் அணிக்குமிடையில் இடம்பெறவிருந்த போட்டியில் யங்ஸ்ரார் அணி சமூகமளிக்காததால் செந்தாமரை அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

தொடர்ந்து இடம்பெற்ற போட்டியில் மன்னார் தோட்டவெளி ஐக்கியம் அணியும், மன்னார் பெரிய கமம் எவர்கிறீன் அணியும் மோதின. இதில் தோட்டவெளி ஐக்கியம் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

நாவாந்துறை சென். மேரிஸ் அணிக்கும், கற்கடந்தகுளம் சென். ஜோசப் அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். மேரிஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

முதல் நாள் போட்டி நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம், வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி வி. சத்தியலிங்கம், வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா . டெனிஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் எம் . எம் . சியான், மன்னார் நகரசபை தலைவர் எஸ். ஞானப்பிரகாசம், நானாட்டான் பிரதேச சபை தலைவர் அன்புராஜ் லெம்பேட், அருட்தந்தை அகஸ்ரின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சமநிலை

(உரும்பிராய்)

இளவாலை ஹென்றிஸ், மயிலங்காடு ஞானமுருகன் அணிகளுக்கிடையிலான போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் யாழ்ப்பாணத்துக்கால்பந்து சமர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இளவாலை ஹென்றிஸ் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இரு அணிகளும் பலம்பொருந்திய அணிகள் என்பதால் இப் போட்டி பரபரப்பிற்கு பஞ்சமிருக்காத ஆட்டமாக இருக்கும் என இரசிகர்கள் எதிர்பார்த்தனர். இதற்கமைய இரு அணிகளும் தமது முழுப்பலத்தையும் பிரயோகித்து முட்டிக் கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் போட்டு சமபலசாலிகள் என்பதை நிரூபித்தன. இதன் காரணமாக இரு அணிகளுக்கும் ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டன. (93)

## தபாற்திணைக்களம் சம்பியன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணக் கால்பந்துத் தொடரில் தபாற்திணைக்களம் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் அண்மையில் உடுப்புக்குளம் அலை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.


இதில் பல அரச திணைக்கள அணிகள் பங்குகொண்டன. இருப்பினும் இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு உள்ளூராட்சி திணைக்கள அணியும், தபாற்திணைக்கள அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தபாற்திணைக்கள அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இதேவேளை,பெண்களுக்கானவலைப்பந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு வலயம் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. உடுப்புக்குளம் அலை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் முல்லைத்தீவு வலய அணியும் வெலிஓயா பிரதேச செயலக அணியும் மோதின. இதில் முல்லைத்தீவு வலய அணி 19-11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இதேவேளை, ஏனைய போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(93)

# மாகாண மட்ட கராத்தே போட்டி
# 7 பதக்கம் வென்ற நாச்சிக்குடா பாடசாலை



(கிளிநொச்சி)

வடக்கு மாகாண வீர,வீராங்கனைகளுக்கிடையிலான மாகாண கராத்தே போட்டியில் நாச்சிக்குடா அமெரிக்கன் முஸ்லிம் தமிழ்க் கலவன் பாடசாலை வீரர்கள் மூன்று தங்கம் உட்பட ஏழு பதக்கங்களை வென்றுள்ளனர்.

இலங்கை கராத்தே சம்மேளத்தினால் நடாத்தப்பட்ட வடக்கு மாகாண கராத்தே போட்டி அண்மையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கிளி. நாச்சிக்குடா அமெரிக்கன் முஸ்லிம் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த வீரர்கள் பலர் பங்குகொண்டனர்.

இதில் 12 வயதுப் பிரிவிற்குட்பட்டோருக்கான குழுக் காட்டாப் போட்டியில் செ. லக்ஷியா, மு. நிஸ்கான், ச. பவின்ராஜ் தங்கப் பதக்கத்தையும், 13 வயதிற்குட்பட்டோருக்கான தனிக் காட்டாப் போட்டியில் மு. ரஸ்லான் தங்கப் பதக்கத்தையும் 17 வயதிற்குட்பட்டோருக்கான குமித்தே போட்டியில் க. மயூரன் தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

மற்றும் 15 வயதிற்குட்பட்டோருக்கான குமித்தே போட்டியில் யூ. டிலஷன் வெள்ளிப் பதக்கத்தையும், ஏ. கெர்போம், லி.பதுர்ஷன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். 21 வயதுப் பிரிவிற்குட்பட்டோருக்கான குமித்தே போட்டியில் எஸ். தியான் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றார். பதக்கங்களை வென்ற வீரர்கள் பாடசாலைச் சமூகத்தினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை, இப்பாடசாலையின் பிர தம கராத்தே ஆசிரியராக மயூரன் கடமையாற்றி வருகின்றார். இவர் குயூறியோ கராத்தே கழகத்தை நாச்சிக்குடா வில் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)

## இன்று 2ஆவது ஒரு நாள்

இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டி இன்றைய தினம் பி.ப. 1.30 மணிக்கு விசாகபட்டினத்தில் நடைபெறவுள்ளது. முதல் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்தியை புறக்கணிக்கும் பகிஷ்கரிப்பு அரசியல்

– சாலையூரான் –

வடக்கு தமிழர்களை தனியாக பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை தேர்தலுக்குப்பிறகு தமிழ் தேசியத்தின் பெயரால் மூன்று பிரதான பகிஷ்கரிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன.

இதில் முதலாவது மாகாண முதலமைச்சர்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பை முதல்வர் விக்னேஸ்வரன் தவிர்த்திருப்பது, இரண்டாவது கொழும்பு பொதுநலவாய மாநாட்டை தமிழ் கூட்டமைப்பு புறக்கணிக்கும் தீர்மானம், மூன்றாவது யாழ் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தை தமிழ் கூட்டமைப்பினர் பகிஷ்கரித்திருப்பது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்குப்பிறகு உருவான இந்த மாகாண சபை முறையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணசபைகளில் அரசுத் தரப்பு வெற்றி பெற்றிருக்கும் நிலையில் தேவையான திட்டங்களை முன்மொழிவது, அதற்கான நிதிகளை பெற்றுக்கொள்வதில் இந்த மாகாண சபைகளுக்கு மத்தியை நோக்கி குறிப்பிடத்தக்க முரண்பாடுகள் இதுவரை பெரிதாக இல்லை என்றே கூற வேண்டும்.

ஆனால் குறிப்பாக வடக்கு மாகாண சபையை பொறுத்தவரை இதுவிடயத்தில் பிரச்சினைகள் இருக்கின்றன என்பது உண்மையே. இருப்பினும் இடம்பெற்றுள்ள இந்த மூன்று பகிஷ்கரிப்புக்களும் என்ன விளைவுகளை தமிழர் நலன்சார்ந்து ஏற்படுத்தியிருக்கின்றன என்பது கவனத்துக்குரிய விடயமாகும்.

மக்கள் மனங்களில் அரசை நோக்கி இருக்கும் அதிருப்தி மற்றும் அழுத்தங்களின் வெளிப்பாடாக இந்த பகிஷ்கரிப்பு அரசியல் எமது தமிழ் தலைவர்களால் அவ்வப்போது முன்னெடுக்கப்படுகிறது.

மக்களின் பெயரால் விடுக்கும் தமது வேண்டுதல்கள் அரசிடமிருந்து தமது மக்களுக்கு கிடைக்கிறதோ இல்லையோ தமது கட்சியை அல்லது அமைப்பை வலுப்படுத்திக்கொள்வதற்கான ஒரு சிறந்த வழிமுறையாக இந்த பகிஷ்கரிப்பு அரசியல் தலைவர்களால் உணரப்பட்டு அவ்வப்போது கையாளப்பட்டு வந்திருக்கிறது.


நடப்பு நிலவரத்துக்கு வருவோம். வடக்கு மாகாண சபை எதிர்கொள்ளும் குறிப்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை

ஆராய்வதில் ஏனைய மாகாண சபை முதல்வர்களுக்கு மத்தியில் அரசை நோக்கி ஒருமித்த கருத்து நிலவும் என்பது நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதே.

இருப்பினும் வடக்கு தமிழர்கள் மீதான தமது நிலைப்பாட்டையும் அதற்கான திட்டங்களையும் முன்மொழிய வேண்டிய நிர்ப்பந்தம் ஓரளவுக்காவது இந்த மாகாண முதல்வர்களுக்கும் இருக்கின்றது என்ற வகையில் வடக்கு முதல்வருக்கு இது முக்கியமான ஒரு சந்திப்பாகும்.

கூடவே இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்றுவது, முறையான மீள் குடியேற்றம், காணாமற் போனவர்களின் பிரச்சினை, போரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு தீர்வைப் பெற்றுக்கொடுத்தல் என்ற வகையில் மாகாண முதல்வர்களின் இந்த சந்திப்பு வடக்கு முதல்வரை பொறுத்தவரை மிக அவசியமான ஒன்றாகும்.

இதனைவிட தமிழ் கூட்டமைப்பினர் அதிகூடுதல் வாக்குகளால் இறுதிப் பெரும்பான்மையை பெற்றிருக்கும் சூழலில் வடக்கு முதல்வரின் நியாயமான கோரிக்கைகளுக்கு இந்த சந்திப்பில் எவ்வாறு பதிலளிப்பது என்பது அரசு தலைவர்களுக்கும் மாகாண முதல்வர்களுக்கும் ஒரு பிரச்சினையாக இருந்த நிலையில் வடக்கு முதல்வர் இந்த சந்திப்பை தமிழ் மக்களின் நலனில் இருந்து சாதகமாக பயன்படுத்தியிருக்க முடியும்.



ஆனால் அந்த முதல்வர்கள் சந்திப்பை, சிகிச்சைக்கு வைத்தியசாலை சென்றதாக கூறி வடக்கு முதல்வர் தவிர்த்துக் கொண்டார்.

வடக்கு மக்களின் நிலைமையை உலகத்தலைவர்களின் முன் கொண்டு செல்லல், போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசியமான திட்டங்களை முன்மொழிதல், வடக்கில் இந்தியாவின் தொடர் உதவித்திட்டங்களை சீராக வழிப்படுத்தல் இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் பங்களிப்பை முழுமையாக பெற்றுக்கொள்ளல் என்ற ரீதியில் கொழும்பு பொதுநலவாய மாநாடு வடக்கு மாகாண சபையை பொறுத்தவரை மிக அவசியமான ஒரு அரசியல் மேடையாகும்.

ஆனால் இந்த பொதுநலவாய மாநாட்டுக்கான தமது புறக்கணிப்பை தமிழ் மக்களின் ஏகோபித்த நிலைப்பாடாக வெளிப்படுத்திக்கொண்டு அந்த மாநாட்டில் கலந்துகொள்ளாமல் விட்டதை தன்மானத் தமிழினத்தின் மிகச்சிறந்த ஒரு நடவடிக்கையாக இப்போதும் தமிழ் கூட்டமைப்பினர் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமரின் பிரசன்னத்தையும் வலியுறுத்தாததன் மூலம், அதன்வழி போரின் பாதிப்புக்களுக்காக இந்தியா வடக்கு மக்களுக்காக வழங்க இருந்த மேலதிக உதவிகளை தட்டிக்கழித்த பெருமையும் இந்த வடக்கு மாகாண சபைக்கே இப்போது வந்து சேருகிறது.

யாழ்மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்துக்கு வருவோம். வடக்கு மாகாண சபைக்கான நிர்வாகச் செலவினங்களுக்காக 584 மில்லியன் ரூபாவையும் மாகாண அமைச்சுக்கான ஒதுக்கீடாக 1026 மில்லியன் ரூபாவையும் இந்த மாகாணத்துக்கான விசேட வேலைத் திட்டங்களுக்கான நிதியாக 15420 மில்லியனையும் அரசாங்கம் ஒதுக்கியிருப்பதை இந்த குழுக் கூட்டத்தில் யாழ் அரச அதிபர் அறிவித்திருக்கிறார்.

இந்த மூன்று ஒதுக்கீடுகளில் முதலிரண்டும் மாகாண சபையில் பல்வேறு பதவிகளை வகிக்கும் அதன் உறுப்பினர்கள், அதிகாரிகளது மாதச் சம்பளங்கள் போக்குவரத்துச் செலவினங்கள் இதர நிர்வாகச் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளாகும். மற்றையது, விவசாயம், கைத்தொழில், குடியிருப்புக்கள், பொருளாதார உட்கட்டுமானங்கள், போக்குவரத்து, உட்கட்டமைப்பு வசதி, குடிநீர் போன்றவற்றுக்கான ஒதுக்கீடாகும்.

சாராம்சத்தில் இந்த நிதி ஒதுக்கீடுகள் தமிழ் மக்களிடமிருந்து பெற்ற ஆணையின் பெயரால் அந்த மக்களின் நலமேம்பாட்டுக்காக மாகாண சபை உறுப்பினர்கள் ஆற்றும் ஊழியத்துக்காகவும் அதன்வழி அவர்கள் முன்னெடுக்கும் நலத்திட்டங்களுக்காகவும் அரசு வழங்கியுள்ள நிதியாகும்.

எதிர்காலத்தில் வடக்குமாகண சபை முன்னெடுக்கவுள்ள திட்டங்களுக்கான தனது நிதி வழங்கீட்டை அரசின் சார்பாக யாழ் அரச அதிபர் இந்த குழுக் கூட்டத்தில் அறிவித்திருக்கிறார்.

இந்த நிலையில் வடக்குமாகாண சபை இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை முற்றாக பகிஷ்கரித்திருக்கிறது. வடக்கு மக்கள் போர்ச் சூழலை எதிர்கொண்டுள்ளதால் அவர்களின் மேம்பாட்டுக்காக விசேட நிதிஒதுக்கீடு வேண்டும் என அறிவித்திருக்கும் வடக்கு முதல்வர் அரசு அனுமதித்துள்ள இந்த நிதி ஒதுக்கீடுகள் எவ்வளவுக்கு போதுமானவை அல்லது இன்னபிற திட்டங்களுக்காக மேலதிகமாக இன்னும் எவ்வளவு நிதி வேண்டும் என்பதை இந்த சந்திப்பில் கலந்துகொண்டு முன்மொழிவது அவசியமானதாகும்.

இதனைவிட வலிவடக்கில் மீள்குடியேற்றத்தின் பேரால் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. காணாமல் போனவர்கள் பற்றி உலகத்தலைவர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்காக முன்னுரிமைப்படுத்த வேண்டிய திட்டங்களை முன்மொழிய வேண்டியிருக்கிறது. இதற்காக யாழ் செயலக மட்டத்தில் அபிவிருத்திக்கான ஆலோசனைகளை அதிகாரிகளுடன் நடாத்தி பொருத்தமான திட்டங்களை இனங்காண வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் வடக்கு மக்கள் விசேடமான பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்பதால் அதற்கு விசேட நிதி ஒதுக்கீடு வேண்டும் என வெளியே கூறிக்கொள்ளும் வடக்கு மாகாண சபை ஆளும்தரப்பு இந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை பகிஷ்கரித்தமைக்கு தமக்கு ஒழுங்கான அறிவித்தல் கிடைக்கவில்லை என இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டிருப்பது கேலிக்குரிய விடயமாகும்.

பெற்றுக்கொண்ட அமோக வாக்குகளின் பெயரால் அம்மக்களை நிர்வகிப்பதற்கான அங்கீகாரம் தமக்கிருப்பதாக கூறிக்கொள்ளும் தமிழ் கூட்டமைப்பினர் இவ்வாறான அபிவிருத்தி குழுக் கூட்டங்களை புறக்கணித்து அம்மக்களின் நாளாந்த வாழ்க்கை நெருக்கடிகளை இனப்பிரச்சினையின் பெயரால் மறுதலிக்க முனைவது அம்மக்களை மேலும் துன்பத்திற்குள் தள்ளி அதன்பெயரால் அரசியல் செய்யும் ஒரு முயற்சியாகும்.

மக்களின் உண்மையான நலன்களில் இருந்து செயற்படுவதென்பது அம்மக்களின் அன்றாட நெருக்கடிகளில் நாமும் எவ்வாறு இணைந்து எதிர்கொள்கிறோம் என்பதை பொறுத்தவிடயமாகும்.

எனவே பிரச்சினைக்கான தீர்வுக்காக பணியாற்றல் எனும் போது இவ்வாறான அபிவிருத்தி குழுக் கூட்டங்களை நாளாந்த வாழ்வில் அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட மக்களின் பிரச்சினை தீர்வுக்காக பயன்படுத்திக்கொள்வது வடக்கு மாகாண சபை நிர்வாகத்தை பொறுத்தவரை இன்றியமையாத செயற்பாடாகும்.

எதிர்கால தேர்தல் வெற்றிகளுக்காக நிகழ்காலத்தில் அம்மக்களின் அவலங்களை கண்டுகொள்ளாது இவ்வாறான சந்திப்புகளை தவிர்ப்பது அம்மக்களின் நலன்களுக்கு விரோதமான செயற்பாடாகவே அமையும் என்பதை தமிழ் கூட்டமைப்பினர் இனிமேலாவது உணர்ந்து செயற்பட முன்வர வேண்டும்.

# பாதாள ரயிலில் படிக்க...

லண்டன் பாதாள ரயில் வண்டிகளில் எழுதப்பட்டுத் தினமும் பல்லாயிரக்கணக்கான பயணிகளால் ரசிக்கப்படும் கவிதைகளின் தொகுப்பு படிக்கக் கிடைத்தது. நிறைய விற்கும் கவிதைத் தொகுப்பு இது. தற்போது இறங்கியிருப்பது பத்தாவது பதிப்பு.

ஏ.கே. ராமானுஜன் மொழி பெயர்த்த 'யாயும் யாயும்' என்று தொடங்கும் குறுந்தொகைக் கவிதை கௌரி ராம் நாராயணனின் முயற்சியால் லண்டன் ட்யூபில் (பாதாள ரயில்) இடம்பெற்றது என்பது சுவாரஸ்யமான செய்தி. கல்கியின் பேத்தியான கௌரி ஹிந்து பத்திரிகையில் கலை, இலக்கியம், நாடகம் பற்றி எழுதும் அருமையான கட்டுரைகளைப் படிக்கும்போது, இவர் ஏன் தமிழில் எழுத மாட்டேன் என்கிறார்? என்று தோன்றும்.

குறுந்தொகைக் கவிதையோடு ஒரு தமிழ்நாட்டுக் கோலமும் இடம்பெற்றிருப்பது இன்னொரு சுவாரஸ்யம். ருக்மணி அம்மாள் வரைந்த கோலம் இது. கௌரியின் பாட்டி, அதாவது அமரர் கல்கியின் துணைவியார்.

கல்கி இங்கிலாந்து போகாவிட்டாலும் அவர் மனைவி வரைந்த கோலம் குறுந்தொகையோடு லண்டன் ரயிலில் பயணம் செய்து கொண்டிருக்கிறது; செய்யும் இனியும்.

'பிரிட்டிஷ் அரச வம்சத்தைப் பற்றிப் படித்தபோது கண்ணில்பட்ட சுவாரஸ்யமான விஷயம். 1653 – இல் முதலாம் சார்ள்ஸ் அரசனின் கழுத்தை வெட்டிக் கொலை செய்ய உத்தரவிட்டுவிட்டு, 'மக்களின் பாதுகாப்பாளன்' என்ற பெயரோடு தடபுடலாகப் பதவியேற்ற கிராம்வெல் ஐந்து வருடமே ஆண்டுவிட்டுப் பிராணனை விட்டதும் மறுபடி முடியாட்சி. பதவியேற்ற இரண்டாம் சார்ள்ஸ் மன்னன் செய்த முதல் காரியம் கிராம்வெல்லின் எலும்புகளைத் தோண்டி எடுத்து சம்பிரதாயமாக அவருக்கு மரண தண்டனை விதித்து அந்த எலும்புகளைக் கொண்டு அதை நிறைவேற்றியது.

அதன் பின் உயிர்ப் பயம் பிரிட்டிஷ் அரசர்களையும் அரசிகளையும் தொடர்ந்து வந்திருக்கிறது. இன்னும் இங்கிலாந்து நாடாளுமன்றத்தைத் தொடங்கி வைத்துப் பேருரையாற்ற ராணியம்மா அங்கே போகும்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரைப் பிணைக் கைதியாகப் பிடித்து வைத்திருந்து, அரசியார் பத்திரமாகத் திரும்பிப் போனதும் விடுவிக்கும் பழக்கம் இருக்கிறதாம்! லண்டன் டைம்ஸ் சொல்கிறதால் நம்பித்தான் ஆக வேண்டும்!

பிணைக் கைதியாகப் பிடித்து வைக்கப்பட்ட உறுப்பினர் அரச ஆடம்பரங்கள் காதில் விழுந்து கழுத்தறுக்காமல் குழந்தையாகப் பாத்ரூமில் உட்கார்ந்து 'ப்ளேபோய்' படித்துக் கொண்டிருக்கலாம்!

('ராயர் காப்பிகிளப்' நூலில் இரா. முருகன்).




# கொஞ்சம் சினிமா!













▶ தனுஷுடன் இணைந்து நடிக்கவிருப்பதை உறுதி செய்தார் அக்ஷரா ஹாசன். கமல்ஹாசனின் மூத்த மகள் ஸ்ருதிஹாசன் தமிழ், தெலுங்கு, ஹிந்தி திரையுலகில் இன்று முன்னணி நடிகை. தங்கை அக்ஷரா ஹாசன் தனது முதல் படத்தை தனுஷுடன் ஹிந்தியில் ஆரம்பிக்கிறார். பால்கி இயக்கத்தில் அமிதாப் பச்சன், தனுஷ், அக்ஷரா ஹாசன் மூவரும் இணைந்து நடிக்கவிருப்பதாக தனுஷ், தனது டுவிட்டரில் செய்தியை உறுதி செய்தார். தனுஷ், அமிதாப், அக்ஷரா, இளையராஜா, பி.சி.ஸ்ரீராம், பால்கி இணைந்திருக்கும் இப்படத்திற்கு, மிகப்பெரிய எதிர்பார்ப்பு உருவாகியிருக்கிறது.

▶ ஹீரோவாக சில படங்களில் நடித்துப் பின் காணாமல் போன ஜெய் ஆகாஷ் திரும்பவும் கோலிவுட்டில் இயக்குநராக களம் இறங்கியிருக்கிறார். "ஆனந்தம் ஆரம்பம்" படத்தில் ஏஞ்சல் சிங், ஸியாகான் ஆகியோருடனும், "லவ் இன் மலேசியா"வில் ஹீரோ, வில்லன் என ஜெய் ஆகாஷ் 2 வேடங்களில் நடிக்கிறார். 14 வருடமாக சினிமாவில் நல்ல இடத்தைப் பிடிக்க போராடி வருகிறேன். என்னை நிலைநிறுத்தவே இயக்கி நடிக்கிறேன் என்கிறார் ஜெய் ஆகாஷ்.

▶ காதல் காட்சி ஒன்றின்போது ஹீரோயின் சோனாக்ஷி சின்ஹா ஹை ஹீல்ஸ் செருப்பை கழற்றி வீசியதில் ஹீரோவுக்கு படாத இடத்தில் அடிபட்டது. ஹீரோ துடித்து விழுந்தது அந்தப் படத்திற்கு விளம்பரமாகியுள்ளது. ஷாஹித் கபூர், சோனாக்ஷி சின்ஹா ஆகியோர் நடிக்கும் இப் படத்தை பிரபு தேவா இயக்கிவருகிறார். பொலிவுட் படவுலகில் இயக்குனர் வரிசையில் தனக்கென ஒரு இடத்தை பிடித்திருக்கிறார் பிரபுதேவா. பிரபல நடிகர்கள் அவரது இயக்கத்தில் நடிக்கவும், கேட்டால் உடனடியாக கால்ஷீட் தரவும் தயாராக இருக்கின்றனராம்.

▶ இளையராஜா, டிசம்பர் 28ஆம் திகதி, மலேசியா கோலாலம்பூரில், பிரமாண்ட இசை நிகழ்ச்சி நடத்துகிறார். 1970 - 80களில் வெளியான, அவரது, ஹிட் பாடல்கள் அனைத்தும், இந்நிகழ்ச்சியில் இடம்பெற இருக்கின்றன. இளையராஜாவை கௌரவிக்கும் வகையில், "கிங் ஒ·ப் த கிங்" என்ற பெயரில், இந்த இசை நிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

▶ நயன்தாரா, அசின் ஆகியோரைத் தொடர்ந்து லட்சுமிமேனன், நஸ்ரியா நஸீம் ஆகிய ஹீரோயின்கள் மலையாளத்திலிருந்து தமிழ் சினிமாவின் முன்னணி இடத்துக்கு போட்டி போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இந்த வரிசையில் மலையாளச் சினிமாவில் முன்னணி இடத்தில் இருக்கும் ஹென்னா இடம் பிடிக்க உள்ளார். புதுமுக இயக்குநர் விஜய்குமார் எழுதி, இயக்கும் "விடியும் வரை விண்மீன்களாவோம்" படத்தின் மூலம் தமிழுக்கு வருகிறார்.

▶ ஹிந்தியில் பல கோடி ரூபா செலவில் எடுக்கப்பட்டு தீபாவளியை முன்னிட்டு உலகம் முழுக்க வெளியான படம் "கிரிஷ் 3". வெளியாகி ஐந்து நாட்களில் 134 கோடி ரூபா வசூல் செய்திருக்கிறதாம். பொலிவுட்டின் பிரபல தயாரிப்பாளரும், நடிகரும், இயக்குனருமான ராகேஷ் ரோஷன் இயக்கி, தயாரித்திருக்கும் இந்தப் படத்தில் ரித்திக் ரோஷனுடன் பிரியங்கா சோப்ரா கங்கணா ரணாவத் விவேக் ஓப்ராய் ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

---

சிறுவர் கதை:

# உண்மைதான் பலியாகி விடுகிறது!





ஒரு விவசாயி ஒரு குதிரையையும், ஒரு ஆட்டையும் வளர்த்து வந்தான்.

அந்தக் குதிரையும் ஆடும் சிறந்த நண்பர்களாக இருந்தன.

ஒரு நாள் அந்தக் குதிரை வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டது. அதனால், அந்த விவசாயி குதிரைக்குச் சிகிச்சை அளிக்க மருத்துவரை அழைத்து வந்தான்.

மருத்துவர் அந்த குதிரையின் நிலையைப் பார்த்து, "நான் மூன்று நாட்கள் வந்து மருந்து தருகிறேன். அந்த மருந்தைக் குதிரைக்குச் சாப்பிடக் கொடுங்கள். அதைச் சாப்பிட்ட குதிரை எழுந்து நடந்தால் சரி, இல்லையெனில் அதனைக் கொன்றுவிட வேண்டியது தான்" என்று சொல்லியபடி குதிரைக்கான மருந்தைக் கொடுத்துச் சென்றார்.

இவர்களது உரையாடலை அந்த ஆடு கேட்டுக் கொண்டிருந்தது.

விவசாயியும் அந்தக் குதிரைக்கு மருத்துவர் கொடுத்த மருந்தைக் கொடுத்தான்.

மறுநாள் வந்த மருத்துவர், குதிரையைப் பார்த்து விட்டு, அன்றைய மருந்தைக் கொடுத்துச் சென்றார்.

அந்த மருந்தையும் குதிரைக்குக் கொடுத்தான் அந்த விவசாயி.

பின்பு சிறிது நேரம் கழித்து, அங்கு வந்த ஆடு, அந்தக் குதிரையிடம், "நண்பா, நீ எழுந்து நடக்க முயற்சி செய். நீ நடக்கா விட்டால் அவர்கள் உன்னைக் கொன்று விடுவார்கள்" என்று அந்த குதிரையை ஊக்குவித்தது.

மூன்றாம் நாளும் மருத்துவர் வந்தார். அவர் குதிரைக்கு மருந்து கொடுத்துவிட்டு, அந்த விவசாயிடம் "நாளை குதிரை நடக்கவில்லையெனில், அதனைக் கொன்றுவிட வேண்டும். இல்லாவிட்டால், அந்த வைரஸ், மற்றவர்களுக்கும் பரவிவிடும்." என்று சொல்லிச் சென்றார்.

இதைக் கேட்ட ஆடு, அந்த மருத்துவர் சென்றதும், குதிரையிடம் வந்து, "நண்பா! எப்படியாவது எழுந்து நடக்க முயற்சி செய். நீ நடக்க முடியாமல் போனால் உன்னைக் கொன்று விடுவார்கள்" என்று சொல்லியது.

அந்தக் குதிரையும் முயற்சி செய்து மெதுவாக எழுந்து நடக்கத் தொடங்கியது.

தற்செயலாக அந்தப் பக்கமாக வந்த விவசாயி அசந்து போகும்படியாக குதிரை ஓடியது.

மறுநாள் அந்த விவசாயி மருத்துவரை அழைத்து வந்து குதிரையைக் காண்பித்தான்.


அவன் மருத்துவரிடம், "என் குதிரை நன்றாகக் குணமடைந்து விட்டது. அது நன்றாக ஓடத் தொடங்கி விட்டது. இதற்கு நீங்கள் கொடுத்த மருந்துதான் காரணம். என் குதிரையைப் பிழைக்க வைத்த உங்களுக்கு நல்ல விருந்து ஒன்று கொடுக்க வேண்டும். இந்த ஆட்டை வெட்டிப் பிரியாணி செய்து கொண்டாடி விடுவோம்" என்றான்.

குதிரை ஆட்டின் ஊக்கத்தால் எழுந்து நடந்தாலும் மருத்துவர் கொடுத்த மருந்தால்தான் குதிரை குணமடைந்ததாகத்தான் விவசாயி நினைத்தான்.

இப்படித்தான் இந்த உலகில் யாரால் நன்மை கிடைத்தது என்பதை உணராமல், பலரும் உண்மையைப் பலி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

---

# தண்ணீரே மருந்து!



ஆறு டம்ளர், 1.5 லீற்றர், சுத்தமான தண்ணீரை தினமும் குடித்தால், டாக்டர், பரிசோதனை, மருந்து, மாத்திரை, ஊசி எதுவுமே தேவையில்லை... வியாதிகள் பறந்தோடி விடும். நீங்களே சுய-பரிசோதனை செய்து கொண்டாலன்றி, இதை நம்பமாட்டீர்கள்...

"வோட்டர் தெரபி" எனப்படும், இந்த சிகிச்சை முறையால், தலைவலி, இரத்தக் கொதிப்பு, ஹைபர் டென்ஷன், இரத்தசோகை, மூட்டு வலி, தசைவலி, தலை கிறுகிறுப்பு, இருமல், அஸ்மா, நெஞ்சுச் சளி, டி.பி., மெனிஞ்சிட்டீஸ், சிறுநீரகக் கல், அசிடிட்டி, வாயுத் தொல்லை, சீதபேதி, மலச்சிக்கல், நீரிழிவு, கண்நோய், மாதவிடாய் பிரச்சினைகள், வெள்ளை அணு குறையும் பிரச்சினை, பெண்களின் கர்ப்பப்பை, மார்பகப் புற்றுநோய் என, மொத்தம் 31 வியாதிகளைக் குணப்படுத்த முடியும்.

அதிகாலையில் எழுந்தவுடன் பல் விளக்காமல், முகம் கழுவாமல், 1.5 லீற்றர் தண்ணீரைக் குடிக்க வேண்டும். எத்தனை கிளாஸ் தண்ணீர், 1.5 லீற்றர் ஆகும் என்பதை, முன்னமே அளந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த சிகிச்சை முறையை, "உஷா (அதிகாலை) பான சிகிச்சை" எனப் பெயரிட்டு அழைத்துள்ளனர் நம் முன்னோர்.

ஒன்றரை லீற்றர் தண்ணீர் குடித்து முடித்தபின் தான் பல் விளக்கி, முகம் கழுவ வேண்டும்.

தண்ணீர் குடிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னும், பின்னும் ஜூசோ, வேறு எந்த உணவோ சாப்பிடக் கூடாது.

முந்தைய இரவில், "தண்ணி" அடித்திருந்தால் இந்த சிகிச்சையை மேற்கொள்ளக் கூடாது.

உங்கள் ஏரியாவில் சுத்தமான குடிநீர் கிடைக்கவில்லையென்றால், நீரைக் காய்ச்சி வடிகட்டி பயன்படுத்தலாம்.

எல்லாம் சரி... ஒன்றரை லீற்றர் தண்ணீரை, ஒரே நேரத்தில் குடிக்க முடியுமா என்ற சந்தேகம் வருகிறது அல்லவா... குடிக்க முடியும்! இரண்டு, மூன்று நாட்கள் திண்டாட்டமாகத்தான் இருக்கும். ஆனால், "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்பதுபோல், பழக, பழக சுலபமாகி விடும்.

ஆரம்பத்தில், நான்கு கிளாஸ் தண்ணீரை அடுத்தடுத்து குடியுங்கள். இரண்டு நிமிடம், இடைவெளி விட்டு, மீதமுள்ள இரண்டு கிளாசை குடியுங்கள்.

இவ்வளவு தண்ணீரையும் குடித்தபின், ஒரு மணி நேரத்துக்கு இரண்டு, மூன்று முறை சிறுநீர் கழிக்க வேண்டியதிருக்கும்... கொஞ்ச நாட்களுக்குப் பின், சகஜ நிலை வந்து விடும்.

சோதனை செய்து பார்த்ததிலும், பயிற்சி செய்ததிலும் கீழ்க்கண்ட வியாதிகள் எத்தனை நாட்களில் குணமாகி உள்ளன என்று, கண்டறியப்பட்டுள்ளது...

- மலச்சிக்கல் - ஒரு நாள்
- அசிடிட்டி - இரண்டு நாள்
- நீரிழிவு நோய் - ஏழு நாள்
- இரத்தக்கொதிப்பு, ஹைபர் டென்ஷன் - நான்கு வாரம்.
- டி.பி., - மூன்று மாதம்.

இந்த சிகிச்சை, மனித உடலை சுத்தப்படுத்துகிறது. புதிய இரத்தம் உடலில் உற்பத்தியாக உதவுகிறது. இதற்கு ஆங்கில மருத்துவத்தில், "ஹெமட்டோ போயிசிஸ்" என்கின்றனர். இந்த சிகிச்சை பெருங்குடலை சுத்தப்படுத்தி, நன்மை பயக்கிறது. சுத்தமான இரத்தமே நோய்களை குணப்படுத்தி, மனிதனை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

- "தண்ணீர் மருத்துவம்" இணையத்தளக் கட்டுரையில்



# க.பொ.த (சா/த) மாணவர்களின் கணிப்பீட்டுத்தரவுகளை அனுப்பவும்

(அச்சுவேலி)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பாடசாலை மட்டக் கணிப்பீடுகளை டிசம்பர் மாதம் 04 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம் மாணவர்களின் தரம் 10,11 வகுப்புக்களிற்குரிய ஒவ்வொரு பாடத்திற்குமுரிய பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் சராசரி, இறுதிப்புள்ளிகளை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அதற்குரிய படிவங்களில் பிழையின்றிப் பூர்த்தி செய்து அதிபரின் உறுதிப்படுத்தல் கையொப்பத்துடன் அவற்றிற்குரிய உறையில், இட்டு வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கூடாக அனுப்பி வைக்குமாறு அதில் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் படிவங்களினை தனித்தனியாக வேறாக்கி அறிவுறுத்தலுக்கமைய மாணவர்களிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறும் அதில் மேலும் கேட்கப் பட்டுள்ளது. (03)

# வடமாகாண நாடகப் போட்டியில் யாழ். பாடசாலை நாடகம் முதலிடம்

(மானிப்பாய்)

இலங்கை தேசிய நாடக சங்கத்தின் 'ரவல்கோல்' அமைப்பினரால் பாடசாலைகளிற்கிடையிலான நாடகப் போட்டிகள் நாடு முழுவதும் இடம்பெற்று வருகின்றன.

இதன் முதற்கட்டமாக மாகாண ரீதியில் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் வட மாகாணத்திற்கான போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

இப் போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 'கல் பிளந்த கதிர்' என்னும் நாடகம் முதலாம் இடத்தை பெற்றது. இந் நாடகத்தினை ஆசிரியர் திருமதி ஸ்ரீலேகா பேரின்பகுமார் நெறியாள்கை செய்திருந்தார்.

இந் நாடகத்தில் கஜீலன், குகநாதன், வின்சன், நகுலன், சுயிந்தன், கீர்த்தனன், கபில்ராஜ், தேனுஜா, சாலினி, கௌசிகா, பியூலா, தர்சினி, வேணுதர்சிகா, ராகினி ஆகியோர் பாத்திரமேற்று நடித்திருந்தனர்.

இப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் எதிர்வரும் ஜனவரி மாதம் 24ஆம் திகதி இலங்கை தேசிய நாடக சங்கத்தின் 'ரவல்கோல்' அரங்கில் நடைபெறவுள்ள தேசிய மட்ட போட்டிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி நாடக குழு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# நல்லூர் கிளை நூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் நல்லூர் கிளை நூலகத்தினால் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் கிளை நூலக நூலகரால் வெளியிடப்பட்டுள்ளது

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரம் வருமாறு

**வர்ணம் தீட்டுதல் (முன்பள்ளி மாணவர்கள்)**

**ஆரம்பநிலை**

வி.டெனிசியா, ரேணுகா, ஜெ.ஜெனிபா (முன்பள்ளி மாநகரசபை)

**இரண்டாம்நிலை**

ஜெ.அஸ்ணவி, ஜெ.அஸ்ஸினி,றபீனா (முன்பள்ளி மாநகரசபை)

**சிறுவர் செயற்பாடுகள் (தரம் 1-5)**

பாட்டு

சி.நிரோசினி (யா/ இந்து ஆரம்ப பாடசாலை), மு.தீபிகா, சி.விதுஸாலினி (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

பேச்சு

சி.நிரோசினி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), சி.ரிஸிகரன், இ.லக்ஸிகா (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

வாய்மொழிப்பேச்சு

தரம் 1

எஸ். ரஸ்வினி (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

தரம் 2

எஸ்.அஸ்மிதா (யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), எஸ்.நிரோசினி (யா/ இந்து ஆரம்ப பாடசாலை), எஸ்.கயல்விழி (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

தரம்3

எஸ் கஜானன் (யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

தரம் 4

எஸ் விதுஸாலினி வித்தியாலயம்),மு.தீபிகா, எஸ்.அம்பிகை (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்),

சித்திரம் வரைதல்

தரம் 2

எஸ். அஸ்மிதா, எஸ். கயல்விழி (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), எஸ். நிரோசினி(யா/ இந்து ஆரம்ப பாடசாலை)

தரம் 3

எஸ். கஜானன் (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

தரம் 4

எஸ். ரிஸிகரன், எஸ்.திவானன், மு.தீபிகா(யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

தரம் 5

எஸ். ஆதித்தன் (நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்) செ. கேசிகன் (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம், உ. வினோத் (நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்)

ஆத்திசூடி கொன்றைவேந்தன் (தரம் 2)

எஸ். நிரோசினி (யா/ இந்து ஆரம்ப பாடசாலை), எஸ். கயல்விழி (யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), இ.மாதங்கி (நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்), இ.லக்ஸிகா (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

திருக்குறள் (தரம் 3 - 5)

எஸ். விதுஸாலினி (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), எஸ். தாரிணி, எஸ் ரிஸிகரன் (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

கதை கூறல் போட்டி

ஸ்ரீ. கஸ்தூரி (யா/ஆனைப் பந்தி மெதடிஸ் மிஸன் பாடசாலை), சு. திவானன், செ. கேசிகன் (யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

பொது அறிவுப்போட்டி

வி.சுவர்ணா (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்), ச. கனுஜா, சூ.கீர்த்தனா (யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), தே. தீபனா (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்)

கட்டுரைப்போட்டி

தரம் 6-7

வி. சுரேக்கா, ஜோ.செரினா (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), அனற்கியூற் கமிலஸ் (யா/வேம்படி மகளிர் கல்லூரி)

தரம் 8-9

கோ. சாகித்தியா, க.சங்கவி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), தே.தீபனா (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்)

தரம் 10-11

மேரி சோனியா அன்ரன் கொன்சாள்ஸ் (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்), பிரதீபா சுதாகரன் (யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), அ. அபூர்வா (யா/ வேம்படி மகளிர் கல்லூரி)

தரம் 12-13

ச. கனுஜா (யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), ஸ்ரீ.சௌமியா நிமலினி (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்), ஆ.கீர்த்தனா (யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்)

பேச்சு

தரம் 6-7

ச. சபோடின் மேரி சபீனா (யா. திருக்குடும்ப கன்னியர் மடம்), ந. ஜனகன் (யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), ஆன் கொன்செப்ரா (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்)

தரம் 8-9

ந.துஸாரகா, கோ .சிரோன் பிரவீனா, வி.டென்சியா (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்), ச. தேனுஜா (யா/வேம்படி மகளிர் கல்லூரி)

தரம் 10-11

ம. பிருந்தினி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), அ. தட்சாயினி(யா. திருக்குடும்ப கன்னியர் மடம்) ர. கோபிகா(யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்)

தரம் 12-13

சி. கௌசலா (யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), பீ. சர்மி ஜக்குலின், ஆ.எமிலா (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்)

# நல்லூரில் நிகழ்ந்த நாதசங்கமம்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான முருகப்பெருமான் சூரசங்காரஞ் செய்து வெற்றிவாகை சூடிய மைக்காக அவருக்கு தெய்வயானை அம்பிகையைத் திருமணஞ்செய்து வைத்த கந்த ஷஷ்டி திருக்கல்யாண நாளான (09.11.2013) சனிக்கிழமையன்று நல்லூரில் ஒரு நாதசங்கமம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தினரால் நல்லூர் கம்பன் கோட்டத்து மேல் மாடி மண்டபத்தில் நடாத்தப் பெற்ற இந்நிகழ்வு இரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றிருந்தது.

நிலாக்கால நிகழ்வாக நடந்த இந்த நாதசங்கமம் நிகழ்சியில் நாதஸ்வரம் வாசித்துக் கானமழை பொழிந்தவர் ஈழநல்லூரைச் சேர்ந்த திருவாளர் பி.எஸ். பாலமுருகன் ஆவார்.

நாதஸ்வர இசை மழையில் இரசிகப்பெருமக்களை நன்கு நனைய வைத்த இளங்கலைஞர் பாலமுருகனின் கலைத்திறன் எல்லோரையும் வெருவாகக் கவர்ந்தது. முதலில் எடுத்த எடுப்பிலேயே "பஜமானசே விக்னேஸ்வர" எனும் பகுதாரி ராகத்திலமைந்த உருப்படியானது சக்சேரியைக் களை கட்டச் செய்து விட்டது.

அதற்கு அடுத்தாற்போல ஜேமாவதி ராக "மதுராம்பிகை" என்ற எல்லோரையும் கவர்ந்த இனிய பாடல் ஜனரஞ்சகமாக அமைந்திருந்தது. அத்துடன் "கண்டேன் கண்டேன்" என்ற பாகேஸ்வரி இராகத்துப்பாடல் அனைவரது நெஞ்சங்களிலும் நன்றாக இடம் பிடித்துவிட்டது. "ராமனுக்கு" மன்னன்முடி தரித்தானே" என்ற ஹிந்தோளராகப் பாட்டும் நன்றாக அமைந்து இரசிகர்களை வியப்பிலாழ்த்தியது.

இது எல்லாவற்றுக்கும் மேலாக பாலமுருகனின் வாய்ப்பாட்டாக இசைக்கப்பட்ட "கண்டநாள் முதலாய் காதல் பெருகுதடி" என்ற பாட்டு அவருடைய இனிமையான குரலால் அனைவரையும் தம்பக்கம் ஈர்த்துவிட்டது. அருமையாகப் பாடி இரசிகர்களின் உள்ளங்கவர்ந்த பாலமுருகனின் இசைக் கால பாராட்டப்பட வேண்டியது.

அத்துடன் நிகழ்ச்சிக்கு தவில் வாசித்த எஸ். பி.செந்தில் நாதனும் தான் எதற்கும் சளைத்தவரல்ல "என்று லாவகமாக வாசித்துத்த வில் நாத மணியாகத் திகழ்ந்தார். அவரது வாசிப்போடு இணைந்து வாசித்தார் மிருதங்க வித்வான் முருகபக்தன் திரு. க.கண்ணதாசன் கலைஞானச் சுடராக விளங்கி நாட்டின் இளங் கலைஞனை இந்த மிருதங்க வித்துவான் தமக்கே உரித்தான பாணியில் மிருதங்கத்தை அருமையாக வாசித்து எல்லோரிடமும் அப்ளாஸ்" வாங்கி விட்டிருந்தார்.

மிருதங்க இசையில் வாசிக்கக் கூடிய அனைத்துப் பாடங்களையும் தனியாவர்த்தனம் மூலம் நன்றாக வாசித்து கச்சேரி சிறப்புற அமைய தன்னையே அர்ப்பணித்திருந்தார். அவரது வாசிப்பு நாதஸ்வரத்தோடு இணைந்திருந்தது. மேலும் தம் இனிய வாசிப்பால் அனைவரையும் தம் வசமீர்த்து மூக்கில் விரல் வைத்து வியக்கக்கூடிய அளவுக்கு மிக நன்றாக அமைந்து வயலின் இசையால் உள்ளங்கவர்ந்த உயர்கலைஞன் க.குகபரன் அவர்களும் பாராட்டுக்குரியவர்கள் மொத்தத்தில் இந்த இசைக்கச்சேரி வந்திருந்த அனைவரது உள்ளங்களையும் கவர்ந்து இனிமை பயத்தது எனில் மிகையாகாது.

இந்த அருமையான தெவிட்டாத தெள்ளமுதாக விளங்கித் தித்திக்கும் தேன் பால் போன்று எல்லோரது உள்ளங்களிலும் நிறைந்து மகிழ்ச்சியைத் தந்த இந்நாத சங்கமம் ஓர் அருமையான கலைப்படைப்பாகும். இதனை வழங்கிய அனைத்துக் கலைஞர்களும் இப்புவியில் நீடுழி வாழவகை செய்யவேண்டுமென்று எம் குலதெய்வமான ஸ்ரீகாமாட்சி அம்பாளை மிக நன்கு வேண்டிக் கொள்வோம்.

இதை ஏற்பாடு செய்த யாழ்.கம்பன் கழகத்தினர் இரசிகர்கள் எல்லோரும் ஒருமித்து பாலமுருகனையும் அவர்தம் குழுவினரையும் வாழ்த்தி மகிழ்தல் நன்மை பயக்க வல்லது.

**- கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்.**

# சிவில் சமூகத்தினருடனான ஒருங்கிணைப்புச்செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் மனித உரிமை ஆணைக் குழுவினரின் சிவில் சமூகத் தினருடனான ஒருங்கிணைப்புச் செயலமர்வு யாழ். கிறீன்கி றாஸ் ஹோட்டலில் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் ரி.கனகராஜ் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணை யாளரும் முன்னாள்பொலிஸ் மா அதிபருமான ரி.ஆனந்த ராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இச் செயலமர்வில் சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்கள், பெண் களுக்கு குரல் கொடுக்கும் அமைப்புக்கள், தொழிற் சங்க பிரதி நிதிகள் அறவழி போரா ட்ட குழுவினர் யாழ். சிவில் அமைப்பாளர் மற்றும் ஊடகவிய லாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு தமது கேள்விகளை எழுப்பி தீர்வுகளை பெற்றதுடன் சமூகத்தில் குறிப்பாக தற்போது குடாநாட்டில் இடம்பெறும் சமூக பிரச்சினைகள் குறித்து கலந் துரையாடியதுடன் குழுக்க ளாக பிரிந்து கருத்துப்பரிமாற் றம் போன்ற நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் மு.ப. 10 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் இச்செயலமர்வு சிறப்பாக இடம்பெற்றது. (இ)

# நீர் வழங்கல் சபையினால் வாடிக்கையாளர் விபரம் திரட்டு

(அச்சுவேலி)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் பொது மக்களின் நன்மை கருதி தற்போது குறுந்தகவல்கள் அனுப்பும் முறை அமுல்படுத்தப்பட்டிருப்பதால் மேற்படி நிறுவனத்தினால் அதன் வாடிக்கையாளர்களின் விபரங்கள் திரட்டும் நடவடிக்கைகள் வெகு முனைப்பாக நடைபெற்று வருகின்றது.

மேற்படி திட்டத்தினை மேலும், இலகுபடுத்தும் ஓர் செயற் பாடாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் அதன் வாடிக்கையாளர்களின் தகவல்களை திரட்டிக் கொள்வ தற்காக தகவல் படிவம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இச்செயற்றிட்டத்தினை, இலகுபடுத்துவதற்கு ஏதுவாக வாடிக் கையாளர்கள் அவ்விண்ணப்பப் படிவங்களை தாமதமின்றி சரியாகப் பூரணப்படுத்தி கொள்வதுடன் வீட்டிற்கு இணைப்பினைப் பெறும் வரைபடத்தினையும் வரைந்து அதில் இணைத்துக் கொள்ளுமாறும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிராந்திய முகாமையாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (03)

# யாழ். இந்துக்கல்லூரியில் மரம்நடுகை நிகழ்வு



(மானிப்பாய்)

தேசத்தின் நிழல் தேசிய மரநடுகை திட்டம் அண்மையில் யாழ். இந்துக் கல்லூரியில் விவ சாய பாட ஆசிரியர் க.மகேந்திரனால் ஒழுங்கு படுத்தப்பட்டு நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பழைய மாணவர் சங்கத் தலைவரும், வாழ்நாள் பேரா சிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து சிறப்பித்ததுடன் முதலாவது மரக்கன் றினையும் நாட்டி வைத்தார். தொடர்ந்து கல்லூரி அதிபர் வீ.கணேசராசா மரக்கன்றினை நாட்டிவைத்தார்.

தொடர்ந்து ஆசிரியர்களும் மாணவர்களும் மரக்கன்றுகளை நாட்டி விழாவினை சிறப்பித் தனர். (48)

# பிரதேசசபை சாரதி பதவியிழந்தது ஏன்? வெளிவரமறுக்கும் உண்மைகள்

(மானிப்பாய்)

வலி. தென் மேற்கு பிரதேச சபையின் சாரதி ஒருவர் பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைவாக பதவி நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த 3 வருடங்களிற்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் பிரதேச சபையில் கடமையாற்றி வந்த குறித்த சாரதி திடீரென பதவி விலக்கப்பட் டுள்ளதாக தெரியவருகின்றது.

இப் பதவி விலக்கல் தொடர்பான கடிதம் பிரதேசசபை செயலாளரினால் 20.11.2013 திகதியிட்டு குறித்த சாரதிக்கு வழங்கப்பட்டிருப்ப துடன், பிரதேச சபை உறுப்பினர்களின் தீர்மானத் திற்கமைவாகவே இப் பதவியிலிருந்து இடை நிறுத்துவதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரை தாக்க முயற்சித்ததாலேயே பதவி விலக்கப்பட்டுள்ள தாக தெரியவரும் அதேவேளை அப்படி சம்பவமேதும் இடம்பெறவில்லை என குறித்த சாரதியும், அங்குள்ளவர்களும் குறிப்பிட்டதோடு இது சில ஆளும் கட்சி உறுப்பினர்களின் தாந் தோன்றித்தனமான செயற்பாடெனவும் விமர்சித் துள்ளனர்.

அத்தோடு குறித்த சாரதி அண்மையில் பத வியை ராஜினாமா செய்த தவிசாளரிற்கு ஆதரவாக செயற்பட்ட காரணத்தினாலேயே பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அத்துடன் குறித்த சாரதியை பதவி விலக்கும் தீர்மானம் பல மாதங்களிற்கு முன்பாக கொண்டு வரப்பட்ட போது தவிசாளரின் தற்துணிவு அதி காரம் காரணமாக குறித்த தீர்மானம் இப்போது நிறைவேற்றப்படாது கிடப்பில் விடப்பட்டிருந்தது.

தவிசாளரின் பதவி விலகலிற்குப் பின்பாக குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த சாரதி பிரதேசசபையில் வேறு சாரதிகள் இல்லாத போதும் கூட பிக்கப் மற்றும் வீதி பதனிடும் வாகனம், குடி நீர் விநியோகிக்கும் வாகனம் என்பவற்றை செலுத்தி பிரதேச சபை யின் நடவடிக்கைகள் சீராக தொடர்ந்து நடைபெற ஒத்துழைப்பு வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த சில வாரங்களிற்கு முன்பாக தவிசாளர் தனது பதவியை ராஜினாமா செய்திருந்தார் எனினும் இதுவரை பதவி விலகல் குறித்த இறுதி முடிவுகள் எதுவும் கட்சி மட்டத்தில் எடுக்கப்பட வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு குறித்த பிரதேச சபை உறுப்பினர் கள் மக்களிற்கும் பிரதேசத்திற்கும் ஆரோக்கி யமான விடயங்கள் எதனையும் கருத்திற்கொள் ளாது தமது சுய லாபங்களையும், பழி வாங்கல் களையும் அரங்கேற்றி வருவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (48)

# பதிவிறுக்கப் பெட்டகம்

நம்முடைய முக்கிய வேலை தூரத்தில் மங்கலாகத் தெரி வது என்ன என்பதைத் தெரிந்து கொள்வதல்ல, நம் முன் னால் இருப்பது என்ன என்று தெரிந்து அதை சிறப்பாகச் செய்வது தான். – தோமஸ் கார்லைல்

நம் ஆளுமையில் நம்மால் துப்புரவாகச் செய்து முடித்து விடக்கூடிய செயல்களையே நமக்குச் செய்து முடிக்க நேரம் இல்லை. இப்படி இருக்கையில், சரியாக இல்லாத மற்ற விஷ யங்களைப் பற்றி, நம்மை மீறிய செயல்பாடுகளைப் பற்றி யோசிக்க, செயல்பட நமக்கேது நேரம். இப்படித் தம்கடன்பணியே மூச்சாக இருப்பவர் பலருள்ளனர். பொது நலத்துக்காக நேரடி யாகப் பணிபுரியாமல் – பல விதங்களிலும் பல துறைகளி லும் தொழில் அறத்தையும், விடாவுழைப்பையும், குவிந்த ஈடு பாட்டையும், தங்கள் மகத்தான புத்திக்கூர்மையையும் தந்து தங்களளவில் உன்னதங்களை எட்டிப் பிடிக்கும் சான்றோர் கள் – இம்முனைதல்கள் காரணமாக இவ்வுலகிற்கு குறிப் பிடத்தக்க பங்களிப்புக்களை அளித்துக் கொண்டிருப்பவர் கள். இவர்களிடம் வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கைகள் அள்ளிக் கொட்டிக் கிடக்கின்றன. இவர்கள் நம்பிக்கை வீண் போகாது. இவர்களால்தான் மழை பெய்கிறது. ஆம். நம் முடைய சாக்கடையை, தெருவை, குப்பைத்தொட்டிகளை – முகத்தில் ஒரு உணர்ச்சியும் இல்லாமல் நமக்காகச் சுத்தம் செய்கிறவர்கள் – இவர்களுடன் நாம் உரையாட ஆரம்பித்தால், பணிபுரிய ஆரம்பித்தால் அது நம்முடைய நம்பிக்கைகள் உறு திப்படலுக்கு ஓர் எளிமையான ஆரம்பமாக இருக்கக்கூடும். – வெ.ராமசாமி

இருபதாம் நூற்றாண்டில் தொற்றுநோய்ச் சாவுகள் பெரிய அளவில் குறைந்ததென்றால் அது தடுப்பூசிகளாலோ இல்லை எதிர் உயிரி மருந்துகளின் கண்டுபிடிப்பிகளாலோ அல்ல. துப்புரவுத் தொழிலாளர்களின் அரும்பணியின் விளைவே அது. – மாட் பேய்ன்


நேற்று ஒரு நண்பர், கணனியின் பாகங்களை பகுதி பகு தியாக பிரித்துப் போட்டு, பின்னர் பொருத்தி முழுமையான கண் ணியாக்குவது எப்படி என்று காட்டித் தந்தார். அவர் முன்னாள் கம்யூனிச கிழக்கு ஜேர்மனியை சேர்ந்தவர். பெர்லின் மதில் விழும் பொழுது, அவருக்கு பத்து வயதாக இருந்திருக்கலாம். அந்த நண்பர், தனது செயலை ஒரு உதாரணம் மூலம் புரிய வைத்தார். ஒரு முதலாளித்துவவாதி, பசியோடு இருக்கும் ஒருவனுக்கு மீனை சாப்பிடக் கொடுத்து விட்டு, பின்னர் அவன் கஷ்டப் பட்டு வேலை செய்து, மீன் வாங்கிச் சாப்பிட வேண்டு மென்று எதிர்பார்ப்பான். அதே நேரம், ஒரு பொதுவுடமைவாதி பசியோடு இருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதுடன், அவனா கவே மீன் பிடித்து உண்பது எப்படி என்றும் காட்டிக் கொடுப்பான்.

மக்களுக்கு எதையும் சொல்லிக் கொடுக்காமல், அறியா மையில் வைத்திருந்தால் தான், முதலாளி கோடி கோடியாக் இலாபம் சம்பாதிக்க முடியும். "நமது தமிழ் மக்களுக்கு கம் யூனிசம் தேவையில்லை. இன்று யாருமே அதை பொருட் படுத்துவதில்லை. மக்கள் இடதுசாரிகளை வெறுக்கிறார் கள்..." என்றெல்லாம் மெத்தப் படித்த அறிவாளிகள் கூட உள றித் திரிகின்றார்கள். அவர்கள் மனதில் குடி கொண்டிருக் கும் அச்சம் தான், இந்த உளறலுக்கு காரணம். அவர்களிடம் மட்டுமே தேங்கிக் கிடக்கும் அறிவியல், அனைத்து மக்களை யும் போய்ச் சேர்ந்து விட்டால், யார் அவர்களை மதிப்பார்கள்? அதற்குப் பின், கை நிறைய சம்பளம் வாங்கி, வாய் நிறைய உண்ண முடியுமா? எதற்காக பெரும்பாலான நடுத்தர வர்க்க அறிவுஜீவிகள், கம்யூனிசத்தை வெறுக்கிறார்கள் என்பதற்கு. இதை விட வேறு உதாரணம் வேண்டுமா? ஐயோ பாவம். அவர் கள் தாங்கள் மட்டுமே உலகம் என்று நினைத்துக் கொண்டி ருக்கிறார்கள். – கலையரசன்

மனிதர்கள் தங்கள் வரலாற்றை உருவாக்குகிறார்கள். ஆனால் தாங்கள் விரும்பும்படியெல்லாம் அதை உருவாக்கு வதில்லை. அவர்களால் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்ட "சூழ்நிலைமை"களில் அதை உருவாக்குவதில்லை. மாறாக அவர்கள் நேரடியாக எதிர்கொள்ளும் கடந்த காலத்திலி ருந்து கைமாற்றி தரப்பட்ட, குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் தான் அதை உருவாக்குகிறார்கள். இறந்துபோன தலை முறையினரின் மரபு, உயிருள்ளவர்களின் மூளையை ஒரு அமுக்குப்பேய் போல அமுக்கிக் கொண்டிருக்கிறது. – கார்ல் மார்க்ஸ்

# காணாமற்போனோர் விபரம் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம்

## தொடர்கிறது நடவடிக்கை




(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் உருவாக்கப்பட்ட ஆணைககுழுவின் விசாரணைகளுக்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் மேற் கொள்ளப்பட்ட காணாமற் போனோர் தொடர்பான சிபாரிசுகள், அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் ரி.ஆனந்த ராஜா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்ற சிவில் சமூகத்தினருடனான ஒருங்கிணைப்புக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது ஆணைக்குழு 2006, 2007ஆம் ஆண்டுகளில் காணாமற்போனவர்கள் தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே நாம் விசாரணைகளை மேற்கொண்டோம்.

அதேபோல் ஜனாதிபதியால், வடக்கு, கிழக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவென ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் எமது அறிக்கையில் வழங்கப்படுகின்ற நிலையில் எம்மிடம் விசாரணைக்கு முறையிட்டவர்களும் அதில் முறையிடலாம். அவ்வாறு முறையிடுவது சிறந்தது எமது அதிகார வரம்புக்குள்ளேயே, நாம் விசாரணைகளை மேற்கொண்டு மனித உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கின்றோம். எம்மால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல 3ஆம் தரப்பு முறையீடும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

இருபத்தைந்து மாவட்டத்திற்கும் சேர்த்து 10 உபகாரியாலயங்கள் மூலமே எமது சேவைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. படிப்படியாக எமது கிளைகளை விஸ்தரிப்புச் செய்ய நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மனிதஉரிமை மீறல்கள் இடம்பெறும் அதேவேளையில் எமது அதிகாரிகளுடன்தொடர்பு கொள்வதன் மூலம் உடனடி தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

இச்செயலமர்வில் சிறுவர், பெண்கள் சம்பந்தமான அமைப்புக்கள் என பலர் கலந்து கொண்டனர். (இ)

# வெளிநாட்டு செய்தியாளர்களுக்கு வடக்கில் தடை ஏதும் இல்லை

## இராணுவப்பேச்சாளர் தகவல்



(கொழும்பு)

வடக்கு பகுதியில் செயற்பட வேண்டாம் என்று ஏ.எப்.பி செய்தியாளர்கள் தடுக்கப்பட்டமை குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என்று இராணுவம் உறுதியளித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமையன்று ஏ.எப்.பி செய்தியாளர் பிரான்ஸ்-பிரேசி மற்றும் ஒரு புகைப்பட செய்தியாளர் ஆகியோர் கொமாண்டரிடம் வந்த உத்தரவு என்று கூறி செய்தி சேகரிக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டனர். பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் வெளியான நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முல்லைத்தீவில் இராணுவத்தினர் கைப்பற்றிய விடுதலைப்புலிகளின் படகுகளை பார்வையிடலாம். ஆனால் புகைப்படமெடுக்கக்கூடாது என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

எனினும் இதனை மறுத்துள்ள கொழும்பில் உள்ள இராணுவ பேச்சாளர் ருவான் வணிகசூரிய அவ்வாறு வெளிநாட்டு செய்தியாளர்களுக்கு தடை விதிக்கமுடியாது என்று குறிப்பிட்டார்.

களத்தில் உள்ள இராணுவ அதிகாரிகள் தமது படைவீரர்களை படமெடுப்பதை விரும்புவதில்லை. எனினும் பொது இடங்களை படமெடுப்பதை அவர்கள் தடுக்க முடியாது என்று வணிகசூரிய குறிப்பிட்டார். எனவே சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்படும் என்றும் வணிகசூரிய தெரிவித்தார்.

# ரயில் பயணி மீது பாலியல் தொல்லை ஆஸி.யில் தமிழர் ஒருவர் கைது

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் ஊனமுற்ற பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்து, தாக்குதல் நடத்தி கொள்ளையிட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை தமிழ் அகதி ஒருவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சிட்னியில் ரயிலில் பயணித்த பெண்ணொருவர் மீதே குறித்த தமிழ் அகதி தொல்லை கொடுத்துள்ளார்.

ராசகுமார் கனகரட்ணம் என்ற இந்த நபர் முல்கிரேவ் என்ற ரயில் ஏறியதுடன் பெண் அருகில் அமர்ந்து அந்தப் பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார்.

இதனையடுத்து அந்தப் பெண் வேறு இடத்திற்கு சென்றுள்ளார். அந்தப் பெண்ணைத் தொடர்ந்து சென்ற சந்தேக நபர் பெண்ணை தாக்கியதுடன் அவர் கைப்பையில் இருந்து கொள்ளையிட்டுள்ளார்.

19 வயதான இந்தப் பெண் கடந்த முதலாம் திகதி சிட்னி மேற்கு ரிச்மண்டில் இருந்து பிளேக் டவுன் நோக்கி ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

34 வயதான கனகரட்ணம் இப்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு பிணை வழங்குமாறு அவரது சட்டத்தரணி விடுத்த கோரிக்கை பென்ரித் உள்ளூர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் நிராகரித்துள்ளது.

சந்தேகநபரை எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதி பரமட்டா உள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# அரச அதிகாரிகளை கமரூன் சந்திக்காதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் ஆளுநர்

வடமாகாணத்திற்கு பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் மேற்கொண்ட விஜயத்தின் போது அவர் அரசாங்க அதிகாரிகளை சந்திக்கவில்லை. அரசாங்கத்தை இழிவுபடுத்தக் கூடிய தகவல்களை கொடுத்து உதவக்கூடிய அரசியல் சக்திகளையே அவர் சந்தித்தார் என்று வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் வடமாகாணத்தில் உள்ள அரசாங்க அதிகாரிகளை சந்தித்திருந்தால் நாங்கள் அவருக்கு வடமாகாணத்தில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய தகவல்களை ஒழிவு மறைவின்றி தெரிவித்திருப்போம். அவர் இங்கு வந்த போது நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன் என்று வடமாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார். பிரிட்டிஷ் பிரதமர் எங்களை சந்திப்பதற்கு முன்னர் அரசாங்கத்திற்கு எதிரான அரசியல்வாதிகளை சந்தித்தார் என்றும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மேலும் கூறினார்.

# ஊனமுற்ற படையினருக்கு நட்டஈடு கிடைக்காதது ஏன்?

பாதுகாப்புச் செயலாளர் கோததபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி தயா ரட்நாயக்க ஆகியோருக்கு எதிராக அழைப்பாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போரில் ஊனமுற்ற படைவீரர்களினால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போரில் ஊனமுற்ற படைவீரர்களுக்கு வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட நட்டஈடுகள் வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட ஏழு பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி வழக்கு விசாரணை நடத்தப்பட உள்ளது.

பிரதிவாதிகள் அல்லது அவர்களது சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராக முடியும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தங்களது நிலைமை குறித்து ஜனாதிபதி, இராணுவத் தளபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்த போதிலும் உரிய பதில் கிடைக்கவில்லை என மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையை உரிய முறையில் செலுத்துமாறு அதிகாரிகளை வலியுறுத்தியே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நல்லை நகர் தந்த நாவலர் பெருமான்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயமும் தமிழ்மொழியும் நன்கு வளரவேண்டுமென்று முற்றுமுழுதாகத் தம்மையே அர்ப்பணித்து அரும்பாடுபட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 134ஆவது குருபூசைத் தினம் இன்றாகும்.

கலியுகவரதன் கந்தன் உறையும் நல்லை நகரிலே 1822ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி கந்தப்பிள்ளை - சிவகாமி தம்பதிகளுக்கு மகனாக அவதரித்த இவர் ஆறுமுகம் என்ற பெயரோடு நன்னெறி நிற்கும் தவப்புதல்வனாக வாழ்ந்திருந்தார்.

இளம் பராயத்திலேயே கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கிய இவர் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், சரவணமுத்துப்புலவர், இருபாலை சேனாதிராய முதலியார் என்போரிடம் கல்விகற்றுத் தேறினார். சைவசமய சாத்திரங்ளையும் தோத்திரங்களையும் ஆங்கிலத்தையும் தமிழையும் இலக்கண இலக்கியங்களையும் ஐயந்திரிபுறக் கற்ற இவர் யாழ்.மத்திய கல்லூரியிலே ஆசிரியராகக் கடமையாற்றினார்.

இவரது அறிவாற்றலையும் பேச்சுவன்மையையும் கண்ணுற்ற இந்திய திருவாவடுதுறை ஆதீனம் 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கிக்கௌரவித்தது. பிரசங்கம் மூலம் சைவ சமயத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறிய இவர் ஆலயங்களில் உயிர்ப்பலி இடுவதை அறவே வெறுத்தார்.

கல்வியை மேம்படுத்துவதற்காக பள்ளிக்கூடங்களை நிறுவினார். இலவசக் கல்வி, தொழிற்கல்வி முதலியவற்றை அறிமுகஞ் செய்த இவர் சமய தீட்சை வைத்து சைவத்தின் மாண்பை எடுத்தியம்பி ஏடுகளிலிருந்த பல நூல்களை அச்சுப்பதிப்புச் செய்ய அரும்பாடுபட்டார்.

கிறிஸ்தவ மத பைபிளை மொழிபெயர்த்துக் கொடுத்த நாவலர் பெரியபுராணம், கந்த புராணம், திருவிளையாடற்புராணம் முதலான நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். சைவ வினாவிடை, பாலபாடம் என்று பலவித நூல்களை எழுதிப் பிரசுரித்ததோடு புராணபடனம், சொற்பொழிவு, கதாப்பிரசங்கம் என்பனவற்றையும் செய்து காட்டினார்.

"நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்

சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே? எல்லவரும்

ஓத்து புராணாகமங்கள் எங்கே? பிரசங்கம் எங்கே?

ஆத்தனறிவெங்கே அழற"

எனும் சி.வை.தாமோதரம் பிள்ளையுடைய பாடலின்படி எமது ஈழவள நாட்டில் கல்வி, பிரசங்கம், புராணபடனம் என்று இன்னோரன்ன பலவும் நாவலரால்தான் நிலை பெற்றுள்ளன என்று கூறினால் அது மிகையாகாது.

இவ்வாறு சேவைக்கெனவே வாழ்ந்து மறைந்த நாவலர் பெருமானை நாம் நினைவுகூருவதோடு நின்றுவிடாமல் குருபூசையை நன்கு நடத்தி அவர் காட்டிய நேரிய பாதையில் நாமும் சென்று நல்ல சுகவாழ்வுக்கு அடிகோலுவோம் அவருடைய ஆத்மா 1879ஆம் ஆண்டு கார்த்திகை மாத மக நட்சத்திரத்தன்று சிவபதம் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தெய்வத் தமிழ்ச்சுடர்
இராஸசயா ஸ்ரீதரன்

தமனாவிடம் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே குறியீடுகள் மூலம் தரப்பட்டுள்ளது.

| அதிகம் ●——›› குறைவு<br>குறைவு ‹‹——● அதிகம் | கவிதை ●——›› சிறுகதை | நாவல் ‹‹——● சிறுகதை |
|---|---|---|

31) தமனாவிடம் அதிகளவில் உள்ள் புத்தகங்கள் எது?
1) சிறுகதை　　2) கவிதை　　3) நாவல்

32) அவளிடம் உள்ள புத்தகங்களில் குறைந்தளவில் இருந்து கூடியவரை காட்டும் விடையை தெரிக.
1) நாவல், சிறுகதை, கவிதை　　2) சிறுகதை,கவிதை,நாவல்　　3) கவிதை, நாவல், சிறுகதை

❖ **கீழே உள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட ஐந்து சொற்களில் ஒரு சொல்லுக்கு கருத்து இல்லை அச்சொல்லை இனங்கண்டு கோடிடுக.**

33) 1) அடுப்பு　2) உடுப்பு　3) நடுப்பு　4) தடுப்பு　5) இடுப்பு

34) 1) சட்டம்　2) விட்டம்　3) திட்டம்　4) கட்டம்　5) இட்டம்

35) ஒருபக்க நீளம் 1cm கொண்ட 27 சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் உருவாகும் பெரிய சதுரமுகியின் ஒருபக்க நீளம் யாது?
1) 3cm　　2) 9cm　　3) 6cm


36) ஒரு கடிகாரம் 6 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை ஒலிக்கும். முதலாவது மணி மு.ப 6 மணிக்கு ஒலித்தது. எனின் 27ஆவது மணி ஒலிப்பது?
1) மு.ப 6மணி　　2) பி.ப 6மணி　　3) நண்பகல் 12மணி

> பண்ணை ஒன்றில் உள்ள அனைத்து பறவைகளையும், மிருகங்களையும் பார்வையிட்ட இம்ரான் 55 தலைகளையும், 152 கால்களையும் பார்வையிட்டதாக கூறினான்.

37) பண்ணையில் உள்ள மிருகங்கள் எத்தனை?　1) 68　　2) 34　　3) 21

38) பண்ணையில் உள்ள பறவைகள் எத்தனை?　1) 21　　2) 34　　3) 38

❖ **ராமு, சோமு, இமான் ஆகிய மூன்று நண்பர்கள் A, B,C என்னும் இடங்களில் இருந்து முறையே பயணம் செய்த பாதை காட்டுப்பட்டுள்ளது.**




39) குறைந்த தூரம் பயணம் செய்தவர் யார்?

..............................................

40) அதிக தடவை வலப்பக்கம் திரும்பிச் சென்றவர் யார்?

..............................................



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னாயத்தப் பயிற்சி - 2014

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



❖ பாடலில் விபரிக்கப்பட்டுள்ள பறவையைத் தெரிவு செய்க

1) ஓய்ந்து வாடி நின்றார்
ஒற்றைக் காலில் நின்றார்
நீந்தும் மீனைக் கண்டே
நிமிர்ந்து நின்று பார்த்தார்
01) மீன்கொத்தி　02) பருந்து　03) கொக்கு


2) தெருவில் சுத்தம் செய்கிறாய்
சிறந்த தொண்டன் ஆகிறாய்
வண்ணக்குயில் குஞ்சுக்கு
வளர்ப்புத் தாயும் நீ ஆனாய்
01) மைனா　02) குயில்　03) காகம்

❖ **3ஆம் 4ஆம் வினாக்களில் தரப்பட்ட நிகழ்வுக்கு பொருத்தமான உணர்வினை தெரிந்து கீறிடுக.**

3) கூட்டில் அடைக்கப்பட்டிருந்த கிளி என்றோ ஒரு நாள் பறந்து சென்று தன் நண்பர்களுடன் சுதந்திரமாக சுற்றித்திரிவேன் என எண்ணியது ஆனால் அது எண்ணியது போல் நடக்கவில்லை
1) அச்சம்　　2) வெட்கம்　　3) மகிழ்ச்சி


4) தனது வீட்டுத் தோட்டத்தில் நாட்டப்பட்டிருந்த பயிர்களை மாடு கடித்துத் தின்று கொண்டிருந்ததை கண்ட தேவன் மாட்டை அடித்து விரட்டினான்.
1) கோபம்　　2) வெட்கம்　　3) பயம்




5) ✡ ⚐ # ◎ ✡ ⚐ #　இந்த உருக்கோலத்தில் 29வது வரும் உரு எது
1) ⚐　　2) ✡　　3) #

6) 

A வட்டம் சதுர எண்களையும், B வட்டம் முக்கோண எண்களையும் குறிக்கிறது எனின் C வட்டம் குறிக்கும் எண் யாது?
1) 21　　2) 25　　3) 36

7) ஓவியா எப்போதும் தன்னைப் பற்றி மட்டுமே சிந்திப்பவள். பிறர் நலனைப்பற்றி அக்கறை கொள்ள மாட்டாள். ஓவியாவைக் குறிக்க உரிய சொல் எது?
1) சுயநலவாதி　　2) பொதுநலவாதி　　3) சந்தர்ப்பவாதி


8) 

சதுர வடிவத் தாள் ஒன்றில் நிழற்றப்பட்ட பகுதி வெட்டி எடுக்கப்பட்டு A - B , D - C புள்ளிக் கோட்டின் வழியே மடித்தால் பெறப்படும் வடிவம் எது?
1) 　　2) 　　3) 

9) சரியான கணித செய்கையை தெரிவு செய்க
1) 5+3=12-5　　2) 8-2=3 x3　　3) 4x6= 18+6

10) சித்ராவின் தாய் சந்திரா, சிவசேகரின் மனைவி சந்திரா, சித்ராவின் தங்கை சங்கீதா.ஆகவே சிவசேகரின் மகள் சங்கீதா என்பது
1) சரியானது　　2) பிழையானது　　3) கூறமுடியாது

11) கடதாசி ஒன்றினை நான்காக மடித்து அதில் ஒரு பகுதி வெட்டி எடுக்கப்பட்டு கடதாசியை மீண்டும் விரிக்கும் போது காணக்கூடிய வடிவம் எது?



12) பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் பொன்விழா 2011ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது எனின் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
1) 1951 2) 1961 3) 1936


❖ **13ஆம் 14ஆம் வினாக்களுக்கு அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க**

| | | |
|---|---|---|
| சட்டை + காற்சட்டை = 775.00 | சட்டை - காற்சட்டை = 75.00 | காற்சட்டை + சேட் = 650.00 |

13) காற்சட்டை ஒன்றின் விலை யாது?
1) 350.00 2) 425.00 3) 375.00

14) சட்டை ஒன்றும் சேட் ஒன்றும் வாங்கத் தேவையான பணம் யாது?
1) 575.00 2) 650.00 3) 725.00


15) இவ்விரு உருக்களையும் இணைப்பதால் தோன்றும் வடிவம் யாது?



16) மூன்று செவ்வகங்களையும் இரண்டு முக்கோணங்களையும் பயன்படுத்தி அமைக்கப்படும் திண்ம வடிவம் எது?
1) கூம்பகம் 2) கூம்பு 3) அரியம்

17) மழை பெய்யும் போது இடி முழங்கும் இது
1) பெரும்பாலும் நிகழும் நிகழ்வாகும்
2) எப்போதும் நிகழும் நிகழ்வாகும்
3) ஒருபோதும் நடைபெறுவதில்லை

18)




அருகில் தரப்பட்ட சதுர வடிவக் காணியின் ஒரு பக்கத்தில் 12 தூண்கள் நடப்பட்டுள்ளன எனின் காணியை சுற்றிவர நடப்பட்ட தூண்கள் எத்தனை?
1) 48 2) 44 3) 50

19) ஐந்து நண்பர்கள் தமக்கிடையே தீபாவளி வாழ்த்துக்களை மாறி மாறி அனுப்பி மகிழ்ந்தனர் எனின் அனுப்பப்பட்ட தீபாவளி வாழ்த்துக்கள் எத்தனை?
1) 25 2) 30 3) 20

20) ஒரு கரப்பந்தாட்ட அணியிலுள்ள ஆறு பேரும் தமக்கிடையே மாறி மாறி கை குலுக்கிக் கொண்டனர் எனின் அங்கு இடம்பெற்ற கைக்குலுக்கல்கள் எத்தனை?
1) 30 2) 15 3) 36

❖ **A,B,C எனும் மூன்று பாடசாலைகளின் அமைவிடம் பற்றிய வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.**



A B C

21) A இல் இருந்து B க்கான தூரமும் B இல் இருந்து C க்கான தூரமும் சமனாகும் என்பது
1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது



22) C இல் இருந்து Bக்கான தூரத்தைவிட B இல் இருந்து A க்கான தூரம் அதிகமாகும்.
1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது

23) இலங்கையில் நாளுக்கு நாள் வீதி விபத்துகள் அதிகரித்துச் செல்வதற்கான காரணம்?
1) வீதிக்குறியீடுகளை அவதானித்து ஓட்டுவதால்
2) வேகமாக வாகனத்தை ஓட்டுவதால்
3) அகலமான பாதைகள் புதிதாக அமைக்கப்பட்டிருப்பதால்

24) நுளம்பின் வாழ்க்கை வட்டத்தை சரியாக காட்டும் விடையைத் தெரிக
1) முட்டை - குடம்பி - கூட்டுப்புழு - நிறைவுடலி
2) குடம்பி - கூட்டுப்புழு - முட்டை - நிறைவுடலி
3) கூட்டுப்புழு - முட்டை - குடம்பி - நிறைவுடலி

25) தென்மாகாணத்திற்கு காலி போல மத்தியமாகாணத்திற்கு ..................
1) மாத்தளை 2) நுவரெலியா 3) கண்டி

◆ **26, 27 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட பழமொழிக்கு ஒத்த பழமொழியை தெரிந்து கோடிடுக.**


26) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
1) அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது
2) தூரத்துப்பச்சை கண்ணுக்கு குளிர்ச்சி
3) தினைவிதைத்தவன் தினைஅறுப்பான்

27) பட்டகாலேபடும் கெட்டகுடியே கெடும்
1) பழகப்பழகப்பாலும் புளிக்கும்
2) பனையால் விந்தவனை மாடு ஏறி மிதித்தது போல்
3) பந்திக்கு முந்து படைக்கு பிந்து

28) மீனவன், மின் இணைப்பாளர், கொல்லன் ஆகியோர் பயன்படுத்தும் உபகரணங்களை முறையே காட்டும் விடையை தெரிக.
1) அத்தாங்கு, குறடு, சீவுளி
2) கரைவலை, மின்குள், எண்ணெய்க்கல்
3) கரப்பு, மின்சோதிப்பான், தணலிடுக்கி

29) நிர்மலன் புகைப்படம் ஒன்றை காட்டி பின்வருமாறு கூறினான்.
"இப்படத்தில் இருப்பவர் எனது தந்தையின் ஒரே பிள்ளையாகும்"
அதன்படி புகைப்படத்தில் இருப்பவர்
1) நிர்மலனின் சகோதரன்
2) நிர்மலன்
3) நிர்மலனின் தந்தை

30) தரப்பட்ட தளவடிவங்களைப் பயன்படுத்தி செய்யப்பட்ட திண்மவடிவை தெரிவு செய்க





# வீதிகளில் தேங்கி நிற்கும் வெள்ளம் கவனம் எடுப்பது யார்?

## மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட வீதிகளில் அதாவது காப்பெற் வீதிகளில் மழைநீர் தேங்கி நிற்பதாகவும் இதனால் பொதுமக்கள் பல்வேறுபட்ட நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் இது தொடர்பில் உரியவர்களை நடவடிக்கை எடுக்குமாறு யாழ். ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் எழுவைதீவு இறங்குதுறை புனரமைப்பு, ஊர்காவற்றுறை இறங்குதுறையில் கைவிடப்பட்ட படகுகளினால் கடற்பகுதி மாசுபடுவதாகவும், ஊர்காவற்றுறை கடற்பகுதியில் கைவிடப்பட்டுள்ள நிலைமையில் உள்ள மீன்பிடி படகுகளை அகற்றுவது தொடர்பாகவும், தீவக பிரதான வீதியான பணணை தீவகவீதி புனரமைப்பு, நயினாதீவு பிரதான வீதி, ஊர்காவற்றுறை வேலணை வீதி, ஊர்காவற்றுறை சுருவில் வீதி, புங்குடுதீவு வேலணை தாம்போதியம் கடல்பாதை, ஊரதீவு - இறுபபிட்டி வீதி போன்ற வீதிகளை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை முன்வைத்தார்.

இதற்கு பதிலளித்த வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் மேற்படி விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிததனர்.

மேலும் தரம் 1 மாணவர்களை பாடசாலைகளில் சேர்ப்பதில் முறைகேடுகள் இடம்பெறுவதாகவும் இதுதொடர்பில் உரியகவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதோடு, யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் பற்றியும், சுகாதார தொண்டர்களின் நியமனம் தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது கல்வி அமைசசின் செயலாளர் கூறுகையில் மேற்படி விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி விடயம் தொடர்பில் மாகாண முதலமைச்சருடன் வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவரை ஆலோசிககுமாறு பணிப்புரை விடுத்தார்.

கடற்றொழிலாளர்களுக்கு மானிய முறையில் வழங்கப்படும் மண்எண்ணெய் விநியோகத்தில் ஒழுங்கீனம் நடைபெறுவதாக சுட்டிக்காட்டினார்.

இதற்கு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரி இனி வரும் காலங்களில் இவ்வாறான துஸ்பிரயோகம் நடைபெற மாட்டாது எனவும், இனிமேல் மானிய மணணெண்ணெய்க்கும் பதிலாக மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படுமெனத் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஒரு சிலபத்திரிகைகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டாயக் கருத்தடைகள் நடைபெறுவதாக பிரசுரிக்கப்பட்டமை தொடர்பில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் இங்கு அவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்றனவா என உரிய அதிகாரிகளிடம் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்களம் கிளிநொச்சியில் கட்டாய கருத்தடைகள் நடைபெறவில்லையெனவும், கருத்தடைகள் தாய்மாரின் பூரண சம்மதத்துடன் நடைபெறுவதாகவும் குழந்தைகள் வருடத்திற்கு வருடம் பிறக்கும் போது பிள்ளைகள் போசாக்கு இல்லாமல் இருக்கின்றன. எனவே பிள்ளைகளின் நலனைக் கொண்டும் தாயின் நல்னைக் கொண்டுமே கருத்தடை நடைபெற்றதாகவும். இது தற்காலிக கருத்தடை தேவை யேற்படின் கருத்தடையை இல்லாமல் செய்யலாம் என்றும் சுகாதார அதிகாரி தெரிவித்தார்.

பயன்தருமரங்கள் சட்ட விரோதமானமுறையில் தறிக்கப்படுவதாகவும் இதுதொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்பு விடுத்தார்.

## வாசிப்புமாத போட்டி முடிவுகள்

(முழங்காவில்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பல்லவராயன் கட்டு பொதுநூலகத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

வாசிப்பு

ஆரம்பப் பிரிவு தரம் 2-5

ம.பவசாளி (கிளி.கிராஞ்சி அ.த.க.பாடசாலை), கு.துஷாமினி (கிளி. முழங்காவில் ஆரம்பப் பாடசாலை), ச.நேசன் (கிளி.கரியாலைநாகபடுவான் அ.த.க. பாடசாலை).

பேச்சு

ச.டிலக்ஷி, இ.விதுஷா (கிளி. முழங்காவில் ஆரம்பப் பாடசாலை), சி.தமிழ்விழி (கிளி. வேரவில் இந்து மகாவித்தியாலயம்).

கவிதை

அ.ஜதுசனா (கிளி.கரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலை), ம.மதுசாயினி (கிளி. வேரவில் இந்து மகா வித்தியாலயம்), செ.பவித்திரன் (கிளி. ஜெயபுரம் மகா வித்தியாலயம்).

(தொடரும்..)

# இளைஞர் கழகங்கள் குறித்து விளக்கமளிக்கும் செயலமர்வு

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள பிரதேச மட்ட அதிகாரிகளுக்கு இளைஞர் கழகங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் விசேட செயலமர்வொன்று நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் செந்தில்குமரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி வினோதினி ஸ்ரீமேனன் கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் பே.சுபாகர், தேசிய இளைஞர் கழக சம்மேளன உபதலைவர் எஸ்.விஜிதரன், யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளன தலைவர் எஸ்.லக்சன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ் விளக்கமளிக்கும் விசேட செயலமர்வின் ஆரம்ப உரையினை சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன் ஆற்றுவார்.

எதிர்காலத்தில் இளைஞர் கழகங்கள் வினைத்திறனுடன் இயங்குவதனூடாக மாணவர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் அவர்கள் சார்ந்த சமூகம் அதிக பயனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பாடசாலை இளைஞர் கழகங்களின் பொறுப்பாசிரியர்கள், பிரதேச செயலக கிராம மட்ட உத்தியோகத்தர்களான கிராம சேவகர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , வாழ்வாதார உத்தியோகத்தர்கள் சமூகசேவை உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருடனான சந்திப்பே இடம்பெற வுள்ளது.

அத்துடன் இந் நிகழ்வில் ஒவ்வொரு பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனங்களின் உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதே செயலக எல்லைக்குட்பட்ட சகல இளைஞர் கழகங்களிற்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டிருப்பதுடன் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு பிரதேச இளைஞர் கழக சம்மேளன செயலாளர் ஆர்.நவசக்தி கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமானது தொடர்ச்சியாக பல்வேறு சமூக, கல்வி, அபிவிருத்தி செயற்றிட்டங்களில் ஈடுபட்டு வருவதுடன் கடந்த வருடம் யாழ். மாவட்டத்தின் சிறந்த பிரதேச இளைஞர் கழக சம்மேளனமாக விருது பெற்றமை குறிப்பிடத்தக்கது. (48)

## மக்கள் பார்வைக்கு

வலி.கிழக்குப் பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு அறிக்கை பொதுமக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை வைக்கப்பட்டிருக்கும் என வலி. கிழக்கு பிரதேசசபை, தவிசாளர் அ.உதயகுமார் தெரிவித்தார். பிரதேசசபை கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக இச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை இந்து மன்றம் நடாத்தும் நாவலர் குருபூசைதினம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கலாசாலை வளாகத்தில் உள்ள நாவலரின் திருவுருவச் சிலைக்கான வழிபாட்டினைத் தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டுக் கல்வி மறுமலர்ச்சியில் நாவலரின் வகிபங்கு என்ற பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சி.ரமணன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## "ஐசோன்" வால்நட்சத்திரம் யாழிலிருந்து அவதானிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

"ஐசோன்" எனப் பெயரிடப்பட்ட வால் நட்சத்திரத்தை மாலைவேளையில் இலங்கையின் தென்மேற்கு வான் பரப்பில் காணக்கூடியதாக உள்ளது. இது மிக பிரகாசமான நட்சத்திரமாகத் தென்படுகிறது.

இதனை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை காணலாம் என இலங்கை தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு தெரிவிக்கிறது.

கடந்த 17 ஆம் திகதி முதல் அவதானிக்கக்கூடியதாக இருக்கும். மாலை 6.15 மணிமுதல் 8.45 மணிவரை தென்படுவதாகவும், இதனை யாழ்ப்பாணத்தில் இருந்து பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். (சி)






# கலைமகள் படிப்பக திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

இளவாலை வாலிபர்களின் முயற்சியால் புனரமைக்கப்பட்ட "கலைமகள் படிப்பக" திறப்பு விழா இன்று காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நா.சுகந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் விழாவுக்கு பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தனும் சிறப்பு விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் திரு பா.கஜதீபனும், கௌரவ விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி பேரானந்தராஜாவும், இலங்கை மின்சார சபையின் மின் அத்தியட்சகர் சி.குமார லிங்கமும், வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் வே.சண்முகநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் ஆசியுரைகளை இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.இராம.பாலச்சந்திர குருக்கள் மற்றும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வணபிதா. யோ.யேசுதாஸ் அடிகளாரும் வழங்குவார்கள்.

முன்னதாக விருந்தினர்கள் இளவாலை ஆதார வைத்தியசாலையிலிருந்து பாண்ட் வாத்தியங்கள் சகிதம் அழைத்து வரப்பட்டு நாவலடி சிவஞான வைரவர் ஆலயத்தில் சிறப்பு பூஜை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளது. பிரதேச சிறார்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (48)

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................................

முகவரி :- ..............................................

பிறந்த ஆண்டு :- ..............................................


கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# தேர்தலை சீர்குலைக்க பயங்கரவாதிகள் திட்டம்

## மன்மோகன் சிங் எச்சரிக்கை



(புதுடில்லி)

நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலை சீர்குலைக்க பயங்கரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் எச்சரித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற பொலிஸ் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் மன்மோகன் சிங், சில மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலையும், அடுத்த ஆண்டு தொடக்கத்தில நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலையும் சீர்குலைக்க பயங்கரவாத இயக்கங்கள் திட்டமிட்டுள்ளன. எனவே, பாதுகாப்பு அமைப்புகள் அதிக எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசியமாகிறது என்றார்.

முசாபர்நகர்க் கலவரம் பல உயிர்களை பலியாக்கியது, ஆயிரக்கணக்கானோரை இடம் பெயர வைத்தது. இதுபோன்ற உள்ளூர் கலவரங்கள் பெரிய அளவில் வெடிக்காமல் இருக்க சட்டம் ஒழுங்கு அமைப்புகள் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டில், சில மாநிலங்கள் கலவரத்தால் பெரிய பாதிப்புகளை சந்தித்தன. இது போன்ற சம்பவங்கள் தலைதூககும் போது, பொலிஸ் துரிதமாக செயல்பட்டு, பிரச்சினை ஆரம்பிக்கும் போதே உரிய நடவடிக்கை எடுத்து, பொதுமக்களை பயத்தில் இருந்து நீக்கி, பாதுகாக்க வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

உலகச் செய்திகள்

# சூரியனுக்கு அருகில் வரும் "ஐசோன்" வால் நட்சத்திரம்



சூரிய குடும்பத்தில் முதல் முதலாக நுழைந்து காட்சியளிக்கும் ஐசான் வால் நட்சத்திரம் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு ஊர்ட் மேகப் பகுதியிலிருந்து பாதை மாறி பயணிக்கத் தொடங்கியது. இதுவரை வந்த வால் நட்சத்திரங்களிலேயே மிக நீண்ட வால் பகுதியைக் கொண்டு பிரகாசிக்கும் நட்சத்திரம் இது. நவ. 1ஆம் திகதியிலிருந்து வந்து கொண்டிருக்கும் இந்த வால் நட்சத்திரம் நவ. 28ஆம் திகதி சூரியனுக்கு மிக அருகில் 1.2 மில்லியன் கி.மீ. தொலைவில் செல்கிறது.

இந்த ஜசான் வால் நட்சத்திரம் எதிர்வரும். 28, 29 ஆம் திகதிகளில் எளிதாகப் பார்க்கக்கூடிய விதத்தில் காலை, மாலை இரு வேளைகளிலும் வானத்தை அலங்கரிக்கும். இது, சூரியனின் சக்தி வாய்ந்த கதிர் வீச்சால் சுருங்கி விடாமலிருந்தால் டிசம்பர் மாதம் முழுவதும் தனது பயணத்தைத் தொடரும்.

இதை நேரடியாகவோ தொலைநோக்கி மூலமாகவோ பார்க்கக்கூடாது. கைகளாலோ அட்டையிலோ சூரியனை மறைத்துவிட்டோ அல்லது ஒரு கட்டடத்தின் பின்புறம் சூரியன் இருக்கும்படி நின்று கொண்டு பார்க்கலாம். இதனால் யாருக்கும் ஆபத்து இல்லை. மாறாக சூரிய குடும்பம் மற்றும் புவியில் உயிர்களின் தோற்றம் பற்றிய உண்மைகளை ஆய்வின் மூலம் கண்டறியலாம் என ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.




லெபனான் நாட்டின் 70ஆவது சுதந்திர தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. தலைநகர் பெய்ரூட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இராணுவ மரியாதையை ஏற்கும் அதிபர் மிச்செல் சுலெய்மான்.

# எரிபொருள் குழாய் வெடிவிபத்து பலியானோர் 44ஆக உயர்வு

## சீனாவில் சம்பவம்

(சீனா)

சீனாவில் உள்ள குயிங்டோவோ நகருக்கு அருகே பெற்றோலிய எரிபொருள் சேமிப்பு கிடங்குகள் இருக்கின்றன. இவற்றுக்கு க்ச்சா எண்ணெய் கொண்டு செல்ல பூமிக்கு அடியில் குழாய்கள் பதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த குழாயில் கசிவு ஏற்பட்டதால் அதை பழுதுபார்க்கும் பணியில் நேற்று காலை 10.30 மணி அளவில் தொழிலாளர்கள் ஈடுபட்டார்கள். அப்போது எதிர்பாராதவிதமாக தீப்பிடித்து எரிபொருள் குழாய்கள் பயங்கர சத்ததுடன் வெடித்தன. இதனால் அந்தப்பகுதியில் பெரும் பள்ளம் ஏற்பட்டது. அருகில் இருந்த சாலைகள் கடுமையாக சேதம் அடைந்தன. இந்த சிதறல்



களால் கார் கண்ணாடிகள் நொருங்கின. இந்த விபத்தில் பலி எண்ணிக்கை தற்போது 44 ஆக உயர்ந்துள்ளது.பலத்த காயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தற்போது அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றது. மீட்பு பணியில் உள்ளூர் பொலிஸாரும் தீ அணைப்பு வீரர்களும் ஈடுப்பட்டுவருகின்றனர்.


# ஒஸாமாவை பிடிப்பதற்கு உதவிய மருத்துவர் மீது கொலை வழக்கு



பாகிஸ்தானில் பாரா அருகேயுள்ள பா பகுதியைச் சேர்ந்த நஷீபா குல் என்பவரது மகனை தவறான அறுவை சிகிச்சை செய்து கொலை செய்ததாக மருத்துவர் ஷகீல் அப்ரிடி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அல்-கொய்தா பயங்கரவாதி பின்லேடன்னைப் பிடிக்க உதவியவர் இந்த மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது, மருத்துவர் ஷகீல் அப்ரிடி தேசத் துரோக வழக்கில் கைது செய்ய்ப்பட்டு பெஷாவர் சிறையில் உள்ளதால் இந்த வழக்கு மீதான விசாரணை டிசம்பர் 20-ஆம் திகதி சிறையிலேயே நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான பிடியாணை பெஷாவர் சிறை கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நஷீபா அளித்த புகாரில், 2007-ஆம் ஆண்டு ஷகீல் அப்ரிடி செய்த தவறான அறுவைச் சிகிச்சை காரணமாக என் மகன் இறந்துவிட்டான். அறுவைச் சிகிச்சை செய்வதற்கான மருத்துவத் தகுதி அவருக்கு இல்லை. அதையும் மீறி அவர் சிகிச்சை அளித்ததால்தான் என் மகன் இறந்தான். எனவே, அவருக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# விண்வெளிக்கு சுற்றுலா செல்ல ஒரு இலட்சம் டொலர் நிர்ணயம்



விண்வெளிக்கு சுற்றுலாப் பயண கட்டணமாக, 1 இலட்சம் அமெரிக்க டொலர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடான, நெதர்லாந்தில் உள்ள, ஸ்பேஸ் எக்ஸ்பெடிஷன் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் வர்த்தக விண்கலம் தயாரிக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இந்நிறுவனத்தின் நிறுவுனரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான மைக்கேல் மோல் இது குறித்து கூறியதாவது: விண்வெளி சுற்றுலா திட்டத்திற்காக தினமும், நான்கு விண்கலங்கள் விண்வெளிக்கு சென்று வரவுள்ளன. விண்வெளிக்கு சுற்றுலா செல்வதற்கு விரும்புவோர் டிக்கெட் விலையில், பாதியைக் கொடுத்து, முன்பதிவு செய்ய வேண்டும்.

ஒரு டிக்கெட்டின் விலை, 1 இலட்சம் அமெரிக்க டொலர். இரண்டு ஆண்டுகளில் 250 டிக்கெட்டுக்கள் விற்பனை செயயப்பட்டுள்ளன.டிக்கெட்டிற்கான முழுப் பணத்தை செலுத்தினால், முதல், 100 பயணிகளில் இடம் பெற முடியும்.இந்த விண்கலத்தில், நான்கு நிமிடத்தில் விண்வெளிக்கு சென்று விடலாம் ஒரு பைலட்டுடன் ஒரு பயணி செல்வதால், துணை பைலட்டாகும் வாய்ப்பு கிடைக்கும்.விண்வெளியில் இருந்து, பூமியின் அழகை இரசித்துவிட்டு ஒரு மணி நேரத்திற்குள் பூமிக்கு திரும்பி விடலாம்.அடுத்தாண்டு இறுதிக்குள் இந்த விண்கலத்திற்கு, வர்த்தக பயன்பாட்டிற்கான அனுமதியை, அமெரிக்க விமானப் போக்குவ்ரத்து கழக நிர்வாகம் வழங்கும். இவ்வாறு, மைக்கேல் மோல் கூறியுள்ளார். அடுத்த ஆண்டு முதல், விண்வெளி சுற்றுலா பயணம் தொடங்குகிறது. முதல் விண்கலத்தில் டுபாய் செல்வந்தர்களை அழைத்து செல்வதற்கான முயற்சியில் இந்த நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

# மீனவர்களை மீட்கக் கோரி பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்



(சென்னை)

இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க கோரி, முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு மீண்டும் க்டிதம் எழுதியுள்ளார். கடந்த வியாழக்கிழமை வழக்கமான எல்லையில் மீன் பிடித்து கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை படையினர் சிறைப்பிடித்துச் சென்று அட்டூழியத்தில் ஈடுபட்டதாகவும், மீனவர் தினத்தன்று இந்த அட்டூழியம் அரங்கேற்றப்பட்டது மிகவும் வேதனைக்குரியது என்றும் கடிதத்தில் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார். சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் தடுக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

# வாக்குறுதியை நிறைவேற்ற காங்கிரஸ் எப்போதும் தவறாது

(போபால்)


மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் காங்கிரஸ் எப்போதுமே மெத்தனம் காட்டுவது இல்லை. உணவு பாதுகாப்பு சட்டம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் உள்ளிட்ட பல முக்கியமான சட்டங்களை நிறைவேற்றியுள்ளோம் என காங். துணை தலைவர் ராகுல் கூறினார்.

பாகல்காட்டில் நேற்று முன்தினம் நடந்த பிரசார கூட்டத்தில் பேசியபோது. காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு மக்களுக்கு என்ன வாக்குறுதி அளித்ததோ அவை அனைத்தையும் நிறைவேற்றி வருகிறது.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் காங். எப்போதுமே மெத்தனம் காட்டியது இல்லை.முக்கிய சட்டங்கள்உணவு பாதுகாப்பு சட்டம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகிய சட்டங்களை நிறைவேற்றுவதாக ஏற்கனவே வாக்குறுதி அளித்திருந்தோம். அவற்றை நிறைவேற்றியுள்ளோம் என்றார்.

# பனைசார் சமூகத்தினரின் எதிர்காலம் குறித்து செயற்பாடுகளை முன்னிலைப்படுத்த வேண்டும்

## பனை அபிவிருத்திச் சபையிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



பனைசார்ந்த சமூகத்தினரின் வாழ்வாதாரத்தையும் அவர்களது எதிர்கால நல்வாழ்க்கையையும் முன்னிலைப்படுத்தியதாக பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள பனை அபிவிருத்தி சபையின் செயற்பாடுகள் மற்றும் எதிரகால திட்டங்கள் தொடர்பிலான விரிவான கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உற்பத்தியின் முடிவுப் பொருட்கள் சிறந்த தரத்துடன் கூடியதாக சர்வதேச சந்தைவாய்ப்புக்களுக்கு ஏற்ப, நவீன தொழில்நுட்பங்களுக்கு உட்பட்ட வகையில் தயாரிக்கப்படுவதற்கு ஊக்கமளிக்கப்படல் வேண்டும்.

இதற்கான பயிற்சிநெறிகள் பனைவளம் கொண்ட மாவட்டங்களில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

கூடிய வரையில் உற்பத்திகள் அனைத்தையும் சபை தம்வசம் கொள்ளாது தொழில் முயற்சியாளர்களுக்கு உரிய வாய்ப்புக்களையும், வசதிகளையும் வழங்கி அவர்கள் மூலம் உற்பத்திகளை பெற்று அவற்றை சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

உணவு வகைகளின் தயாரிப்பின் போது தரம், சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணப்படல் அவசியமாகும்.

பனை அபிவிருத்திச் சபையானது தொடர்ந்து திறைசேரியை மாத்திரம் நம்பியிராமல் சொந்த வருமானம் கொண்டு இயங்கக் கூடிய வகையில் தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்க வேண்டும்.

அத்துடன் பனை மரங்களை தறிப்பது தொடர்பில் விரைவில் உயர்மட்ட மகாநாடுகள் பனைவளம் கொண்ட மாவட்டங்கள் தோறும் நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம், பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், பொதுமுகாமையாளர், கணக்காளர், பதவிநிலை முகாமையாளர்கள், நிர்வாக அதிகாரி, பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அமைச்சின் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது யாழ்ப்பாணம் காரைநகரில் அமையப்பெறவுள்ள பனைசார்ந்த கைத்தொழிற்பேட்டையில் பல்துறை உற்பத்திகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

கைவினை பயிற்சி, கூழ் தயாரிப்பு, உணவு உற்பத்தி, தும்பு உற்பத்தி, தச்சுத் தொழில் மற்றும் மென்பான உற்பத்தி போன்ற செயற்பாடுகள் இக்கைத்தொழிற்பேட்டையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

திக்கம் வடிசாலையின் தற்போதைய உற்பத்திகள் நாட்டின் ஏனைய அதுசார்ந்த உற்பத்திகளுடன் போட்டியிட இயலாத நிலை தோன்றிருப்பதன் காரணமாக நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட தொழிற்சாலையாக இதை மாற்றியமைப்பது மற்றும் எதனோல், மதுசாரம், வைன், மற்றும் விநாகிரி போன்றவற்றின் தயாரிப்பின் அவசியம் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

அதேநேரம் கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபை கட்டடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் அதனை பனைசார் உற்பத்திப் பொருட்களின் காட்சியகமாகவும், சந்தை வசதிகளை உறுதிப்படுத்தும் வகையில் பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட ஏற்றுமதியாளர்கள், கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் போன்றோர் சந்திக்கக்கூடிய நிலையமாகவும், சகல வசதிகளையும் கொண்ட பயிற்சிநிலையமாகவும் பயன்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையின் மூலத்ன அபிவிருத்தி நிதிகளை கைவினை பயிற்சி போன்ற வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பனம் பாணி, பழம், தும்பு, ஓலை, கிழங்கு போன்ற அடிப்படையிலான ஆரம்பநிலை அபிவிருத்தி பணிகளுக்காக பயன்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

## கவிஞர்....

அவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் தான் ஜெயபாலனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசியலைக் கடந்து இலக்கியவாதி என்ற அடிப்படையில் ஜெயபாலனின் அறிமுகம் தனக்கு உள்ளதாகவும் அவர் எந்தவித குற்றமும் செய்யவில்லை எனவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் உறவு குறித்தும் நல்லிணக்கம் குறித்தும் கரிசனையுடன் ஜெயபாலன் செயற்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஜெயபாலனை வெளிநாட்டவர் என கருதிவிட முடியாது, புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக செயற்பட்டவர் என அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையை சீர்குலைக்கும் விதத்தில் ஜெயபாலன் செயற்பட்டதாக கூறிய கருத்தை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மறுத்தார்.

இதேவேளை கைது செய்யப்பட்டுள்ள ஜெயபாலன் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையில் ஒப்படைப்பதற்காக வவுனியாவிலிருந்து கொழும்புக்கு அழைத்து வரப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.எஸ்.பி அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்ட கவிஞர் ஜெயபாலன் பொரளை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அதிகாரத்தை...

நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் நீதித்துறையின் சுதந்திரம் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியிருப்பதாகவும் அதனால் மக்கள் நீதிமன்றத்தின் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கை தகர்க்கப்படுவதாகவும் லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

எனவே, சந்தேகநபர் ஒருவருக்கு எதிரான வழக்கை வாபஸ்பெற வேண்டுமானால் சட்டமா அதிபர் அதற்கான காரணங்களை பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக நீதியமைச்சின் கீழ் இயங்கிவந்த சட்டமா அதிபர் திணைக்களம், தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டமை தொடர்பிலும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விசனம் வெளியிட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது விடுக்கப்படும் அரசியல் அழுத்தங்கள் காரணமாகவே தற்போதைய நிலைமை உள்ளதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதி லால் விஜேநாயக்க மேலும் தெரிவித்தார்.

## பிரித்தானியாவிற்கு...

கண்டிப்பாக இலங்கை கேள்வி எழுப்பும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இளம்...

குறித்த இவ் இளம் பெண் கடந்த 4 வருடங்களிற்கு முன் திருமணம் முடித்த போதும் திருமணம் முடித்து 3 மாதங்களிலேயே கணவனை இழந்தமை காரணமாக மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டார்.

ஆறு மாதகாலம் தெல்லிப்பழை மனநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று கடந்த சில மாதங்களிற்கு முன்னரேயே வீடு திரும்பியிருந்தார்.

இந்நிலையிலேயே குறித்த இளம் பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சடலத்தை நேற்றுக் காலை மீட்ட மானிப்பாய் பொலிஸார் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சமர்ப்பித்த நிலையில் பிரேத பரிசோதனையை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (48,பா)

# மதுப்பிரியர் தாக்குதல்; இருவர் படுகாயம்

(வடமராட்சி)

நெல்லியடி சாமியல் அரசடிப் பகுதியில் நின்ற இருவர் மதுபோதையில் வந்தவர்களின் தாக்குதலில் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கரணவாய், அண்ணாசிலையடியைச் சேர்ந்த தி.திபேசன் (வயது - 34), அளவெட்டி, யாக்கருவைச் சேர்ந்த எஸ்.அமல் (வயது - 26) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

சம்பவ இடத்திற்கு வந்த நெல்லியடிப் பொலிஸார் படுகாயமடைந்தவர்களை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். வடமராட்சிப் பகுதியில் அண்மைக்காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (116,சி)

## உணவு...

26 ரூபா வரையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தவிர ரின் மீன், பாசிப்பயிறு, கச்சான், கடலை, கருவாடு, மாசி ஆகிய உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளன. ஃபாம் எண்ணெய், வெங்காயம், யோகட், பட்டர், கொத்தமல்லி, கடுகு, சீரகம், மஞ்சள் மற்றும் தோடம்பழம் ஆகியவற்றுக்கான இறக்குமதி தீர்வையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படுகின்ற உணவு பொருட்கள்மீதான செஸ் வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மா, சீஸ், மரக்கறி வகைகள், அப்பிள் உள்ளிட்ட பழவகை இறக்குமதிக்கான செஸ் வரியும் உயர்த்தப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட சொக்லட், இனிப்பு வகைகள், சொசேஜஸ், வினாகிரி, சோஸ், சூப், ஐஸ் கிறீம், கோபி, மிளகு, வனிலா போன்ற உணவு பொருட்கள்மீதான செஸ் வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## சிவிலுடையில்...

வீடு என்பவற்றையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இதன்போது சத்தம் கேட்டு அவ்விடத்திற்கு வந்த அயல்வீட்டு பெண் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் கண்ணன் சிவலக்சுமி (வயது - 36), கண்ணன் தனுஷ்ரிகா (வயது - 15), அயலவரான சுமன் புஸ்பராணி (வயது - 37) என்ற பெண்களே படுகாயமடைந்து நேற்றிரவு 7.00 மணியளவில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் சுமார் ஒருமணிநேரம் வரை நீடித்துள்ளது. இச்சம்பவத்தில் காயமடைந்த தனுஷ்ரிகா இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பொலிஸார் தேடிவந்த சந்தேகநபர் அவ்வீட்டிலிருந்து கைதுசெய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (12,116)

## இலங்கைக்கு...

ஏனைய துப்பாக்கிகளையும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய பிரித்தானிய அரசாங்கம் அனுமதியளித்தமைக்கான காரணத்தை தெரியப்படுத்த வேண்டும் என ஆயுத ஏற்றுமதி கட்டுப்பாட்டுக் குழுவின் தலைவர் சேர். ஜோன். ஸ்டான்லி கேள்வி எழும்பியுள்ளார்.

பிரித்தானியா எட்டு மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட் பெறுமதியான ஆயுதங்களை இலங்கைக்கு விற்பனை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த அனைத்து ஆயுதங்களும் கடற் கொள்ளை நடவடிக்கைகளை தடுப்பதற்காக பயன்படுத்தப்பட்டது என்ற வாதத்தை ஏற்க முடியாது என எதிர்க்கட்சிகளும் குற்றம் சுமத்தியுள்ளன.

ஆயுத விற்பனை தொடர்பில் பிரதமரும் அமைச்சர்களும் விளக்கம் அளிக்க வேண்டுமென சேர் ஜோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும், இலங்கை மீதான யுத்தக் குற்றச் செயல்கள் குறித்த சர்வதேச விசாரணைகளுக்காக பிரதமர் விடுத்த கோரிக்கைக்கு பூரண ஆதரவளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## ஜெனிவா...

இந்தியாவும் கூட ஆதரவு வழங்கியிருந்தது.

தற்போது புதுடில்லியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசியல், தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் செல்வாக்குச் செலுத்தக்கூடிய நிலையில் இருப்பதும், பா.ஜ.க. தலையிடக்கூடிய நிலையில் உள்ளதும், நிலைமையை மேலும் மோசமாக்கும் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க, பிரித்தானிய, இந்திய கூட்டணி இராஜதந்திர முனையில், கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கொமன்வெல்த் அமைப்பின் இரண்டு முக்கிய நாடுகளான, பிரித்தானியாவும், இந்தியாவும், இலங்கைக்கு எதிரான நகர்வில் இறங்கும் நிலையில், ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் கொமன்வெல்த் நாடுகளுக்கும், இலங்கைக்கு எதிரான திட்டத்தில் இணைந்து கொள்ள கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்படலாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், 2014-2016 காலப்பகுதியில் ஏழு கொமன்வெல்த் நாடுகள் அங்கம் வகிக்கும்.

கென்யா, மாலைதீவு, பாகிஸ்தான், நமீபியா, இந்தியா, தென்னாபிரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளே அவையாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள கொமன்வெல்த் நாடுகள் மூலம், இலங்கைக்கு எதிரான பொறுப்புக்கூறல் தொடர்பாக அனைத்துலக விசாரணைக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களும் தெரிவித்துள்ளதாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரசியலமைப்பை மீறும் வகையில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிப்பு

## பொருளாதார வீழ்ச்சியும் ஏற்படும் என்கிறார் ரணில்



(கொழும்பு)

அரசாங்கம் அரசியலமைப்பை மீறும் வகையில் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கம் உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களை பன்மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் நாடு கடன் பொறியில் சிக்கிவிட்டது. இவற்றை ஈடு செய்ய அரசாங்கம் வர்த்தக கடன்களை பெற்று விடுவதனால் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட உரையை பகிஷ்கரித்ததற்கான காரணத்தையும் விளக்கினார்.

வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முன்னர் நடு வருட இறை அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்பது அரசியலமைப்பிலுள்ள சட்ட ஏற்பாடாகும். அரசாங்கம் உரிய நேரத்தில் 2013 இன் நடு வருட இறை அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை.

இப்போதுதான் இந்த அறிக்கையை அரசாங்கம் தந்துள்ளது. இதிலும் யூன் வரையான 6 மாத விபரங்கள் இல்லை. ஏப்ரல மாதம் வரையுமே விபரங்கள் உள்ளன. இதன் மூலம் அரசாங்கம அரசியலமைப்பை மீறியுள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு எந்த விதமான நிவாரணத்தையும் அரசாங்கம் வழங்கவில்லை. அடுத்த வருடம் மக்கள் மீது இன்னும் பல சுமைகள் ஏற்றப்படும்.

பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டினால் உண்டான செலவுகளை மக்களே செலுத்த வேண்டிவரும். அரசாங்கம் உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களை பன்மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் நாடு கடன் பொறியில் சிக்கிவிட்டது.

அரசாங்கம் வர்த்தக கடன்களை பெற்று விடுவதனால் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சி ஏற்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# புலமைப் பரிசில் பரீட்சை கைவிடக் கோரிக்கை

(கொழும்பு)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகளை கைவிடுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக இடம் பெற்ற கலந்துரையாடல்களில் கலந்துக் கொண்ட, கல்வி நிபுணர்கள் அனைவரும், புலமைப் பரிசில் பரீட்சைகளை நடத்தாது கைவிடுமாறு கோரியதாக கூறப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீபா மஹானாம ஹேவா இதனைத் தெரிவித்துள்ளார்.



இந்த நிலையில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்காக, மாற்று திட்டம் ஒன்று குறித்த தமது நிலைப்பாட்டை விரைவில் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்திலிருந்து தப்பியோரை கைதுசெய்வதற்கு நடவடிக்கை

இராணுவ சேவையில் இருந்து தப்பிச் சென்ற சுமார் 20 ஆயிரம் சிப்பாய்களை கைது செய்வதற்கான நடவடிக்கை தொடர்வதாக இராணுவம் அறிவித்துள்ளது

இவர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்புக்களை இராணுவ பொலிஸார் நடைமுறைப்படுத்தியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களின் பட்டியலொன்று பொலிஸ் திணைக்களத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற சிப்பாய்கள் சட்டபூர்வமாக சேவையில் இருந்து விலகுவதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசத்தின் போது சுமார் 30 ஆயிரம் பேர் விண்ப்பித்திருந்ததாக இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

தப்பிச் சென்ற இராணுவ சிப்பாய்களில் ஒரு சிலர் மாத்திரமே குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டுள்ளதாகவும் பிரிகேடியர் ருவன் வனிகசூரிய மேலும் தெரிவித்துள்ளார்

# இவ்வருடம் இலங்கையில் 32 ஆயிரம் வாகன விபத்துக்கள்

## மூவாயிரம் பேரின் உயிர்பறிபோனது

நடப்பாண்டில் இதுவரை சுமார் 32 ஆயிரம் வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அதில் மூவாயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக வாகனச் சாரதிகள் போக்குவரத்து வீதி ஒழுங்குகளை முறையாக பின்பற்றாமையினாலேயே விபத்துகள் தற்போது அதிகரித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், போக்குவரத்தில் ஈடுபடுகின்ற சாரதிகள் பல நூற்றுக்கணக்கான உயிர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்ற உணர்வுடன் வாகனங்களை செலுத்த வேண்டும். அத்துடன் வாகனங்களை செலுத்தும போது பாதையின் தன்மை, காலநிலை மற்றும் வேகம் போன்ற காரணிகள் குறித்து நன்குணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

# இலங்கைத் தமிழ் அகதிகளே திருப்பி அனுப்பப்படுகின்றனர்

படகு மூலம் செல்லும் சட்ட விரோத அகதிகளை உடனடியாக நாடு கடத்தும் அவுஸ்ரேலியாவின் கொள்கை, இலங்கை தமிழ் அகதிகளை மாத்திரமே இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் தாதியாக கடமையாற்றும் ஒருவர், த கார்டியன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் தீவில் உள்ள அகதிகள் மிகவும் மோசமான நிலையில் வாழ்கின்றனர். அங்கு போதிய இடவசதிகள் இல்லை.

இதற்கிடையில் புதிதாக வரும் அகதிகளை ஓரிரு வாரங்களுக்குள் மீண்டும் நாடுகடத்தும் கொள்கையை அவுஸ்ரேலிய அரசாங்கம் கடைபிடிக்கிறது.

எனினும் இது இலங்கை அகதிகளை மாத்திரமே இலக்கு வைத்து நடத்தப்படுவதாக குறித்த தாதி தெரிவித்துள்ளார்.

ஏனைய அகதிகள் யாரும் அவ்வாறு நாடு கடத்துலுக்கு உட்படுத்தப்படுவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து 47 நாட்கள் பயணம் மேற்கொண்டு வருகின்ற தமிழ் அகதிகள், இவ்வாறு உடனடியாக திருப்பி அனுப்பப்படுவது, நியாயமற்ற செயல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் உலாவரும் ஐந்தரை இலட்சம் குற்றவாளிகள்

குற்றவாளிகளின் பட்டியலில சேர்க்கப்பட்ட மற்றும் சேர்க்கப்படாதவர்கள் என இலங்கையில் 5 லட்சத்து 55 ஆயிரத்து 284 குற்றவாளிகள் இருப்பதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

43 ஆயிரத்து 193 பேர் கடுமையான குற்றவாளிகள் (ஐ.ஆர்.சி) பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் 869 பெண்கள் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றவாளிகளின் பலர் குறைந்தது இரண்டு முறை தண்டனை பெற்றவர்கள். இவர்களில் 3 லட்சத்து 22 ஆயிரத்து 488 பேர் ஆண் குற்றவாலிகள். 20 ஆயிரத்து 480 பேர் பெண் குற்றவாளிகள்.

அதேவேளை குற்றவாளிகளில் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 441 பேரின் கைரேகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவரகளில் 12 ஆயிரத்து 813 பேர் பெண்கள் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

# அமைச்சரானார் சந்திரசேன



பிரதி பொருளாதார அமைச்சர் எஸ்.எம் சந்திரசேன அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

விசேட வேலைத்திட்டங்கள் அமைசசராகவே அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் சிரேஷ்ட அமைச்சர்கள் அடங்கலாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் 57 பேரும், பிரதியமைச்சர்கள் 38 பேரும் செயற்றிட்ட அமைச்சர்கள் இருவரும் அங்கம வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மனித உரிமை மீறல்கள் குறித்து நேரடியாக கூறவில்லை சீனா

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சீனா நேரடியாக எதனையும் குறிப்பிடவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென சீனா கோரிக்கை விடுத்துள்ளதாக அண்மையில் ஊடகங்களில் தகவல் வெளிவந்திருந்தது.

எனினும், சீனா இவ்வாறு எவ்விதமான நேரடிக் கோரிக்கைகளையும் விடுக்கவில்லை என வெளிவிவகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளா அண்மையில் வெளியிட்ட கருத்தின் ஒரு பகுதி மட்டும் வெளியில் எடுக்கப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. சீன வெளிவிவகார அமைச்சு இலங்கைக்கு எதிராக எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

சீனா எல்லாசந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# வானொலி, தொலைக்காட்சிகளுக்கு மீளவும் அனுமதிப்பத்திரம் அமுல்

(கொழும்பு)

வானொலி மற்றும் தொலைக் காட்சிகளுக்கு மீண்டும் அனுமதிப்பத்திர நடைமுறை அமுல்படுத்தப்பட உள்ளது.

கடந்த காலங்களில் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டது. இந்தக் கட்டண முறைமையை மீளவும் அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எவ்வளவு தொகை அறவிடப்படும் என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

பிரதேச சபைகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இவ்வாறு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாய்ந்தது மின்சாரம் மாண்டன யானைகள்



அம்பாந்தோட்டை - கோன்நோருவ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி நான்கு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

பயிர்களைப் பாதுகாக்க போடப்பட்டிருந்த மின்சார வயர்களில் சிக்கியே நேற்றுக் காலை இவை பலியானதாக தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கம்பாந்தோட்டை பொலிஸார் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.